# உதயன்



23

www.onlineuthayan.com

**26:** பக்கங்கள் சுடர் 27 கதிர் 275 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 11 திங்கட்கிழமை (27/08/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00


## இலங்கையில் அரசுக்கெதிராகப் பரவலடையும்

# ஆர்ப்பாட்டங்களுக்கு காரணம் மேற்குலகமே

### புலம்புகிறது வெளிவிவகார அமைச்சு

கொழும்பு, ஓகஸ்ட்.27

அரசுக்கு எதிராக உள்நாட்டில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப் பட்டுவரும் ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் பலம்பொருந்திய இரு மேற்குலக நாடுகளும், சில சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங் களும் இயங்கிவருகின்றன என்று அரச புலனாய்வுப் பிரிவுக்கு இரகசி யத் தகவல் கிடைத்துள்ளது என அறியமுடிகின்றது.

இதனையடுத்து, இந்த விடயம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது என்றும், அது தொடர்பிலான உள் ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன என்றும் தெரியவருகிறது.

நாட்டில் அண்மைக்காலமாக அர சுக்கு எதிராகத் தொடர் போராட் டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன. மீனவர்கள், விவசாயிகள், மாணவ அமைப்புகள், பல்கலைக் கழக விரிவுரையாளர் சங்கம், எதிர்க் கட்சிகள் என அனைத்துத் தரப்பும் அரசுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளன.

இவ்வாறு உள்நாட்டில் இடம் பெறும் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங் களுக்குத் தேவையான நிதி உள் ளிட்ட இதர வசதிகளை வழங்கி, அவற்றின் பின்னணியில் இரு மேற் குலக நாடுகளும், சில அரசசார் பற்ற நிறுவனங்களும் செயற்பட்டு வருவதாகவே அரச புலனாய்வுப் பிரிவுக்கு தகவல் கிடைத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான அரச எதிர்ப்பு ஆர்ப் பாட்டங்களை முன்னெடுத்து ஆட்சி யைக் கவிழ்ப்பதற்கான சதி முயற்சி கள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்ற விடயத்திலும் அரசு தற்போது கவனம் செலுத்திவருகின்றது.

அதேவேளை, புலனாய்வுத் துறைக்குக் கிடைத்துள்ள தகவல்

பார்க்க பக்கம் 4

## ஒரு எம்.பியை இழந்தது வன்னி

கொழும்பு, ஓக.27

வன்னித் தேர்தல் மாவட் டத்திலிருந்து தெரிவுசெய் யப்படும் நாடாளுமன்ற உறுப் பினர்களின் எண்ணிக்கை ஆறில் இருந்து ஐந்தாகக் குறைக்கப்படுகின்றது. 2011 வாக்காளர் பதிவை அடிப்ப டையாகக் கொண்டு இந்த முடிவு எட்டப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் அலு வலகம் அறிவித்துள்ளது. அத் துடன் மொனராகலை மாவட் டத்திற்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மேலும் ஒன்றினால் அதிகரிக் கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணையா ளரினால் மேற்கொள்ளப் பட்ட புதிய மீளாய்வுக்கி ணங்க இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாவட்டத்தி லிருந்தும் தெரிவு செய்யப் படும் நாடாளுமன்ற உறுப் பினர்களின் எண்ணிக்கை மாவட்டங்களின் வாக்காளர் எண்ணிக்கைக்கு ஏற்ப தேர் தல்கள் ஆணையாளரினால் வருடாந்தம் தீர்மானிக்கப்

பார்க்க பக்கம் 4

## கொழும்பு மருத்துவபீடமும் செயலிழக்கும்?

கொழும்பு, ஓக.27

கொழும்பு பல்கலைக் கழகத்தின் மருத்துவபீட விரிவுரையாளர்களும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ள னர்.

நாட்டிலுள்ள அனைத் துப் பல்கலைக்கழகங்களி னதும் விரிவுரையாளர்கள் மேற் கொண்டுவரும் பணிப் புறக் கணிப்புக்கு ஆதரவு தெரிவிக் கும் வகையில் தாமும் புறக் கணிப்பில் ஈடுபடவுள்ளதா கவும் இது தொடர்பில், மருத் துவ பீட விரிவுரையாளர்க ளுடன் இன்று கலந்துரை யாடி இறுதிமுடிவு எட்டப் படும் எனவும் கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையா ளர்கள் தெரிவித்துள்ளனர்.(10)

## மு.காவுடன் கூட்டாட்சிக்குத் தயார்

### மீண்டும் அழைக்கிறார் சம்பந்தன்

கொழும்பு, ஓக.27

"கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து ஆட்சி அமைக்க நாம் தயாராக இருக்கின் றோம். தாராளமாக விட்டுக் கொடுத்து செயற்படுவதற் கும் நாம் தயாராக உள் ளோம். நீதிக்காகத் துணிவு டன் போராடும் நாம் எவருக்கும் அநீதி இழைக்க மாட்டோம்."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோண மலை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித் தார்.

திருகோணமலை - பெரிய குளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை நடை பெற்ற கூட்டமைப்



பார்க்க பக்கம் 4

## வடக்கு - கிழக்கில்

## இராணுவ வீடமைப்புக்கு சீனா 100 மில். டொலர்

கொழும்பு, ஓக.27

வடக்கு, கிழக்கில் இலங்கை இராணுவத்தி னருக்கு வீடமைப்பதற்கு என சீனா 100 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்கி யுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

பாதுகாப்பு அமைச்சி னால் மேற்கொள்ளப் படும், இராணுவ நலன் புரித் திட்டங்களுக்கென இந்த நிதியுதவி வழங்கப் பட்டுள்ளதாகவும் அவை போரால் பாதிக்கப்பட்ட இராணுவத்தினரின் குடும் பங்களுக்கு பயன்படுத்தப் படவுள்ளதாகவும் அறிய வருகிறது.

சீனாவின் இந்த நிதியைப் பயன்படுத்தி வடக்கு, கிழக்கில் உள்ள இரா ணுவ படைமுகாம்களில் இராணுவத்தினருக்கு வதிவிட மற்றும் உட்கட் டமைப்பு வசதிகளை மேம்படுத்திக் கொடுக்க பாதுகாப்பு அமைச்சு திட் டமிட்டுள்ளதாக தெரிகி றது.

அதேவேளை, கொழும் பில் பாதுகாப்பு சேவை கள் கல்லூரியை நவீன மயப்படுத்துவதற்கும் சீனா 1.5 மில்லியன் டொலரை வழங்குவதாக உடன்பட்டுள்ளது.

சீனப் பாதுகாப்பு அமைச் சர் லியாங் குவாங்லி அடுத்த புதன்கிழமை இலங்கைக்கு பயணம் மேற்கொள்வதற்கு முன்னதாக, இலங்கை இராணுவத்தினருக்கான இந்த நிதியுதவி வழங்க உடன்பட்டுள்ளதாக சீனா அறிவித்துள்ளது.

பார்க்க பக்கம் 4


வடக்கு, கிழக்கின் கடற்கரை களை அண் டிய பகுதிக ளில் ஆயிரத்து 592 மில்லி யன் அமெரிக்க டொலர் செலவில் உல்லாசப் பயணிகளுக்கான ஹோட்டல்கள். 5

இலங்கை இராணுவத் துக்கு பயிற்சி யளிப்பதைக் கண்டித்து கோவையில் முற்றுகைப் போராட்டம். 8

தலிபான்களின் முக்கிய தளபதி நேட்டோ விமானத் தாக்குதலில் உயிரிழந்தார். 9

"அமைச்சர் பதவியைத் தூக்கி எறியுங்கள்" - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு கட்சியின் அதி உயர்பீடம் அழுத்தம். 17


## கடிதமல்ல நடவடிக்கையே தேவை

### 'ஜெ'க்கு திருமா

சென்னை, ஓக.27

தமிழகத்தில் மட்டு மல்லாது இந்தியாவின் எந்த இடத்திலும் இலங்கை இரா ணுவத்தினருக்கு பயிற்சி அளிக்கக் கூடாது என்று டெசோ மாநாட்டில் தீர் மானம் நிறைவேற்றப்பட்டி ருக்கிறது.

இந்திய அரசு இராணு வத்தினருக்கு திருட்டுத் தனமாக தமிழகத்திலேயே பயிற்சி அளிப்பது வன்மை யாக கண்டிக்கத்தக்கது. இலங்கைத் தமிழர் விவகாரத் தில் தமிழக முதல்வர் ஜெய லலிதா கடிதம் எழுதுவதை நிறுத்திவிட்டு, சிறப்பு பிரதி நிதிகளை அனுப்பி மத்திய அரசை உடனடியாக நடவ டிக்கை எடுக்க வலியுறுத்த வேண்டும். இவ்வாறு தெரி வித்துள்ளார் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவ ளவன்.

சென்னை லயோலா கல்லூரியில் நடந்த நிகழ்ச்சி

பார்க்க பக்கம் 4

## தபால் மூல வாக்களிப்பு இன்றும் நாளையும்

### 1 லட்சத்து 818 பேர் வாக்களிக்கத் தகுதி

கொழும்பு, ஓக.27

மூன்று மாகாணங்களுக் குமான தபால் மூலமான வாக்களிப்பு இன்றும், நாளை யும் நடைபெறும் எனத் தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கென மூன்று மாகா ணங்களிலும் ஒரு லட்சத்து 818 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் எனவும், வாக் களிப்பில் ஈடுபடும் வாக் காளர்கள் தேசிய அடையாள

பார்க்க பக்கம் 4

## காணாமல் போனவர்களின் கதி என்ன? வவுனியாவில் 30ஆம் திகதி ஆர்ப்பாட்டம்

### மனித உரிமை அமைப்புகள் களத்தில்

கொழும்பு, ஓக.27

காணாமல் போனோர் தொடர்பான விவரங்களை மஹிந்த அரசு உடனடியாக வெளியிடவேண்டும் என வலியுறுத்தி காணாமல் போனோரைத் தேடியறியும் குழு எதிர்வரும் 30 ஆம் திகதி வவுனியாவில் மா பெரும் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளது.

மனித உரிமை அமைப்பு கள் பல தெற்கிலிருந்து அணி திரண்டு ஆர்ப் பாட்டத்தில் கலந்து கொள்ள வுள்ளன. வவுனியா பஸ் நிலையத்திற்கு முன்னால் மு.ப. 10 மணிக்கு இந்த ஆர்ப்பாட்டம் நடை பெற வுள்ளது.

சர்வதேச காணாமல் போனோர் தினம் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்படுகின்றது. இதனையொட்டியே இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது.

குறித்த ஆர்ப்பாட்டத் தில் அனைவரையும் அணி திரண்டுவந்து கலந்துகொள்ளு மாறு காணாமல் போனோ ரைத் தேடியறியும் குழு அழைப்பு விடுத்துள்ளது.

அதேவேளை, அன்றைய தினத்தில் வடக்கில் ஏனைய சில பிரதேசங்களிலும் கூட் டங்கள் நடத்தப்படவுள் ளன. இதற்கான ஏற்பாடு களையும் காணாமல் போனோ ரைத் தேடியறியும் குழு செய்துள்ளது.

பார்க்க பக்கம் 4

## நீதித்துறைக்கு அச்சுறுத்தல்; ரிஷாத் இன்று நீதிமன்றில்

மன்னார், ஓக.27

மன்னார் நீதிமன்றம் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பிலும் மன்னார் நீதி வானுக்கு அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தொலைபேசி மூலம் மிரட்டல் விடுத்த தாகக் கூறப்பட்ட சம்பவம் தொடர்பிலும் மன்னார் நீதி மன்றத்தில் இன்று திங்கட் கிழமை முன்னிலையாகு மாறு அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு மன்னார் மேல திக நீதிவான் ஆர்.எஸ்.ஏ. திஸாநாயக்க அழைப் பாணை விடுத்துள்ளார்.

இதேவேளை, மன்னார் நீதிமன்றம் மீதான தாக்கு தல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட் டுள்ள 18 சந்தேக நபர்களும் இன்று திங்கட்கிழமை மன் றில் முற்படுத்தப்படவுள்ள னர்.

மன்னார் நீதிமன்றத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் 26 முக்கிய சந்தேகநபர்களுக் குப் பிடியாணை பிறப்பிக் கப்பட்ட நிலையில் அவர் கள் தலைமறைவாகியுள்ள

பார்க்க பக்கம் 4

# பிரதேசசபைக் கட்டடம் பொலிஸ் பாதுகாப்பில்

### வலி.தென்மேற்கு தவிசாளரின் கோரிக்கையை அடுத்து


பண்டத்தரிப்பு ஆகஸ்ட் 27

வலி தென்மேற்கு பிரதேச சபையின் புதிதாகக் கட்டப்பட்ட கட்டடத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

வலி தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக புதிய கட்டடத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கும் படியாக பிரதேச சபை தவிசாளர் அ.ஜெபநேசனால் மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இக்கோரிக்கையை ஏற்றுக் கொண்ட மானிப்பாய் பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து இரவு நேரப் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

உள்ளூராட்சி திணைக்களத்திடம் காவலாளிகளுக்கான பதவி நிர்ணய அனுமதி பெற்றுக்கொள்ளப்படும் வரையில் பாதுகாப்பு வழங்க வேண்டுமென பொலிஸாரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. வலி தென்மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகக் கட்டடம் 45 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்டுள்ளது.

வலி. தெற்கு பிரதேச சபை கட்டிடம் திறக்கப்படவிருந்த நாள் அதிகாலையில் விசமிகளால் கழிவொயிலூற்றி நாசமாக்கப்பட்டதன் பின்னணியிலேயே தவிசாளரினால் இக்கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (16-130)



ஜேர்மன் கலாசார நிலையமான கோத்தேயின் அனுசரணையுடன் யாழ். செயல்திறன் அரங்க இயக்கம் தயாரித்த ஜேர்மன் இளையோர் நாடகமான 'கணைக்கேடு' யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று மேடையேறியது. நாடகத்தின் ஒரு காட்சியையும் கண்டு களித்த ரசிகர்களின் ஒரு பகுதியினரையும் காணலாம். (ந-4)

## இந்திய அரசின் மானிய உதவியுடன் கேதீஸ்வர ஆலய புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஓக.27

இந்திய அரசின் மானிய உதவித் திட்டத்தின் கீழ் மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மீள் புனரமைப்புப் பணிகள் 326 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2010 ஆம் ஆண்டு இந்திய தூதுவராலயத்துக்கும் திருக்கேதீஸ்வர ஆலய புனரமைப்புச் சபைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையில் கடந்த 20 ஆம் திகதி மன்னாருக்கு வருகை தந்த இந்திய கலாசார வீடமைப்பு, வறுமைஒழிப்பு அமைச்சர் குமாரி செல்ஜா மற்றும் உயர் ஸ்தானிகர் பேராளர்கள் கொண்ட குழுவினர் மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தை மீள்புனரமைப்பு செய்வதற்கான திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

> இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2010 ஆம் ஆண்டு இந்திய தூதுவராலயத்துக்கும் திருக்கேதீஸ்வர ஆலய புனரமைப்புச் சபைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது

ஆலயத்துக்கான புனரமைப்புப் பணிகள் இந்திய தொல்பொருள் ஆய்வுமையம், கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை கல்லூரி மாமல்லபுரம் ஆகியவற்றின் ஆலோசனையுடன் ஆரம்பிக்கப்படவுள்ளன. (எ-14)

# புத்தர் சிலைகளுக்கு முன்னால் புகைப்படம் எடுக்கவேண்டாம்

### சுற்றுலாப் பயணிகளுக்கு பிரிட்டன் அரசு ஆலோசனை

இலங்கைக்குச் சுற்றுலா செல்லும் பிரிட்டன் பிரஜைகள் புத்தர் சிலைகளுக்கு முன்னால் ஒளிப்படம் எடுக்க வேண்டாம் என்று அந்நாட்டு அரசாங்கம் ஆலோசனைக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

பிரிட்டன் வெளிவிவகாரப் பணியகம், இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் அந்நாட்டின் குடிமக்களுக்காக நேற்று விடுத்துள்ள பயண ஆலோசனை அறிவிப்பிலேயே இவ்வாறு கூறியுள்ளது. எனினும் ஏற்கனவே கடந்தவாரம் வெளியிட்ட ஆலோசனை அறிவிப்பில் கூறப்பட்டிருந்த தேசியவாத எழுச்சி, பாலியல் குற்றச் செயல்கள் குறித்த எச்சரிக்கை அறிவிப்புகள் எதுவும் விலக்கிக் கொள்ளப்படவில்லை.

> பிரிட்டன் வெளிவிவகாரப் பணியகம், இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் அந்நாட்டின் குடிமக்களுக்காக நேற்று விடுத்துள்ள பயண ஆலோசனை அறிவிப்பிலேயே இவ்வாறு கூறியுள்ளது.

ஏற்கனவே இலங்கை செல்லும் தமது சுற்றுலாப் பயணிகளுக்குப் பிரிட்டன் வழங்கியுள்ள அறிவுறுத்தல்களை ஏனைய நாடுகளும் பின்பற்றலாம் என்று இலங்கை அரசு அச்சம் வெளியிட்டுள்ளது. இது நாட்டுக்குப் பாதிப்பை தரும் என்று இலங்கையின் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டின் தற்போதைய உண்மையான நிலவரம் குறித்து வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு விளக்கும் முயற்சிகளில் ஈடுபடப் போவதாக இலங்கையின் வெளியுறவு அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது பாதுகாப்பான சூழல் காணப்படுவதால், சுற்றுலாப் பயணிகள் எந்த இடங்களுக்கும் செல்லலாம் என்று கருணாதிலக்க குறிப்பிட்டுள்ளார். (ந-3)



வவுனியா மாவட்டத்தில் உள்ள பல குளங்கள் வற்றி வறண்டு போய் காணப்படுகின்றன. அவற்றின் ஒன்றின் நிலைதான் இது. (எ-12)

## மறைந்த கல்விப் பணிப்பாளர் நினைவாக நூல் வெளியீடு

வவுனியா, ஓக.27

மறைந்த முன்னாள் கல்விப் பணிப்பாளர் திருமதி வி.ஆர்.ஏ.ஒஸ்வேல்ட்டின் கல்விப் பணிக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி வவுனியா தெற்கு வலயத்தால் 'அறுவடை' என்னும் நூல் ஒன்று வெளியிட்டு வைக்கப்பட்டது.

முன்னாள் கல்விப் பணிப்பாளரின் ஓராண்டு நினைவையொட்டியே இந்த நூல் வெளியீடு இடம்பெற்றது.

வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் முதன்மை மண்டபத்தில் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அறுவடை என்ற நூலை கல்விப் பணிப்பாளர் வெளியிட்டு வைக்க முன்னாள் கல்விப் பணிப்பாளரின் புத்திரன் ஒஸ்வேல்ட் ருசாந்தன் முதற் பதிப்பைப் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து அமரர் வவுனியா தெற்கு வலயத்தின் கல்வி வளர்ச்சிக்கு மேற்கொண்ட சேவைகள் தொடர்பாக வவுனியா கல்வியியற் கல்லூரி பீடாதிபதி க.பேனாட், வவுனியா வடக்குக் கல்விப் பணிப்பாளர் திருமதி பராசக்தி கணேசலிங்கம், வவுனியா மாவட்டத் தமிழ்ச் சங்கத் தலைவரும் ஆசிரியருமான தமிழருவி த.சிவகுமாரன் உட்பட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் எனப் பலரும் உரை நிகழ்த்தினர்.

இந்த அறுவடை என்ற நூலானது ஒவ்வொரு வருடமும் வெளியிடப்படவுள்ளது. அத்துடன் வவுனியா தெற்கு கல்வி வலயத்திலுள்ள முதன்மை மண்டபத்துக்கு மறைந்த முன்னாள் கல்விப் பணிப்பாளரின் பெயரை சூட்டுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-400)

## இந்தியாவுக்கு சுற்றுலா சென்ற இலங்கையர் காயம்

இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் சுற்றுலா சென்றிருந்த 13 பேர் விபத்துக்குள்ளாகி காயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்த 17 பேர் தமிழகத்துக்கு கடந்த சில நாள்களுக்கு முன்னர் சுற்றுலா வந்தனர். அவர்கள் சென்னையில் சுற்றுலா வாகனம் ஒன்றை வாடகைக்கு எடுத்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு சென்று சுற்றி பார்த்தனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் கொடைக்கானலை சுற்றிப்பார்த்து விட்டு சென்னைக்குத் திரும்பிக் கொண்டு இருந்தனர். நேற்று அதிகாலை 5.30 மணியளவில் அந்த வான் உளுந்தூர்பேட்டை என்ற இடத்துக்கு அருகே வந்தபோது வாகனத்தின் சாரதி நித்திரையாகிவிட்டார்.

இதனால் வாகனம் நிலை தடுமாறி வீதியில் கவிழ்ந்தது. இதில் சாரதி லாசரும் மற்றும் சுற்றுலா பயணிகள் 13 பேரும் படுகாயம் அடைந்தனர். இதுபற்றி தகவல் அறிந்ததும் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். காயமடைந்த அனைவரையும் பொலிஸார் மீட்டு அம்புலன்ஸ் மூலம் உளுந்தூர்பேட்டை அரசு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரி வைத்தியசாலைக்கு காயமடைந்தோர் அனுமதிக்கப்பட்டனர். காயமடைந்த இலங்கைப் பயணிகள் சிலரின்விவரம்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜோன் (வயது 28), மட்டக்களப்பு பகுதியை சேர்ந்த குமுதா(வயது-45), நேசலட்சுமி (வயது-43) மற்றும் அமெரிக்கா, பிரான்ஸ், லண்டன் ஆகிய பகுதிகளில் வசிக்கும் இவர்களின் உறவினர்கள் அன்ரனி இருதயராஜ் (வயது-32), அஞ்சலின்(வயது-22), அகிலன் (வயது-20), அருள்தாஸ் (வயது-32), அரசன் (வயது-3). (ந-10)

## கடலில் மூழ்கிய கப்பலால் ரூ. 450 மில்லியன் சேதம்

பாணந்துறை கடலில் மூழ்கிய கப்பலில் இருந்து வெளியேறும் எண்ணெய் கசிவினால் 450 மில்லியன் டொலர்கள் அளவில் சேதங்கள் ஏற்படலாம் என்று தெரிவிக்கப்படு கின்றது.

குறித்த கப்பல் கடந்த 23 ஆம் திகதி கடலில் மூழ்கியது. இதனையடுத்து கப்பலில் இருந்து எரிபொருள் வெளியாகி அது வெள்ளவத்தை காலிமுகத்திடல் ஊடாக நீர்கொழும்பு வரையிலான கடற்கரைகளில் பரவியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கட்டடப் பொருள் எடுத்து வர அனுமதி வழங்கக் கோரிக்கை

### பிரதேச சபைத் தலைவரிடம் உழவு இயந்திர உரிமையாளர் மனு

காரைநகர், ஓக.27

கட்டடப் பொருள்களை காரைநகருக்குள் உழவு இயந்திரம் மூலம் எடுத்து வருவதற்கு உரிமத்தைப் பெற்றுத் தருமாறு காரைநகர் பிரதேச உழவு இயந்திர உரிமையாளர்கள் காரைநகர் பிரதேச சபைத் தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக மனு ஒன்றையும் கையளித்துள்ளனர்.

இந்த மனுவில் பிரதி பிரதேச சபையின் ஏனைய உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டதை அடுத்துக் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இது தொடர்பாக ஆராயப்பட்டது.

வழி அனுமதிப் பத்திரம் இன்றி உழவு இயந்திரம் மூலம் காரைநகரில் மண் மற்றும் ஏனைய கட்டடப் பொருள்கள் கொண்டு செல்ல முடியாது. வெளி இடங்களில் இருந்து லொறிகள் மூலம் மொத்தமாக எடுத்து வரப்படும் மண் மற்றும் கட்டடப் பொருள்களைப் பொதுமக்களின் தேவைகளுக்கேற்றவாறு உழவு இயந்திரம் மூலமே கொண்டு சென்று வழங்க வேண்டிய நிலை உள்ளது.

இந்தக் கட்டடப் பொருள்களை விற்பனை செய்தவதற்கான உரிமம் கேட்டு கொண்டு செல்வதற்கான வரி அனுமதிப் பத்திரம் பெற்றுத் தருமாறு உழவு இயந்திர உரிமையாளர்கள் கடந்த ஐந்தாறு மாதங்களுக்கு முன்னர் விண்ணப்பித்திருந்தனர். பிரதேச சபை இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மாறாக ஒரு சிலருக்கு மாத்திரமே அனுமதி வழங்கியுள்ளது. இதனால் காரைநகரில் உள்ள 25 இற்கும் மேற்பட்ட உழவு இயந்திர உரிமையாளர் பாதிக்கப்படுவதுடன் பொதுமக்களும் தங்கள் வீடுகளைத் திருத்த முடியாத நிலையில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

உழவு இயந்திர உரிமையாளர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பிரதேச சபை உறுப்பினர் க.பாலச்சந்திரன் கோரிக்கையை முன்வைத்தார்.

இவருடைய கோரிக்கையை அடுத்து விண்ணப்பங்களை சாதகமாகப் பரிசீலிப்பது எனவும் பொதுச் சுகாதார பரிசோதகரின் உறுதிப்படுத்தலுடன் வழி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. பொது மக்கள் தற்போது தமது தேவைக்கு ஏற்றவாறு கட்டடப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியாது சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-250)

# சந்நிதியான் ஆலயச் சூழலில் 24 மணிநேர குடிதண்ணீர் சேவை



வடமராட்சி, ஓக.27

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் பக்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டு குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் 24 மணிநேரமும் குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் வல்வெட்டித்துறை நகரசபையால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வறட்சி நிலவுவதாலும் குடிதண்ணீர் சேகரிக்கும் கிணறுகளில் வற்றுநிலை ஏற்பட்டுள்ளதாலும் வல்வெட்டித்துறை நகரசபை எல்லைக்கு அப்பால் இருந்தும் குடிதண்ணீரைப் பெறவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்று நகரசபைத் தலைவர் ந.அனந்தராஜ் தெரிவித்தார்.

ஆலய வீதிகளில் வைக்கப்பட்டுள்ள குடிதண்ணீர்த் தாங்கிகளில் இருந்து 24 மணிநேரமும் குடிதண்ணீரைப் பெறக் கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

*தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத் தேர்த்திருவிழா நாளையாகும். சுன்னாகம் துர்க்கா பொத்தகசாலை நிறுவனத்தினர் தயாரித்து வழங்கும் வர்ணச் சிறப்பு மலர் நாளைய உதயனில் வெளியாகிறது.*

## இளம் பெண்ணை தாக்கியவர் யாழ்.பொலிஸாரிடம் ஒப்படைப்பு

வலி வடக்கு, ஓக.27

யாழ். பஸ் நிலையத்தில் இளம் பெண் ஒருவரைத் தாக்கிய இளைஞர் ஒருவர் பொது மக்களின் உதவியுடன் பிடிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் வங்கி ஒன்றில் கடமையாற்றும் ஆண், பெண் ஊழியர்கள் இணைந்து பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

குறிப்பிட்ட இடத்தில் நின்று நான்கு இளைஞர்கள் பெண் ஊழியர்களை அசிங்கமான வார்த்தைப் பிரயோகங்களை கூறி கொச்சைப் படுத்தியுள்ளர்கள்.

தொடர்ந்து குறிப்பிட்ட நான்கு பேரும் பெண் ஊழியர்களைத் தாக்கியுள்ளனர்.

பொதுமக்களும் ஏனைய ஊழியர்களும் இணைந்து அவர்களைப் பிடிக்க முற்பட்டதைத் தொடர்ந்து மூவர் தப்பி ஓட ஒருவர் வசமாக பிடிபட்டுள்ளார்.

குறிப்பிட்ட இளைஞரை பெண்கள் கொண்டு வந்து யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதுடன் முறைப்பாட்டையும் பதிவு செய்துள்ளார்கள். நேற்று முன்தினம் முற்பகல் 9.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-86)

### மாதகல் மேற்கில் ஆரம்பிக்கப்பட்ட

# புதிய கடற்றொழில் அமைப்புக்குத் தடை

*யாழ்ப்பாணம், ஓக.27*

*யாழ்.மாவட்ட கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனம் எடுத்த நடவடிக்கையை அடுத்து மாதகல் மேற்கில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புக்குக் கடற்றொழில் அமைச்சர் தடை விதித்துள்ளார். மாதகல் கிராமிய கடற்றொழிலாளர் அமைப்பின் தலைவராக வி.சுப்பிரமணியம் கடந்த காலங்களில் முறையற்ற விதத்தில் செயற்பட்டார் எனக் காரணம் கூறி ச் சங்க அங்கத்தவர்கள் அவரைப் பதவியில் இருந்து நீக்கி வேறு ஒருவரை நியமித்திருந்தனர்.*

இதனையடுத்து வி.சுப்பிரமணியம் கடற்றொழில் அமைச்சரைச் சந்தித்து மாதகலில் மேலும் ஓர் அமைப்பை ஆரம்பிக்க அனுமதி கேட்டிருந்தார். இதனையடுத்து அனுமதி வழங்கப்பட்டுப் புதிய அமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்த நிலையில் மதரீதியாகவும் சமூக ரீதியாகவும் அமைப்புக்கள் உருவாக்கப்படுவதால் தொழிலாளர்கள் மத்தியில் ஒற்றுமையின்மையும் குழப்பத்தையும் ஏற்படுத்தும் என்று தேசிய மீனவர் சம்மேளனமும் யாழ்.மாவட்ட கடற்றொழில் அமைப்புகளின் சம்மேளனமும் கடற்றொழில் அமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தில் சுட்டிக்காட்டியிருந்தன.

இதனை ஏற்றுக்கொண்ட அமைச்சர் புதிய அமைப்புக்குத் தடை விதித்துள்ளார். இது தொடர்பான கடிதத்தையும் யாழ்.மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி உதவிப் பணிப்பாளருக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

இதேவேளை கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சின் கீழ் இயங்கும் மாவட்ட கடற்றொழில் சங்கங்கள், மாவட்டக் கடற்றொழில் கிராமிய அமைப்புக்கள், மாவட்ட கடற்றொழில் சம்மேளனங்கள் ஆகியன தங்களது சங்கங்களைப் புதிதாகப் பதிவு செய்வதற்கு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களங்களின் பணிப்பாளர்கள், பிரதிநிதிகள் அங்கீகாரம் வழங்க வேண்டும் என்று திணைக்களத்தின் யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

கடற்றொழில் அமைப்புக்கள் எதுவாக இருந்தாலும் அந்த அமைச்சின் அமைச்சர் மற்றும் செயலாளரின் அனுமதி கிடைக்கவேண்டும். பின்பு மாவட்ட உதவிப் பணிப்பாளரின் பணிப்பின் கீழ் சங்கங்கள் பதியப்பட வேண்டும். மேற்படி சங்கங்கள் பதிவு செய்யப்படும்போது திணைக்களங்களின் பிரதிநிதிகள் பங்கேற்கவேண்டும்- என்றார் கணேசமூர்த்தி.

கடற்றொழில் உதவிப் பணிப்பாளரோ அல்லது கடற்றொழில் பரிசோதகரோ கலந்து கொள்ளாத நிலையில் தன்னிச்சையாக இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்தத் தெரிவு செல்லுபடியாகாது என்று தெரிவித்தார். கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர்.

மாதகலில் புதிய கடற்றொழில் கிராமிய அமைப்புக்குத் தடைவிதிக்கப்பட்டது குறித்து விளக்கமளித்து அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(ஒ-115-13)

## வகுப்பு தொழிலாளருக்கு பற்றாக்குறை

யாழ்ப்பாணம், ஓக.27

யாழ்.மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் வகுப்புத் தொழிலாளர்களுக்குப் பற்றாக்குறை நிலவி வருகின்றன. இதனால் சங்கங்களின் அத்தியாவசிய சேவைகள் பாதிக்கப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டது. இந்த வகுப்புத் தொழிலாளர்களில் அனேகமானவர்களுக்குச் சங்கங்களில் போதிய கொடுப்பனவு வழங்காமையால் அவர்கள் விலகிச் சென்றுள்ளனர் என்று கூறப்பட்டது.

இது குறித்து மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரிடம் கேட்ட போது:-

சங்கங்களில் போதியளவு வகுப்பு தொழிலாளர்கள் இன்மையால் பணிகளில் சில சமயங்களில் பாதிப்பு ஏற்படுகின்றன. அவர்களுக்கு தற்போதைய தேவைக்கு ஏற்றவாறு மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படாமையால் தான் அவர்கள் சங்கங்களில் இருந்து விலகிச் செல்கின்றனர்.

இது குறித்துத் தற்போதைய வருமானத்துக்கு ஏற்றவாறு கொடுப்பனவுகளை அதிகரித்து வழங்குவதற்குச் சங்கங்கள் சம்பளப் பட்டியல்களை மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் விசேட ஆளணி திரட்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று அவர் மேலும் கூறினார். (ம-17)

## நம்பிக்கை, எதிர்பார்ப்புடன்......



யாழ்.குடாநாட்டுப் பாடசாலைகளில் தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சை நேற்று சுமுகமான முறையில் நடைபெற்றது. யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைகளின் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியபின் மகிழ்ச்சியுடன் வீடு திரும்புகின்றனர். (ம-17-04)

## நிகழ்வுகள் இன்று

கலந்துரையாடல்

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனைக்கு உட்பட்ட உணவக உரிமையாளர்களுக்கான சுகாதார மேம்பாடு தொடர்பான கலந்துரையாடல் காலை 9 மணிக்குத் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரிப்பணிமனைமாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-36)

# நாட்டு மக்களை ஏமாற்றுவதே மஹிந்த அரசின் கொள்கை

## உருப்படியான தீர்வு இல்லை என்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஓக.27

நாட்டு மக்களை முட்டாள்களாக்குவதையே இந்த அரசு கொள்கையாகக் கொண்டுள்ளது எனத் தெரிவித்த ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, கடந்த மூன்று வருடங்களுள் இந்த அரசு உலகுக்கு வழங்கிய பொய் வாக்குறுதிகளுக்கு எண்ணிக்கை கிடையாது என்றும் கூறினார்.

நாட்டிலுள்ள பிரச்சினைகளை இந்த அரசால் தீர்க்க முடியாது எனச் சொல்வதைவிட, பிரச்சினைகளுக்கு அரசிடம் தீர்வு இல்லை எனச் சொல்வதே பொருத்தமாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பில் 'உதயனி'டம் கருத்து வெளியிட்ட ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க மேலும் கூறியவை வருமாறு:-

சர்வதேச தலையீடுகளை அனுமதிக்க மாட்டோம் என மார்தட்டி வந்த மஹிந்த அரசு இன்று ஏகாதிபத்திய நாடுகளிடம் மண்டியிட்டுள்ளது. வெளிநாட்டு இராஜதந்திரிகள் எமது நாட்டு விடயங்களில் மூக்கை நுழைக்கின்றனர். அரசிடம் முறையானதொரு கொள்கையின்மையே இவற்றுக்குக் காரணமாகும்.

ஜெனிவாத் தீர்மானத்தின் பின்னர் ஐ.நா. குழுவை நாட்டுக்குள் அனுமதிக்க மாட்டோம் எனக் கூறிவந்த அரசு, தற்போது அனுமதித்துள்ளது. அப்படியானால் இவர்களின் கொள்கை என்ன?

**இந்த அரசு சர்வதேசத்திடம் எவ்வளவு வாக்குறுதிகளை வழங்கியது. அவை நிறைவேற்றப்பட்டுள்ளனவா? அரசு வழங்கிய போலி வாக்குறுதிகளுக்கு எண்ணிக்கை கிடையாது.**



அதுமட்டுமின்றி, கடந்த மூன்று வருடங்களுக்குள் இந்த அரசு சர்வதேசத்திடம் எவ்வளவு வாக்குறுதிகளை வழங்கியது. அவை நிறைவேற்றப்பட்டுள்ளனவா? அரசு வழங்கிய போலி வாக்குறுதிகளுக்கு எண்ணிக்கை கிடையாது. ஏனெனில், இவர்கள் சொல்வது - செய்வது என அனைத்துமே போலியாகத்தான் உள்ளன.

குறிப்பாக, தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை ஏமாற்றுவதையே மஹிந்த அரசு கொள்கையாகக் கொண்டுள்ளது. இவர்களின் கொள்கை பச்சோந்தித்தனமானது.

அரசின் போலி நாடகங்களை சர்வதேசமும், மக்களும் தற்போது படிப்படியாக உணர ஆரம்பித்துள்ளன. எனவே, அதன் விளைவுகள் அரசுக்குப் பாரதூரமானதாக அமையும்.

அதேவேளை, மூன்று மாகாண சபைகளிலும் அரசின் வெற்றிவாய்ப்பு குறைந்து வருகின்றது. அரசுக்கு எதிராக நடைபெற்று வரும் ஆர்ப்பாட்டங்கள் இதனையே பிரதிபலிக்கின்றன.

நாம் சிறப்பான முறையில் பிரசாரங்களை முன்னெடுப்பதுடன், மக்களுக்கு உண்மை நிலைவரத்தையும் தெளிவுபடுத்தி வருகின்றோம் - என்றார்.

# அரசின் அனைத்து நடவடிக்கையையும் கிழக்கில் கூட்டமைப்பு முறியடிக்கும்

கொழும்பு, ஓக.27

இலங்கை அரசின் அனைத்துவித நகர்வுகளையும், காய்நகர்த்தல்களையும் கிழக்குத் தேர்தலில் நாம் தோற்கடிக்க வைப்போம் - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று ஆணித்தரமாக இடித்துரைத்தது.

தீர்வு விடயத்தில் இலங்கை அரசு காலங்கடத்துவதானது அதற்கே ஆபத்தைத் தேடிக்கொடுக்கும் என்றும் கூட்டமைப்பு தெரிவித்தது.

அரசியல் தீர்வு விடயம், கிழக்கு மாகாண சபைத் தேர்தல் ஆகியன தொடர்பில் கருத்து வெளியிடும் போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும், யாழ். மாவட்ட எம்.பியுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தீர்வு முயற்சியில் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தின் உதவியின்றி எதையும் செய்யமுடியாது என்ற நிலைமையே தற்போது உருவாகியுள்ளது. ஏனெனில், அந்தளவுக்கு இலங்கை அரசு இனவாதத்துக்குள் மூழ்கியிருக்கின்றது.

அந்த அடிப்படையில் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தின் கோரிக்கையை இலங்கை அரசு விரும்பாவிட்டால் அதற்குத் தீர்வை வழங்குவதற்கு விருப்பமில்லை என்பதே பொருளாகும்.

இன்று இலங்கைத் தீவின் பக்கம் சர்வதேசத்தின் பார்வை திரும்பியுள்ளது. நவம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் பூகோள காலக்கிரம மீளாய்வுக் கூட்டத் தொடர்கள் நடைபெறவுள்ளன. எனவே, இலங்கை அரசு தீர்வு விடயத்தில் காலங்கடத்தும் கைங்கரியத்தைக் கையாள்வதானது அதற்கே ஆபத்தைத் தேடிக் கொடுக்கும்.

அதேவேளை, கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பின் வெற்றிவாய்ப்பு பிரகாசமாகவே உள்ளது. நிச்சயம் நாம் இலங்கை அரசை அதில் தோற்கடிப்போம்.

இலங்கை அரசின் அனைத்துவித நகர்வுகளையும் கிழக்குத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோற்கடிக்கும் - என்றார்.

## வன்னிக்கு இனி...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

படுகின்றது. மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கியதாக வன்னி தேர்தல் மாவட்டம் அமைகிறது. இங்கு 2009 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 270,707 ஆகவும் 2010 அம் ஆண்டு 236,449 ஆகவும் இருந்தது. எனினும் 2011 ஆண்டு இந்த எண்ணிக்கை 221,409 ஆகக் குறைவடைந்துள்ளது.

மொனராகலை மாவட்டத்தில் 2011 ஆம் ஆண்டு 319, 557 வாக்காளர்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தனர். அங்கு 2010 ஆம் ஆண்டு 315,452 வாக்காளர்களும் 2009 ஆம் ஆண்டு 308,230 வாக்காளர்களும் பதிவு செய்யப்பட்டிருந்தனர்.

கடந்த வருடம் யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை பத்திலிருந்து 6 ஆகக் குறைக்கப்பட்டதுடன், மாத்தறை, குருநாகல், பதுளை, இரத்தினபுரி மாவட்டங்களுக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தலா ஒன்றினால் அதிகரிக்கப்பட்டிருந்தது. 2009 ஆம் ஆண்டு யாழ்.மாவட்ட வாக்காளர் எண்ணிக்கை 816,005 ஆக இருந்தது. எனினும் 2010 ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கை 484,791 ஆகக் குறைவடைந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (10)

## ஆர்ப்பாட்ட...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

தொடர்பில் அரசு தமது வெளிநாட்டுத் தூதுவர்களுக்குத் தெளிவுபடுத்தி அவர்களை உஷாராக இருக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ளது எனவும் அறியமுடிகின்றது.

## இராணுவ...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

வடக்கு, கிழக்கில் இருந்து இலங்கைப் படைகளை குறைக்க வேண்டும் என்று இந்தியாவும், மேற்குலக நாடுகளும் வலியுறுத்தி வருகின்ற நிலையில், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் படைமுகாம்கள் அவசியம் என்று இலங்கை அரசாங்கம் கூறி வருகிறது.

அதுவேளை, சீனாவிடம் இருந்து எம்ஏ-60 விமானங்களை 105.4 மில்லியன் டொலருக்கு கொள்வனவு செய்யும் உடன்பாட்டிலும் இலங்கை அரசு அண்மையில் கையெழுத்திட்டுள்ளது.

எனினும், இந்த பேரம் இன்னமும் பகிரங்கப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (10)

## தபால் மூல...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

அட்டைகளையும், ஏற்றுக்கொள்ளப்பட்ட அடையாள அட்டைகளையும் பயன்படுத்தலாம் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தேர்தல்கள் திணைக்களம் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

கிழக்கு, வடமத்திய, சப்ரகமுவ ஆகிய மூன்று மாகாணசபைகளுக்குமான தபால் மூலமான வாக்களிப்புக்காக ஒரு இலட்சத்து 818 பேர் தகுதிபெற்றுள்ளனர்.

கிழக்கு மர்காணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 5 ஆயிரத்து 629 வாக்காளர்களும், அம்பாறையில் 12 ஆயிரத்து 912 வாக்காளர்களும், திருகோணமலையில் 10 ஆயிரத்து 612 வாக்காளர்களும் அடங்கலாக 29 ஆயிரத்து 153 வாக்காளர்கள் தகுதிபெற்றுள்ளனர்.

வடமத்திய மாகாணத்தில் அநுராதபுரத்தில் 35 ஆயிரத்து 222 வாக்காளர்களும், பொலனறுவையில் 8 ஆயிரத்து 492 வாக்காளர்களும், அடங்கலாக 43 ஆயிரத்து 714 வாக்காளர்கள் தகுதிபெற்றுள்ளனர்.

அதேவேளை, சப்ரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரியில் 11 ஆயிரத்து 6 வாக்காளர்களும், கேகாலையில் 16 ஆயிரத்து 945 வாக்காளர்களும் அடங்கலாக மொத்தமாக 27 ஆயிரத்து 951 வாக்காளர்கள் தகுதிபெற்றுள்ளனர்.

தபால்மூலமான வாக்களிப்பின் போதும், வாக்குச்சீட்டுகளைக் கொண்டுசெல்லும் போதும் இடம்பெறுகின்ற வாக்கு மோசடிகளைத் தடுப்பதற்கும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வாக்களிப்பு இடம்பெறுகின்ற நிலையத்தில் வாக்களிக்கும் வாக்காளரைத் தனது முன்னிலையில் வாக்களிக்குமாறும், வாக்களித்த சீட்டைத் தனக்குக் காண்பிக்குமாறும் மற்றும் ஏனைய வழிகளிலும் வாக்களிப்பு நிலையத்திலுள்ள அதிகாரி வாக்காளரை அச்சுறுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும். அத்துடன், வாக்காளரும் தான் அளித்த வாக்குச்சீட்டை சுயவிருப்பின்பேரில் வாக்களிப்பு நிலையத்திலுள்ள அதிகாரிகளுக்குக் காண்பிப்பதும் குற்றமாகும்.

வாக்களிப்பு நிலையங்களில் நடைபெறுகின்ற இவ்வாறான வாக்கு மோசடிகளைத் தடுப்பதற்காக 50இற்கும் மேற்பட்ட தபால் மூலமான வாக்குகள் உள்ள வாக்களிப்பு நிலையங்களில் இரு தேர்தல் கண்காணிப்பாளர்கள் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுவதோடு, 50 இற்கும் குறைவான வாக்குகள் உள்ள வாக்களிப்பு நிலையங்களில் நடமாடும் கண்காணிப்பாளர்கள் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுகின்றனர்.

தபால் மூலமான வாக்களிப்பை நீதியானதும், சுதந்திரமானதுமாக நடத்துவதற்கு வாக்களிப்பு நிலையங்களில் பல தேர்தல் விதிமுறைகள் அமுல்படுத்தப்பட்டு அவை தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படுகின்றன.

தபால் மூலமான வாக்குச் சீட்டை வாக்களிப்பு நிலையத்திலிருந்து வாக்கு எண்ணும் மத்திய நிலையத்திற்கு எடுத்துச்செல்லும் போது இடைநடுவே நடைபெறுகின்ற வாக்கு மோசடிகளைத் தடுப்பதற்காக வாக்குச்சீட்டு உறையில் இரகசிய இலக்கங்கள், உருவப்படங்கள் என்பன பொறிக்கப்பட்டுள்ளன.

வாக்குச்சீட்டு உறையில் பொறிக்கப்பட்டுள்ள மூன்றிற்கு மேற்பட்ட இந்த இரகசியக் குறியீடுகளினால் வாக்குச்சீட்டைக் கொண்டு செல்லும் சந்தர்ப்பங்களில் இடம்பெறுகின்ற வாக்கு மோசடிகளும் தடுக்கப்படுகின்றன.

அத்துடன், இன்றும், நாளையும் நடைபெறுகின்ற தபால் மூலமான வாக்களிப்பை நீதியானதும், சுதந்திரமானதுமாக நடத்துவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## மு.காவுடன் கூட்டாட்சிக்கு...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"கடந்த காலங்களில் தமிழரின் உரிமைப்போராட்டங்களில் இலங்கை அரசின் கொடூரத் தாக்குதல்களில் எமது மக்கள் பல துன்ப துயரங்களைச் சந்தித்துள்ளனர். மக்களின் உயிர்கள் பலி எடுக்கப்பட்டுள்ளன; மக்கள் பலர் அங்கவீனமாக்கப்பட்டுள்ளனர். எனினும், தமிழரின் உரிமைப் போராட்டம் பல வழிகளில் தொடர்ந்தவண்ணம் உள்ளது. இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்கவேண்டுமென்பதே எமது நோக்கமாகும்.

ஆறு தசாப்தங்களுக்கு மேலாக நீடித்துவரும் இனப்பிரச்சினைக்கு சர்வதேசப் பங்களிப்புடன் காணப்படும் அரசியல் தீர்வு முஸ்லிம் மக்களுக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டுமென்பதில் எமது கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றது.

இந்நிலையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையுடன் நாம் பேசிக்கொண்டிருந்தோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையே நெருங்கிய உறவு இருக்கவேண்டும்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து ஆட்சி அமைக்க நாம் தயாராக இருக்கின்றோம். தாராளமாக விட்டுக் கொடுத்து செயற்படுவதற்கும் நாம் தயாராக உள்ளோம். நீதிக்காகத் துணிவுடன் போராடும் நாம் எவருக்கும் அநீதி இழைக்கமாட்டோம்" - என்றார்.

## காணாமல் போனவர்களின்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட காணாமல் போனோரைத் தேடியறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன் கூறியவை வருமாறு:-

"இலங்கையில் யுத்த காலத்திலும் சரி, அதற்குப் பின்னரான காலப்பகுதியிலும் சரி, அநேகமானோர் காணாமல்போயுள்ளனர். இதில் தமிழ் மக்களின் எண்ணிக்கையே அதிகமாகவுள்ளது.

காணாமல் போயுள்ளவர்களுக்கு என்ன நடந்துள்ளது என்பது குறித்து இன்னும் எதுவும் தெரியவரவில்லை. பலர் தடுப்பு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனவே, காணாமல்போனோர் தொடர்பான பெயர்ப்பட்டியலை அரசு உடன் வெளியிடவேண்டும். இதற்கான கடப்பாடு அரசுக்கு உள்ளது. இதனை வலியுறுத்தி எதிர்வரும் 30 ஆம் திகதி வவுனியாவில் மாபெரும் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளோம். வவுனியா பஸ் தரிப்பிடத்திற்கு முன்பாக காலை 10.00 மணிமுதல் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நாம் அழைப்புவிடுக்கின்றோம்" - என்றார்.

## கடிதமல்ல...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ஒன்றில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு ஜெயலலிதாவைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

செங்கல்பட்டு, பூந்தமல்லி சிறப்பு முகாம்களில் உள்ள இலங்கை தமிழர்களை திறந்தவெளி முகாம்களுக்கு மாற்ற வேண்டும். இல்லாதுவிடில் முகாம்களை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்துவோம் எனவும் செய்தியாளர்கள் மத்தியில் திருமாவளவன் கூறினார். (10)

## நீதித்துறைக்கு...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

னர். இவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை கொழும்பு குற்றத் தடுப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கைது செய்யப்பட்டுள்ள மற்றும் தலைமறைவாகியுள்ள சந்தேக நபர்களில் அரச திணைக்களங்களில் பணிபுரிகின்றவர்கள், அதிபர், ஆசிரியர், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், வர்த்தகர்கள் என பலரும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (10-12)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நல்லிணக்கத்துக்கு உதவும் கரிசனை என்ன வகை சாரும்...?

போருக்குப் பிந்திய இலங்கையில், இங்கு வாழும் மக்களிடையே நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கு, தனது ஆதரவையும் அனுசரணையையும் ஜப்பான் வழங்கும் என்றும் -

அதன் பொருட்டுக் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு தேசியத் திட்டம் ஒன்று வகுக்கப்பட வேண்டும் என்ற தமது யோசனையை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வரவேற்றுள்ளார் என்றும்-

ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி தகவல் வெளியிட்டுள்ளார். தமது இரண்டு நாள் இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு, தாயகம் திரும்புவதற்கு முன்னர் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது இந்தத் தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசு நடைமுறைப்படுத்துவது குறித்து ஜப்பான் கண்காணிக்கும். இந்தச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக, அனைத்துலக சமூகம் இலங்கையில் எதிர்பார்க்கும் காத்திரமான, பயனுள்ள விளைவுகளை எட்ட முடியும் - என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

கொழும்பில் ஜனாதிபதியையும், அரசின் முன்னணி அமைச்சர்களையும், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், பாதுகாப்புச் செயலர், ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்னர் -

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு அகாஷி வருகை தந்திருந்தார். போரினால் பாதிக்கப்பட்ட குறிப்பிட்ட சில இடங்களை நேரில் பார்வை இட்டதுடன் இங்குள்ள மத, சமூக, அரசியல் பிரமுகர்களையும் சந்தித்துப் பேசி நிலைமைகளைக் கேட்டறிந்திருந்தார்.

போர் நடைபெற்ற காலகட்டத்தில், ஜப்பானின் விசேட தூதுவர் அகாஷி, இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான பேச்சு வார்த்தைகளில், அவரது நாட்டின் சார்பில் அமைதி முயற்சிகளில் தீவிர ஈடுபாடு காட்டியவர் என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

அகாஷி, கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த வேளை, இலங்கை அரசுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் நல்லிணக்கத்தை உண்டாக்கவும், அமைதியை ஏற்படுத்தவும் தமது நாடு தொடர்ந்தும் அனுசரணை வழங்கும் என்றும் கோடி காட்டியிருந்தார்.

அதேவேளை -

தமிழ் மக்களது எதிர்பார்ப்புகளில் அரைவாசியையேனும் அவர்களுக்குக் கிடைப்பதற்கு எங்களால் முடிந்ததை நாங்கள் செய்வோம் -- என்றும் இங்கு தெரிவித்திருந்தார்.

மேலும், அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் குறித்துக் கருத்துக் கூறுகையில், அது திட்டவட்டமான ஆவணம் என்பதனையும், இதற்கு முன்னர் வேறு எந்த நாட்டு அரசும் இந்த வகை முயற்சியில் ஈடுபடவில்லை என்றும் சிலாகித்துக் கருத்து வெளியிட்டிருந்தார்.

அத்தோடு நிறுத்தாமல் -

சமாதானத்தையும் அதனோடு அமைதியையும் உண்டாக்குவதற்கு நீண்டகாலம் பிடிக்கும். போரில் வெல்வது கடினம்; சமாதானத்தை வென்றெடுப்பதோ அதனை விடவும் கஷ்டமானது. உண்மையில் அது பொறுமையைச் சோதிக்கும் நீண்ட பயணம் - என்ற உண்மையையும் யதார்த்தத்தையும் எடுத்துரைத்தார்.

ஜப்பானை கடந்த வருடம் மார்ச் மாதத்தில் கொடூரமாக உலுப்பிய 8.9 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம், அங்கு பெரும் அனர்த்தங்களையும் மனித அவலங்களையும் ஏற்படுத்தியது. புகுஷிமாவில் அமைந்திருந்த அணு உலைகள் பூகம்பத்தால் பாதிக்கப்பட்டதில் மக்கள் பெரும் எண்ணிக்கையில் உயிரிழந்தனர்; மற்றும் பல சேதங்களும், பாதிப்புகளும் உண்டாகின.

அதனால், இலங்கை விடயத்தில், உதவுவதில் சற்று ஓய்ந்து போயிருந்த ஜப்பான், மீண்டும் தனக்குரிய பணியை மீள ஆரம்பித்துள்ளது எனக்கொள்ளலாம். இது கரிசனையுடன் கூடியதா அல்லது தான் சார்ந்த சர்வமட்டக் குழுமத்தின் உந்துதலின்பாற்பட்டதா என்பதனை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இலங்கையில் நடைபெற்ற போரையும், அதனால் உண்டான அழிவுகளையும் நிறுத்தும் வல்லமை அல்லது விருப்பம் அந்த வேளையில் அனைத்துலக நாடுகளில் எவற்றுக்கும் இருக்கவில்லை என்பதே நிதர்சனமாயிற்று. அவை தமது சுயநலன்களையும் விருப்பங்களையும் நிறைவேற்றுவதற்கு மட்டுமே முன்னுரிமை வழங்கிச் செயற்பட்டன என்பதும் பொது மக்கள் தரப்பில் உண்டான உயிர், இழப்புக்களைத் தடுப்பதிலும் கூட மனமார்ந்த மனிதநேயத்துடன் செயற்படவில்லை என்பதும் இப்போது வெளிச்சம்.

அந்தவகையில், இலங்கையில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தையும், அதற்குக் கருவாக அமையவல்ல தமிழ் மக்களுக்குச் சேர வேண்டிய, அவர்களிடம் இருந்து பிரிக்க முடியாத உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதில் அனைத்துலக நாடுகள் இதய பூர்வமாகச் செயற்பட வேண்டியமை இன்றியமையாததாகி விட்டது எனலாம். அமெரிக்காவும் சரி, இந்தியாவும் சரி, ஜப்பானும் சரி, வேறு எந்த வட்டகை சார்ந்த நாடும் சரி, தத்தமது பூகோள, பிராந்திய நலன்களை முன்னிறுத்தியே இலங்கை விவகாரத்தில் "அக்கறை" காட்டுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை.

இலங்கை அரசாங்கமும் அதனை மனமிருத்திச் செயற்படுகிறது. தனக்கு ஆதரவு நல்கக் கூடிய நாடுகளை "அரவணைத்து" தனது விருப்பத்துக்கும், இலக்குக்கும் ஏற்பக் காய்களை நகர்த்துகிறது என்பது எல்லோருக்கும் தெரிந்தது தான்!

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தைப் பொருட்படுத்தி, அதற்கு மதிப்பளித்து, இலங்கை அரசு செயற்பட வேண்டும் என்று அனைத்துலக நாடுகள் எதிர்பார்க்கின்றன. ஆனால் பாம்புக்கு வாலும் மீனுக்கு தலையும் காட்டும் கோலமே இதுவரை தென்படுகிறது.

எதுவோ, அனைத்துலக நாடுகளின் உதவியும் அனுசரணையும் இன்றி, இந்நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வும் அதனோடு தேசிய நல்லிணக்கமும் உதிக்குமா என்பதில் சந்தேக நிலையே இப்போதைய தளநிலைமையும் யதார்த்தமும்.

## வடக்கு, கிழக்கின் கரையோரங்களில் 129 ஹோட்டல்கள் நிர்மாணிக்க அனுமதி

### 1,592 மில்லியன் அமெ.டொலர் செலவில்

கொழும்பு, ஒக.27

வடக்கு, கிழக்கின் கடற்கரைகளை அண்டிய பகுதிகளில் ஆயிரத்து 592 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் உல்லாசப் பயணிகளுக்கான ஹோட்டல்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இவற்றை நிர்மாணிப்பது தொடர்பாக வெளிநாடுகளைச் சேர்ந்த 217 முதலீட்டாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்றும் அவர்களுள் 129 பேருக்கு தற் போது அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த ஹோட்டல்கள் 14 960 அறைகளைக் கொண்டுள்ளதோடு அவற்றுள் 9364 ஹோட்டல் அறைகள் இந்த ஆண்டு முடிவடைவதற்குள் நிர்மாணித்து முடிக்கப்படவுள்ளன எனவும் பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை கொழும்பில் 2765 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் 302 அறைகள் உள்ளடங்கும் மூன்று நட்சத்திர தரத்திலான ஏழு முன்னணி ஹோட்டல்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டில் உல்லாசப் பயணத்துறை மூலம் எதிர்பார்க்கப்படும் வருவாய் 980 அமெரிக்க டொலராகும்.

இதேவேளை, அடுத்த ஆண்டில் உல்லாசப்பயணத்துறையின் மூலம் ஆயிரத்து 300 அமெரிக்க டொலர் வருமானமாக எதிர்பார்க்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ம-22)

## தேர்தல் வாக்குறுதி வேண்டாம் நெல் உற்பத்தி விலை உயர்வை நடைமுறைப்படுத்துமாறு கோரிக்கை

நெல்லுக்கான உத்தரவாத விலை 45 ரூபாவால் உயர்த்தப்படும் என்பதை வெறும் தேர்தல் வாக்குறுதிகளாக்கி விடாது அதனைச் சட்டமாக்க அரசு விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளரான நாமல் கருணாரத்ன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னரும் அரசு இவ்வாறு பல்வேறு சந்தர்ப்பங்களில் நெல்லின் உத்தரவாத விலை சம்பந்தமாக கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை வழங்கியது. எனினும் அவற்றை நிறைவேற்றியிருக்கவில்லை.

அதற்குப் பதிலாக கறுப்புச் சந்தை விலைக்கு நெல் கொள்வனவு செய்யப்படுவதற்கு தனியார் துறைக்கு அரசு வாய்ப்பேற்படுத்திக் கொடுத்தது.

கடந்த போகத்தில் ஒட்டுமொத்த நெல் தொகையையும் கொள்வனவு செய்வது தொடர்பாக அரசு ஆயிரம் கோடி ரூபாவை மாத்திரமே ஒதுக்கியிருந்தது.

இவ்வாறு தேர்தலை இலக்கு வைத்து வழங்கப்படும் அரசின் வாக்குறுதிகளில் நம்பிக்கை வைக்க இயலாது எனவும் அவர் மேலும் கூறினார். (ம-22)

## அல்லைப்பிட்டி கடற்கரை வீதி புனரமைப்பு

யாழ்ப்பாண்ம், ஒக.27

அல்லைப்பிட்டி கடற்கரை வீதி திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த வீதியில் மிகவும் கூடுதலான பாதிப்புக்கு உள்ளாகிக் கிடக்கும் பகுதி உடன் திருத்தியமைக்கப்படும் எனவும் இதற்கென கற்களும், தார் பரல்களும் அங்கு கொண்டு வரப்பட்டுள்ளன என்றும் வீதி அபிவிருத்தி திணைக்களம் தகவல் தெரிவித்துள்ளது. (ம-7)

## தொடரும் மணல் அகழ்வால் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக.27

அல்லைப்பிட்டி கடற்கரையை அண்டிய பகுதிகளில் மணல் அள்ளும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

இதனால் உயர்ந்த மணல் பிட்டிகளைக் கொண்ட அந்த கடற்கரைப் பகுதி தற்போது குழிகள் நிறைந்த பகுதியாக மாறிவிட்டது.

இதனால் கடல் நீர் உட்புகுந்து தமது கிராமத்தின் வளங்களைச் சிதறடித்து விடும் என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அனுமதியின்றி இங்கு மண் எடுக்கக் கூடாதென அடிக்கடி கூறப்பட்டுவந்த போதும் மணல் அள்ளும் நடவடிக்கை குறைவடைந்ததாக இல்லை எனவும் கிராமம் பாதிக்கப்படாதவாறு உரிய நடவடிக்கைகளை எடுக்க அதிகாரிகள் முன்வர வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-7)

## பராமரிப்பு இன்மையால் தூர்ந்து போகும் குளங்கள்

### வடக்கு நீர்ப்பாசன பணிப்பாளர் கவலை

காரைநகர், ஒக.27

யாழ்.மாவட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குளங்கள் காணப்பட்ட போதிலும் அவை பராமரிப்பு இன்மையால் தூர்ந்து போயுள்ளன. தற்போது 500 வரையான குளங்களே காணப்படுகின்றன.

எமது பகுதி நீர்வளம் உவர் நீராக மாறி வருவதற்கு குளங்கள் பராமரிக்கப்படாமையே முக்கிய காரணமாகும்.

வடமாகாண நீர்ப்பாசன திணைக்கள பணிப்பாளர் எஸ்.சிவபாதம் இவ்வாறு கூறினார்.

காரைநகர் களபூமியில் புதிதாக அமைக்கப்பட்ட மாவுதனைக் குளத்திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தக் குளம் அமைக்கப்பட்டமையால் இந்தக் குளத்தை அண்டிய பிரதேசம் நன்னீராக மாறுவதுடன் வறட்சிக் காலங்களிலும் இந்தப் பிரதேசத்தில் உள்ள கிணறுகளில் நீர் வற்றும் சந்தர்ப்பம் குறைவாகவே காணப்படும்.

அத்துடன் குளத்தை அண்டிய பிரதேசத்து விவசாயிகள் சிறு தானியச் செய்கையையும் கோடை காலங்களில் மரக்கறி வகைகளையும் இந்தக் குளத்து நீரை நம்பிப் பயிரிடமுடியும்-என்று கூறினார். (ம-250)

## பொலிஸ் துறைக்கு எதிராக 650 முறைப்பாடுகள்

### ஆணைக்குழு முன் விசாரணைக்கு

கொழும்பு, ஒக.27

பொலிஸ்துறையில் பலதரப்பட்ட தர நிலைகளிலுள்ள 650 அதிகாரிகளுக்கு எதிராகக் கிடைக்கப் பெற்றுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், குற்றங்கள், சிறு முறைப்பாடுகள் மற்றும் வாகனப் பிரிவுகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிராகவே முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ள தரப்பினருள் பொலிஸ்துறை முக்கியஸ்தர்கள் சிலரும் கூட இருக்கின்றனர் என்றும் அந்த அதிகாரி தெரிவித் துள்ளார்.

இந்த நிலைப்பாடு சம்பந்தமாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சேனக்க வல்கம்பாய கருத்துத் தெரிவிக்கையில்:-

கடமை தவறியுள்ளமை, உதாசீனப்படுத்தல், பக்கச்சார்பாகச் செயற்பட்டுள்ளமை, லஞ்சங்களைப் பெற்றுள்ளமை, ஊழல்கள், மோசடிகள் மற்றும் முறைகேடுகள் உள்ளிட்ட ஒழுக்கக் கேடான நடத்தைகள் சம்பந்தமாக இந்த முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

கடமை தவறியமை மற்றும் உதாசீனமாக நடந்து கொண்டுள்ளமை சம்பந்தமாக கிடைக்கப் பெற்ற நூற்றுக் கணக்கான முறைப்பாடுகள் உடனுக்குடன் சம்பந்தப்பட்ட பொலிஸ் பிரதானிகளுடன் உரையாடி தீர்த்து வைக்கப்பட்டுள்ளன- என்று அவர் மேலும் கூறினார். (ம-22)

## வலி.வடக்கு வீதிகளுக்கு பொருத்தப்படும் மின் விளக்குகள்

யாழ்ப்பாணம், ஒக.27

வலி.வடக்கு பிரதேச சபையால் சபை எல்லைக்கு உட்பட்ட வீதிகளில் வீதி விளக்குகள் பொருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கமைவாக மல்லாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தின் எல்லையிலிருந்து தந்தை செல்வா தொடக்கப் பள்ளி வரையான வீதி மல்லாகம் ரயில் நிலைய எல்லையிலிருந்து மாகியப்பிட்டி எல்லைவரையான வீதி, அலுக்கைச் சந்தியிலிருந்து அம்பனைச் சந்தி வரையான வீதி, மகாஜனக் கல்லூரி வீதியிலிருந்து இளவாலை எல்லை வரையான வீதி, ஆலடியிலிருந்து இளவாலை சித்திரமேழிச் சந்தி, பண்டத்தரிப்பு எல்லை வரையான வீதி, வல்லை கட்டுவன் வீதி, தெல்லிப்பழை எட்டாம் கட்டைச் சந்தி முதல் அளவெட்டி சந்திவரையான வீதி ஆகிய வீதிகளுக்கு வீதிவிளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

வீதி அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு அமைவாக வலி.வடக்கு பிரதேச சபை இந்த வீதி விளக்குகளைப் பொருத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-36)

# அழிவிலிருந்து தப்பின 1000 ஏக்கர் நெற்பயிர்

கிளிநொச்சி, ஓக.27

கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் கீழ் உள்ள 1000 ஏக்கருக்கு மேலான நெற் பயிர்கள் அழிவிலிருந்து தற் காலிகமாக காப்பாற்றப்பட் டன.

அக்கராயன் குளத்தின் நீர் கடும் வறட்சி காரணமாக வற்றிக் கொண்டிருப்பதால் இடது வலது இரு துருசுகளின் வழியாக வெளியேறும் நீரின் வீதம் குறைவடைந்தது. இதனால் 1000 ஏக்கருக்கு மேலான சிறுபோக நெற் பயிர் அழியும் ஆபத்தை எதிர்கொண்டிருந்தது.

இந்த நிலையில் ஸ்கந்த புரம் நாகதம்பிரான் கமக்கார அமைப்பு பக்கோவின் உத வியுடன் குளத்தின் நடுப் பகுதியிலிருந்து துருசுப் பகுதி வரை வாய்க்கால் அமைக் கப்பட்டு குளத்திலிருந்து நீர் வெளியேறும் அளவு அதி கரிக்கப்பட்டதால் அந்த ஆபத்து இல்லாமல் போனது.

10 நாள்கள் வரை தான் இந்த நீரின் தன்மை இதே அளவில் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. அது வரை யில் பயிர்ச் செய்கைக்கு எந்த அழிவும் ஏற்படாது.

10 நாள்கள் வரை தான் இந்த நீரின் தன்மை இதே அளவில் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. அது வரையில் பயிர்ச் செய்கைக்கு எந்த அழிவும் ஏற்படாது.

இதேவேளை அக்கரா யன் குளத்தின் கீழ் 1800 ஏக்கர் வரையிலான சிறு போகப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளுவதற்கு முடி வெடுக்கப்பட்ட போதிலும் கூடுதலான நிலப்பரப்புக ளில் நெற் செய்கை மேற் கொள்ளப்பட்டமையும், பிந்திய விதைப்புக்களும், நீர் சிக்கனமின்மையும், தற்போது நிலவும் கடும் வறட்சியுமே நெற் பயிர் களின் அழிவுக்கு காரணமாக உள்ளன. (எ-18)

# மக்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வு அவசியம்

## முசலி பிரதேச சபைத் தலைவருக்கு பிரஜைகள் குழு கடிதம்

மன்னார், ஓக.27

போரின் போது இடம் பெயர்ந்து மீண்டும் மீள் குடி யமர்ந்த முசலி பிரதேச மக் கள் தாம் தொடர்ந்தும் முகம் கொடுத்து வரும் பிரச்சினை தொடர்பாகவும் அதற்கான தீர்வை பெற்றுக்கொள்ளும் முகமாகவும் முசலி பிரதேச சபைத் தலைவரிடம் முசலி பிரதேச பிரஜைகள் குழு கடி தம் ஒன்றை கையளித்துள்ள தாக அதன் அமைப்பாளர் அ.சுனேஸ் சோசை தெரிவித் தார்.



இந்தக் கடிதத்தில் குறிப் பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த 31.08.2007 இல் நடைபெற்ற போரின் காரண மாக முசலி பிரதேசத்தில் உள்ள மக்கள் உயிர்களைக் காப்பாற்றுவதற்காக ஊரை விட்டு வெளியேறினார்கள்.

மீண்டும் 30.04.2009 இல் சொந்த கிராமமான சவேரி யார்புரம் புதுக்குடியிருப்பு கிராமத்தில் வந்து குடியமர்ந் தனர்.

ஆனால் முசலி பிரதேசத் தில் வடக்கின் வசந்தத்தின் கீழ் மின்சாரம் வழங்குவதற் கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்ட போது சவே ரியார்புரமும் உள்வாங்கப் பட்டு படிவங்கள் பூர்த்தி செய்து கொடுக்கப்பட்டன.

எல்லா கிராமத்துக்கும் மின்சாரம் வழங்கிய வடக் கின் வசந்தம் ஏன் சவேரி யார்புரம் கிராமத்தின் கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட கிராமமான புதுக்குடியிருப்பு கிராமத்துக்கு வழங்கவில்லை என மக்கள் ஆகிய நாங்கள் கேள்வி எழுப்புகின்றோம்.

இது சம்பந்தமாக பிரதேச செயலாளர், பிரதேசசபை தலைவர் மற்றும் வவுனியா வடக்கின் வசந்தத்துக்கான மின்சார சபை அனைவருக் கும் கடிதங்கள் அனுப்பியும் எந்த வித பயனும் கிடைக்க வில்லை. இங்கு 35 வீடுகள் உள்ளன. தற்போது 20 குடும் பங்களை மையப்படுத்தி 500 பேர் வரை வாழுகின்றார்கள். 32 சிறுவர்கள் கல்விகற்று வருகிறார்கள்.

பிரதான தொழிலாக மீன் பிடி மற்றும் கூலி வேலைகள் செய்துதான் வாழ்க்கையை நகர்த்தி வருகின்றோம்.

இது போக எமது கிரா மத்தில் பல தரப்பட்ட பிரச் சினைகளுக்கு மக்களாகிய நாங்கள் முகம் கொடுத்துக் கொண்டு வருகின்றோம். குறிப்பாக மின்சாரப் பிரச் சினை, மழை காலத்தில் யானைகளின் அட்டகாசம், பொதுக்கட்டடம் இன்மை, குடிதண்ணீர் வசதியின்மை, ஒழுங்கான வடிகால் இன் மையும் சீரற்ற வீதியும், பெண்களின் சுயதொழில் வாய்ப்பின்மை போன்ற பல் வேறு பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டு வருவதாக மக்களால் கூறப்பட்டது.

இந்தப் பிரச்சினைகளை பல அதிகாரிகளிடம் தெரி வித்தும் இன்னமும் சரியான பதில் கிடைக்கவில்லை எனவும் கூறப்பட்டது.

கடைசியில் முசலி பிர தேச பிரஜைகள் குழுவின ருக்கு கடிதம் மூலம் இந்தப் பிரச்சினை தெரியப்படுத்தப் பட்டது. இதனை முன்னிட்டு கடந்த 15-08-2012 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு தொழில் அனைத்தையும் நிறுத்திவிட்டு எமது கிராம மக்களின் பிரச்சினைக்கு ஒரு நல்லபதில் பெற்றுத்தர கோரி பிரதேச சபை தவிசாளருக்கு கடிதம் ஒன்றை கையளிப் பதற்கான தீர்மானத்தை மேற்கொண்டு குறித்த கடி தத்தைக் கையளித்துள்ளோம் - என்றுள்ளது. (எ-12)

# முதியவர்களை மதித்து வழங்குங்கள் ஆசனத்தை

## பஸ்களில் துண்டுப் பிரசுரங்கள்




வவுனியா, ஓக.27

போக்குவரத்தில் ஈடு படும் பஸ்களில் முதியவர் களுக்கு ஆசனங்களை வழங்க வேண்டும் என்ப தை வலியுறுத்தும் துண் டுப் பிரசுரங்கள் இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்களில் ஒட்டப்பட் டுள்ளன.

போக்குவரத்து மற்றும் பொதுச் சேவை என்பவற்றில் முதியவர் கள் எதிர் நோக்கும் அசௌகரியங்களை நிவர்த்தி செய்யும் வகை யில் வவுனியா மாவட்ட சமூக சேவைகள் திணைக் களத்தால் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு நடவடிக் கையாக போக்குவரத்தில் ஈடுபடும் முதியவர்களுக்கு முன்னுரிமை வழங்கும் அடிப்படையில் "இது முதி யவர்களுக்கு ஒதுக்கப் பட்ட ஆசனம்'' என்ற வாசகம் அடங்கிய துண்டு கள் (ஸ்ரிக்கர்) அரச பஸ்களில் ஒட்டப்பட் டன.

வவுனியா மாவட்ட சமூக சேவைகள் திணைக் கள சமூக சேவைகள் அதிகாரி எஸ்.ஸ்ரீனிவாசன் தலைமையில் இடம்பெற் றது.

இந்த நிகழ்வில் யு.என். எச்.சி.ஆர். பிரதிநிதிகள் பிரட்சுவா, திருமதி நீகா, திருமதி பத்மினி பாலசந் திரன் மற்றும் வடமாகாண சமூக சேவைகள் திணைக் கள தலைமைப்பீட உத்தி யோகத்தர் ந.இராஜமனோ கரன், வவுனியா இலங்கைப் போக்குவரத்து சபையின் சாலை முகாமையாளர் எஸ். குணராஜா, உதவி முகாமை யாளர் சந்திரன், பொறியிய லாளர் விமலநாதன் கலந்து கொண்டனர்.

மேலும் சமூக சேவை உத்தியோகத்தர்களான செல்வி த.நந்தினி, த.தர் மேந்திரா, கே.இராஜசேகர், முதியோர் உரிமைகள் மேம் பாட்டு உத்தியோகத்தர் திருமதி தனுசியா பாலா, வவுனியா மாவட்ட முதி யோர் சம்மேளனத் தலை வர் வைத்தியர் கந்தையா இராமச்சந்திரன், முதியவர் கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதற்கான நிதியை யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் வழங்கி இருந்தமை குறிப் பிடத்தக்கது. (எ-400-402)

# மன்னார் வெள்ளாங்குளத்தில் 53 வீடுகள் இந்திய அமைச்சர் செல்ஜா கையளிப்பு

மன்னார், ஓக.27

மன்னார் மாவட்டம் வெள் ளாங்குளத்துக்கு அருகில் உள்ள கணேசபுரத்தில் இந் திய பரீட்சார்த்த வீடமைப் புத் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்ட 53 வீடுகள் உரிய பயனாளிகளிடம் அண் மையில் கையளிக்கப்பட் டன.

**உள்நாட்டில் இடம்பெயர்ந்து அகதிகளாக்கப் பட்ட மக்களுக்கு வாழிடங்களை அமைத்துக் கொடுக்கும் செயற்றிட்டமாக இந்தியா இதனை மேற்கொண்டு வருகிறது.**

இந்திய கலாசார வீட மைப்பு, வறுமை ஒழிப்பு அமைச்சர் குமாரி செல்ஜா, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா, கலாசார அமைச்சின் மேல திக செயலாளர் ரவீந்திரசிங், இந்திய தொல்பொருள் ஆய்வு மையப் பணிப்பாளர் கௌதம் குப்தா, இந்திய துணைத் தூதுவர் வெங்கடாசலம் மகாலிங்கம் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்ட னர்.

நிகழ்வின் ஞாபகார்த்த மாக நினைவுப் பட்டயம் திரை நீக்கம் செய்து வைக்கப்பட் டது. அதனைத் தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட பயனா ளிகளிடம் வீட்டுப்பத்திரங் கள் கையளிக்கப்பட்டன.

கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்ற இந்த நிகழ்வில் கலந்து கொண்ட இந்திய கலாசார வீடமைப்பு, வறுமை ஒழிப்பு அமைச்சர் குமாரி செல்ஜா உரையாற்றினார். அவர் கூறிய தாவது:-

உள்நாட்டில் இடம் பெயர்ந்து அகதிகளாக்கப் பட்ட மக்களுக்கு வாழிடங் களை அமைத்துக் கொடுக் கும் செயற்றிட்டமாக இந் தியா இதனை மேற்கொண்டு வருகிறது. இதன் காரணமாக இந்தியாவுக்கும் இலங்கைக் கும் இடையே இருந்து வரும் பழமை வாய்ந்த பிணைப்பு மேலும் நீடிப்பதுடன் எதிர் காலத்தில் வலுவடையும் எனவும் தெரிவித்தார்.

ஏற்கனவே இந்திய பரீட் சார்த்த வீடமைப்புத் திட் டத்தின் கீழ் 619 வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன. (ஒ-14)

# குண்டுகள் மீட்பு

அக்கராயன், ஓக.27

பூநகரி, நாச்சிக்குடா, ஜெயபுரம் வடக்குப் பகுதி யில் சிலவகை ஆயுதங்கள் மீட்கப்பட்டு அழிக்கப்பட் டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப்படை யினருடன் இணைந்து நடத் திய தேடுதலின் போது நிலத் தில் புதைத்து வைக்கப்பட் டிருந்த ஆயுதங்கள் மீட்கப் பட்டன என்று பொலிஸார் கூறினர்.

99இலக்கமுடைய இரண்டு குண்டுகள், 89 மில்லிமீற்றர் குண்டு, 30 மில்லிமீற்றர் குண்டு ஆகியவை மீட்கப் பட்டு செயலிழக்க வைக்கப் பட்டன. இவை தவிர முறிகண் டிப்பகுதியிலும் புதன்கிழமை யன்று துப்பாக்கி ரவைகள் ஒரு தொகுதி மீட்கப்பட்ட தாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (உ-4)

# வாய்க்கால் புனரமைக்கப்படுகிறது

துணுக்காய், ஓக.27

மல்லாவிக்குளத்தின் வலது கரை வாய்க்கால் புனர மைப்பு வேலைகள் மிகவும் துரிதமாக நடைபெற்று வரு கின்றன.

925 மீற்றர் தூரத்தைக் கொண்ட வாய்க்காலின் புனரமைப்புப் பணிகளில் தற்போது 240 மீற்றர் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

பொருளாதார அபிவி ருத்தி அமைச்சின் நிதியுதவி யுடன் இந்த வாய்க்கால் புனரமைப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-415)

# புதிய அமைப்பு வீதியில் பயணம் செய்வோர் சிரமம்

வவுனியா, ஓக.27

பூந்தோட்டம் புதிய அமைப்பு வீதி கடந்த இரண்டு வருடங்களாகப் புனரமைப்புச் செய்யப்படாததால் அந்த வீதியால் பயணம் செய்யும் பயணிகள் பெரும் அசௌ கரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வவுனியா நகர சபைக் குச் சொந்தமான இந்த வீதி சுமார் 200 மீற்றர் நீளமுடை யது. இந்தப் பகுதியில் சுமார் 150 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இந்த மக்க ளுக்கான பிரதான போக்கு வரத்துப் பாதையாக இது விளங்குகின்றது.

வீதியெங்கும் குன்றும் குழியுமாகக் காணப்படுவ தால் இரவு நேரங்களில் பய ணம் செய்வோர் விபத்துக்கு உள்ளாகக் கூடிய சூழ்நிலை கள் காணப்படுகின்றன.

இது தொடர்பாக வவு னியா நகர சபையிடம் கடந்த 2010 ஆம் ஆண்டு முறைப் பாடு செய்யப்பட்டது. அன்று முதல் இன்று வரை நகரசபை அலுவலகத்துக்கு அலைந்து திரிந்ததுதான் மிச்சம் என சலித்துக் கொள்கின்றனர்.

தற்போது பருவமழை ஆரம்பமாகும் காலம் ஆகை யால் மழை பெய்யத் தொடங் கினால் இந்த வீதியினூடாக போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்ப டும். இதனைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட வர்கள் உடன் நடிவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுத் துள்ளனர். (எ-400)

திருமலை காளிகோயிலில் சரத்பாபு



தல யாத்திரை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள தென்னிந்தியாவின் பிரபல திரைப்பட நடிகர் சரத்பாபு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயத்துக்குச் சென்றபோது சோ.இரவிச்சந்திரக் குருக்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

# அநியாயத்தைப் பேசினால் அது இனவாதமா?


## ரவூப் ஹக்கீம் கேள்வி

அம்பாறை,ஓக.27

எங்களுக்கு நடக்கும் அநியாயத்தைப் பேசினால் அது இனவாதமா? இதுவரை நிர்வாக ரீதியாக நடக்கின்ற எத்தனையோ அநியாயங்களைப் பட்டியல் போட்டுப் பேசலாம் என்று நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட வேட்பாளர் கே.எம்.ஏ.ஜவாத்தை ஆதரிக்கும் தேர்தல் பிரசாரக் கூட்டம் கல்முனை, கடற்கரை வீதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இன்று முஸ்லிம் காங்கிரஸ் இனவாதம் பேசுவதாக



அரசில் அங்கம் வகிப்போர் பேசுகிறார்கள். எது இனவாதம்? எங்களுக்கு நடக்கும் அநியாயத்தைப் பேசினால் அது இனவாதமா? என்று அவர் கூறினார்.

முஸ்லிம் சமூகத்தை ஏளனப்படுத்துகின்ற, -கொச்சைப்படுத்துகின்ற எத்தனையோ விடயங்களை செய்துவருகின்றனர். இவை எல்லாவற்றுக்கும் பரிகாரம் தேடுகின்ற ஒரு காரணமாகத்தான் இந்தத் தேர்தலை நாம் பார்க்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ச).

# தமிழரின் போராட்டம் வெற்றி ஈட்டும் நிலையில்

## முன்னாள் எம்.பி. சந்திரகாந்தன் தெரிவிப்பு

அம்பாறை,ஓக.27

தமிழர்களின் உரிமையை, சுதந்திரத்தைக் கோருகின்ற ஒரேயொரு கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழர்கள் ஆதரிப்பதன் மூலமே அதனை உறுதிப்படுத்த முடியும். இது எமக்கான இறுதிச் சந்தர்ப்பம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் அம்பாறை மாவட்ட வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

எமக்கு திணிக்கப்பட்ட இந்தத் தேர்தல் மூலம் தமிழ்த் தேசியத்தையும், எமது உரிமையையும், இணைந்த வடக்கு - கிழக்கையும், சுதந்திரத்தையும் பெறுவதற்கு இந்த மஹிந்த அரசு ஒரு சந்தர்ப்பத்தை எமக்குத் தந்துள்ளது.

தமிழர்களே! நீங்கள் நேர்மையாகவும், தமிழ்த் தேசியப் பற்றுடனும், எமது கொள்கைகளில் இருந்து மாறுபடாமலும், எமக்காக வித்தாகிய எமது மாவீரர்களை மனதில் நிறுத்தி வருகின்ற தேர்தலில் கூட்டமைப்பை ஆதரிக்க வேண்டும்.

எமக்கு உரிமை வேண்டும்; எமது தேசியம் வேண்டும்; எங்களது காணி எமக்கு வேண்டும்; எம்மை நாமே ஆளவேண்டும். எமது நியாயமான போராட்டத்தின் வெற்றி வெகு தொலைவில் இல்லை. ஆகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கரங்களைப் பலப்படுத்துவோம்; எமது உரிமையை வென்றெடுப்போம்- என்றார். (ச-சி)

# இழந்த உரிமைகளைப் பெற வீட்டுக்கு போடுவோம் புள்ளடி

## கூட்டமைப்பு வேட்பாளர் அழைப்பு

எருவில்,ஓக.27

**கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழர் வாக்களிப்பைச் சிதறடிக்கும் நோக்கில் ஆளும்தரப்பு சகலவிதமான சாதனைகளையும் தேர்தல் களத்தில் நிகழ்த்தி வருகின்றது. இவ்வாறான நிலையில், இழந்த உரிமைகளை மீளவும் பெற வீட்டுக்கு புள்ளடி போட்டு எமது இலட்சியத்தை நிறைவேற்றுவோம்.**



- இவ்வாறு கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் இரா.துரைரெத்தினம் தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்பற்று பிரதேச செயலக பிரிவுக் குட்பட்ட உன்னிச்சை ஆறாம் கட்டைக் கிராமத் தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில்உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

உரிமையா? சலுகையா? என்ற தமிழ் மக்களின் அறு பத்திரண்டு ஆண்டுகால ஜீவமரணப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் இலங் கைத் தமிழர்கள் கிழக்கின் பெரும்பான்மையினர் இல்லை என்பதை நிரூபிக்கவும் கிழக்குத் தமிழர்கள் சிங்கள அரசுடன் ஆட்சியைப் பகிர்ந்து சகல உரிமைகளையும்பெற்று ஐக்கியத்துடன் வாழ்கிறார்கள் என்பதை சர்வதேசத்திற்கு நிரூபிக்கவும் அரசு பகீரதப் பிரயத்துடன் செயற்பட்டு வருகிறது.

சர்வதேசமும், புலம்பெயர்ந்த தமிழரும் கூறுவது போல் இங்கு இனப்பிரச்சினை ஒன்று இல்லை என்பதை சர்வதேசத்துக்கு எடுத்துக்காட்டவும் முயற்சித்து வருகிறது அரசு. அதேசமயம் கிழக்கு மாகாணத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வை நடைமுறைப்படுத்தாது தட்டிக் கழித்து விட்டு வட மாகாணத்தில் உள்ளவர்கள் தான் பிரச்சினை என வெளிப்படுத்தி அரைகுறைத் தீர்வொன்றைத் திணித்து சர்வதேச அழுத் தத்திலிருந்தும் மனித உரிமை மீறல் தொடர்பான பிரச்சினைகளில் இருந்தும் தப்பித்துக் கொள்ளவும் அரசு பகீரதப் பிரயத்தனத்தில் இறங்கியுள்ளது.

எனவே, கிழக்குத் தமிழர்கள் விழிப்போடு இருந்து தங்கள் உரிமைகளைப் பாதுகாத்து சர்வதேசத்திற்குத் தமது பிரச்சினைகளையும் தேவைகளையும் தெளிவுபடுத்த சரியான முறையில் வாக்களிப்பில் கலந்து தமிழர் தம் உரிமையைப் பாதுகாக்க வேண்டும். - என்றார்.

(ச-31)

# தேசத்துக்கு மகுடம் கண்காட்சி; கிழக்கில் வீதிகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.27

2013 தேசத்துக்கு மகுடம் கண்காட்சி கிழக்கு மாகாணத்தில் இடம்பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி திணைக்களம், உள்ளூராட்சி சபைக்குட்பட்ட அனைத்து வீதிகளும் நவீன தரத்தில் மீளப் புனரமைக்கப்படவுள்ளன.

இதற்காக அரசு 4000 மில்லியன் ரூபாவை முதற்கட்டமாக வீதி அபிவிருத்திக்காக கிழக்கு மாகாணத்தில் செலவிடவுள்ளது.

அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு, பொலநறுவை ஆகிய மாவட்டங்களை முன்வைத்தே வீதி அபிவிருத்தி விரைவில் இடம் பெறவுள்ளன. (ச-50)

# சுகாதாரப் பரிசோதகர் பளீலின் பிள்ளைகளுக்கு நிதியுதவி

திருகோணமலை, ஓக. 27

பொதுச் சுகாதார பரிசோதகராகக் கடமையாற்றி மறைந்த கே.எம்.எம்.பளீலின் பிள்ளைகளின் கல்விக்காக நிதியுதவி வழங்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை கிண்ணியாவில் நடைபெற்றது. இலங்கைப் பொதுச் சுகாதார பரிசோதகர் எச்.ஏ.ஈ.டி.சுரவீர தலைமையில் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய பிரதேசங்களிலிருந்து கிண்ணியாவுக்கு வருகை தந்த குழுவினர் இந்த நிதியுதவியை நேரடியாகப் பிள்ளைகளிடம் கையளித்தனர்.

தம்பலகாமம் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பில் ஈடுபட்டிருந்தபோது பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கே.எம். எம். பளீல் தாக்கப்பட்டு உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

(ச)

# சிறுவர்களை பாதுகாக்க விழிப்புணர்வு

அட்டாளைச்சேனை,ஓக.27

அரச நிறுவனங்கள் மற்றும் சமூக சேவை அமைப்புகளினூடாக பிரதேச மட்டத்தில் சிறுவர்களை துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாத்தல் எனும் தொனிப் பொருளில் கருத்தரங்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை அட்டாளைச்சேனையில் இடம் பெற்றது.

இந்தக் கருத்தரங்கில், சிறுவர்களை துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாக்கும் பொருட்டு, அட்டாளைச்சேனை பிரதேச மட்டத்தில் 30 பேரைக் கொண்ட குழுவொன்று உருவாக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சிறுவர்களின் உரிமைகளை மையப்படுத்திய நிகழ்வுகளும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# நுளம்பைக் கட்டுப்படுத்த பல்வேறு செயற்றிட்டங்கள்

எருவில்,ஓக.27

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கரையோரப் பகுதியில் வெள்ள நீர் தேங்கி நிற்பதை தடுப்பதற்காகவும் நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்தவும் பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு மாநகர சபையுடன் இணைந்து மட்டக்களப்பு பொலிஸார் மற்றும் பொதுமக்கள் இணைந்து இந்தச் செயற்றிட்டத்தை மேற்கொண்டுவருகின்றனர்.

இதன் ஆரம்பப் பணிகள் மட்டக்களப்பு புதூர் வீதியில் உள்ள கால்வாய்கள் துப்புரவு செய்யப்பட்டு அதில் படிந்திருந்த மண் அகற்றப்பட்டன.

நுளம்புப் பெருக்கத்தை தூண்டும் பற்றைகள் அகற்றப்பட்டு கால்வாயில் இருந்து கழிவுகளும் அகற்றப்பட்டன.

இதன் ஆரம்ப நிகழ்வில் மட்டக்களப்பு பொலிஸ் நிலைய சுற்றாடல் பிரிவு பொலிஸ் பரிசோதகர் ஜயசுந்தர, மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர் ரம்ழான், பொலிஸ் அதிகாரிகள், மாநகரசபை ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டமாகவும் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது. மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை தொடக்கம் புதூர் விமான நிலையம் வரையிலான கால்வாய்கள் துப்புரவு செய்யப்பட்டு அப்பகுதிகள் அழகுபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ச-31)

# தேர்தலைக் கண்காணிக்க பயிற்சி

அம்பாறை,ஓக.27

தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் அம்பாறை மாவட்ட தேர்தல் கண்காணிப்பு உத்தியோகத்தர்களாக கடமையாற்றுவோருக்கு பயிற்சி அளிக்கும் நிகழ்வு கல்முனை, சேனைக்குடியிருப்பிலுள்ள மாவட்ட அலுவலகத்தில் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

இதில் கண்காணிப்பாளர்களின் பணிகள், கள நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் போன்றன தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டன.

பவ்ரல் அமைப்பின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் கே.சத்தியநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், அந்த அமைப்பின் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீதரனினால் பயிற்சிகள் வழங்கப்பட்டன. (ச)

## அ.தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் இலங்கை விவகாரம் எடுக்கப்படும்

அ.தி.மு.கவின் செயற்குழுக் கூட்டம் சென்னையில் இன்று திங்கட்கிழமை நடைபெறுகிறது. இதில் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்கள் ஆராயப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன. இவற்றில் இலங்கை தமிழர் பிரச்சினை தமிழக மீனவர் மீதான தாக்குதல், இந்தியாவில் இலங்கைப் படையினருக்குப் பயிற்சியளிக்கும் நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்படவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

கட்சியின் தலைமை அலுவலகத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் இந்த கூட்டத்தில் கட்சியின் பொதுச்செயலாளரும், தமிழக முதல்வருமான ஜெயலலிதா கலந்து கொண்டு பேசுவார். இதில், அமைச்சர்கள் உள்ளிட்ட செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொள்கின்றனர்.

கூட்டத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினை, காவிரி நதிநீர் பிரச்சினை, தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் தாக்கு தல் போன்ற விடயங்களில் மத்திய அரசின் நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படுவதுடன் மத்திய அரசின் நிலைப்பாட்டையும் அறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. தமிழ்நாடு, இலங்கைப் பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது அக்கறை செலுத்தாத மத்திய அரசை கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (10)

## கைவிடப்பட்ட சைக்கிள்கள் பொலிஸாரால் மீட்பு

வவுனியாவில் நான்கு சைக்கிள்களும் மாங்குளத்தில் ஒரு மோட்டார் சைக்கிளும் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நான்கு சைக்கிள்களையும் திருடிய சந்தேகத்தில் ஒருவரைக் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

69285802, 69354667, 69531413 மற்றும் 69562212 ஆகிய இலக்கங்களையுடைலுமாலா வகைச் சைக்கிள்களையே பொலிஸார் மீட்டுள்ளனர்.


மாங்குளம் புதிய ஹபறணையில் கைவிடப்பட்ட நிலையிலேயே Npnw 3942 எனும் இலக்க முடைய மோட்டார் சைக்கிள் ஒன்றை கடந்த புதன்கிழமை பொலிஸார் மீட்டுள்ளனர். உரியவர்கள் அடையாளத்தை உறுதிப்படுத்திப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (எ-4)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை சீவரத்தினம்

(உரிமையாளர் Tissa Stores வெள்ளவாயா)



அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் 15 A, Colling wood place, wellawatta யை வசிப்பிடமாகவும் தற்போது Perth Australia வை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சீவரத்திணம்கடந்தவெள்ளிக்கிழமை 24.08. 2012 வெள்ளிக் கிழமை அகாலமரண அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் சிரேஸ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் பார்வதிதேவியின் பாசமிகு கணவரும் குகனேஸ்வரி, கோபாலச்சந்திரன், தர்ஷினி, விமலச்சந்திரன், வாசுகி, அருட்செல்வன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சூரியகுமாரன், மஞ்சுளா இராமநாதன், விஜிதா, பிரதீஷ், திவாகரி ஆகியோரின் அன்பு மாமனும், அபிராமி, பகீரதி, சாரங்கன், மதுரா, அபிமன்யூ, சன்ஜேய், யானா, சுவாதி, விதுரன் ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்றவர்களான இராசசிங்கம், நாகரத்தினம் மற்றும் செல்வரத்தினம், கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காண்டீபன், காந்தரூபன், இலட்சுமிதேவி, சரஸ்வதிதேவி, கோகிலாதேவி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 15 A, Colling wood place, வெள்ளவத்தையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை மறுதினம் புதன்கிழமை 29.08.2012 இறுதிக்கிரியைகள் இடம் பெற்று கல்கிசை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.

15 A, Colling wood place,
Colombo -06. (சி/2834)(3.14)

## 196 பேருக்கு மலசலகூடம்

வவுனியா மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட 196 பேருக்கு கனேடிய செஞ்சிலுவைச் சங்க நிதி உதவியுடன் மலசலகூடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன என்று இலங்கை செஞ்சிலுவைச் சங்க வவுனியா மாவட்ட பொருளாளர் எஸ்.தனபாலசிங்கம் தெரிவித்தார்.

மாறாய் இலுப்பை, மன்னகுளம், ஒலுமடு, மாமடு, சின்னடம்பன், புளியங்குளம், அக்கிரபுர, கொக்கு வெளி போன்ற பகுதிகளைச் சேர்ந்த மீளக் குடியமர்ந்த மக்களுக்கும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மக்களுக்குமே மலசலகூடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டன. இந்த மக்களுக்கு சுகாதார விழிப்புணர்வு, சத்துணவுத் திட்டம் தொடர்பான விளக்கமும் உதவியும், சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கான வழிமுறைகள் மற்றும் சிறுவயதில் இடம்பெறும் சட்ட விரோத திருமணங்களை தடுத்தல் போன்ற வேலைத் திட்டங்களையும் செய்து வருகின்றோம் - என்றார். (எ-402)

# மரண அறிவித்தல்கள்

## இளையதம்பி சித்திரவடிவேல்

(தங்கராசா)



வேலணை கிழக்கு 3 ஆம் வட்டாரத்தை பிறப்பிட மாகவும் மன்னார் பெரிய கடையை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சித்திரவடிவேல் (தங்கராசா) நேற்று (26.08.2012) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி- இராசம்மா தம்பதியரின் செல்வப்புதல்வனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசுப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற லீலாவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் துரைராசா (கனடா), இராசலட்சுமி, உதயராணி, பூமணி, சுந்தரலிங்கம், பாலசிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரனும் சரோசினிதேவி, சிறிஸ்கந்தராசா(கனடா), ஆகியோரின் மைத்துனரும் கார்த்தீபன் (லக்சுமி ஸ்ரோஸ் மன்னார்), ரதிகா, விமலதாஸ் ஆகியோரின் அன்புத்தந்தையும் சோபிகா, வசீகரன், ஆகியோரின் மாமனாரும் தனுசனன், சாம்பவி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2012) திங்கட்கிழமை பி.ப 5 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மன்னார் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரிய கடை வீதி,
மன்னார். (22252) (15-14)

தகவல்
குடும்பத்தினர்.

## சின்னத்தம்பி தங்கம்



மாதகலைப் பிறப்பிடமாகவும், மாகியப்பிட்டி சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி தங்கம் நேற்று (26.08.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகர் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், இராசரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), காலஞ்சென்ற இராசமணி மற்றும் புவனேஸ்வரி, சோதி (கொலன்ட்), ஜெயராணி, சிவபாலன் (சுவிஸ்), நிர்மலா ஆகியோரின் அன்புத் தாயும், குணமணிதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை சுதுமலை வடக்கு த.க. பாடசாலை), காலஞ்சென்றவர்களான செல்வராசா, தவராசா மற்றும் தவச்செல்வம் (கொலன்ட்), விஜயராஜா, குணதேவி (சுவிஸ்), சிவாஜி ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி பகீரதன்- விஷாந்தின் (சுவிஸ்), திருமதி ஜெனார்த்தனன்- தர்ஷிகா (லண்டன்), மகாதேவா - றஞ்சினிதேவி (பிரான்ஸ்), திருமதி ஞானசீலன் - மஞ்சுளா (பிரான்ஸ்), திருமதி கலைச்செழியன்- தயாளினி (பிரான்ஸ்), திருமதி யோகேஸ்வரன் - பிரமிளா (கனடா), திருமதி விக்னேஸ்வரன் - சுகன்ஜா (கனடா), திருமதி துஷ்யந்தன் - இரகுமலா (கனடா), திருமதி ஜெயக்குமார் - சிவறஞ்சினி (கனடா), சிவகுமரன் - செல்வபாலினி (பிரான்ஸ்), அனித்தா, தர்ஷன் (மலேசியா), லக்ஷன், தனுஜா, தயாளன் (கனடா), கிருஷாந்தன் (ரஷ்யா), கோசிகன், யாழினி ஆகியோரின் அன்பு பேர்த்தியும், தருணிகன், தேனுஜா, கோசிகா (சுவிஸ்), அக்சரன், ராகுல், டிலக்சன், நிதர்சன், வைஸ்ணவி, ஆதினி (பிரான்ஸ்), அஸ்வினி, அக்ஷஜா, அனிக்கா, கிருத்திக், கம்சிகா (கனடா), ஆதிரை (பிரான்ஸ்), ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (27.08.2012) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் சண்டிலிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டுப்பனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.விஜயராஜா
(மருமகன்)

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய். (22253)(3.14)

## இறுதிக் கிரியை நேரமாற்றம்

### திருமதி சின்னத்தம்பி யோகேஸ்வரி (பூமணி)



அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2012) திங்கட்கிழமை பி.ப.3.00 மணியளவில் 163,கச்சேரி- நல்லூர் வீதியிலுள்ள அவரது இல்லத் தில் நடைபெற்று மாலை 5.00 மணியளவில் பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

163, கச்சேரி-நல்லூர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (22248)(5-6-7)

தகவல்:
பிள்ளைகள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
11 . 08 . 1955

ஆண்டவன் அடியில்
28 . 07 . 2012



## அமரர் சின்னத்தம்பி வீரசிங்கம்

கண்ணின் இரு மணி போல் எம்மைக் காத்த தந்தையே
இன்று கண்ணீர் மல்கவிட்டுச் சென்றதேனோ?
பொல்லாத காலனவன் திடீர் என பறித்து விட்டானோ?உனை
இப்புவியில் நல்லவர் வழ்வதெல்லாம் குறுகிய காலம்
என்ற உண்மைதனை உனது மறைவின் பின்
எமக்கு உணர்த்திச்சென்றீரோ....
எத்தனை நாள்கள் நகர்ந்தாலும்
எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
உமது பிரிவினை எங்கள் உள்ளங்கள்
ஏற்க மறுக்கின்றது எங்கள் அன்புத்தெய்வமே.....

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 27.08.2012 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

வேம்பிராய் வீதி,
மந்துவில் கிழக்கு, கொடிகாமம்.

மனைவி, பிள்ளைகள்.

**வீடு வாடகைக்குத் தேவை**

சங்கானை, சண்டிலிப்பாய், ஆனைக்கோட்டைப் பகுதிகளில் பிரதான வீதிகளிற்கு அருகில் வீடு வாடகைக்குத்தேவை.
தொடர்பு:-0776621754 (2226-15-14)

**வேலையாள்கள் தேவை**
**ஒமேகா பியூட்டி சென்ரர்**

சிறந்த முறையில் வேலை செய்யக்கூடிய பெண் வேலையாள்கள் தேவை.
வயதெல்லை :- (20- 30)
ஒமேகா பியூட்டி சென்ரர்
இல. 335, அரசடி வீதி, நல்லூர்.
தொலைபேசி இல : 0779861104
(22249)(3.14)

**சிங்கள வகுப்புக்கள் நடைபெறுகின்றன**

விலாசம் - நம்பர் 50
இரத்தின வாசம்
கருவேலடி லேன்,
கொக்குவில் கிழக்கு.
தொடர்பு:- 0777732214
சாவகச்சேரியிலும் நடைபெறுகின்றன.
(22246)(3.6.7)

# அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்க ச.ச. நிலையங்கள் முன்வர வேண்டும்

## நல்லூர் பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.27

தமது பகுதிகளில் சிரமதானப் பணிகளையும் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் முன்னெடுக்க சனசமூக நிலையங்கள் முழுமையான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும் என்று நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப. வசந்தகுமார் தெரிவித்தார்.

சனசமூக நிலையங்களுக்கு நல்லூர் பிரதேச சபை அபிவிருத்திக்காக நிதி உதவிகளை வழங்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை நல்லூர் பிரதேச சபையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குத் தலைமைதாங்கி உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் கூறியதாவது:-

மக்கள் உரிமையுடனும் சுதந்திரத்துடனும் வாழ வேண்டும் என்ற கோட்பாட்டுடன் தேர்தலில் போட்டியிட்ட நாம் அந்த இலட்சியங்களை அடைய பாடுபட வேண்டும்.

மக்களின் உறுதியால் எமக்கு வெற்றி வாய்ப்புக் கிட்டியது. மக்கள் முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் எமது கட்சி உறுதியாகச் செயற்படுகின்றது.

அதேசமயம் பிரதேசத்தின் அபிவிருத்திக்கான திட்டங்களை நடைமுறைப் படுத்துவதிலும் எமது உறுப்பினர்கள் வெற்றி கண்டு வருகின்றனர். ஏற்கனவே இந்தப் பிரதேசத்தில் மோசமாகக் காணப்பட்ட வீதிகள், இருளில் மூழ்கிக் கிடந்த வீதிகள் பல புனரமைக்கப்பட்டு ஒளி வீசுகின்றன.

சனசமூக நிலையங்களை அபிவிருத்தி செய்வதன் ஊடாக அந்தப் பகுதி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும். அதற்காக ஒவ்வொரு உறுப்பினர்களும் தமது சனசமூக நிலையத்தின் ஊடாகத் தமது பகுதிகளுக்கு சேவைகளை வழங்க வேண்டும்.

இப்போது வழங்கப்படும் உதவித் தொகை சிறிய அளவில் உள்ளது. அதனை நல்ல முறையில் பயன்படுத்துங்கள். அடுத்த ஆண்டில் கூடுதலான நிதி உதவியை வழங்க வேண்டும் என்பது எமது விருப்பமாகும். அதற்கான முயற்சிகளை முன்னெடுப்போம்.- என்றார். (ம-7)




சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் இலவச மருத்துவப் பரிசோதனை முகாம் நேற்று சாவகச்சேரி நவீன சந்தையில் இடம்பெற்றது. நீரிழிவு மற்றும் இரத்த அழுத்தம் ஆகிய பரிசோதனைகள் மருத்துவர் லயன் எஸ்.எஸ்.அருளானந்தம் தலைமையிலான குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு மருந்துகளும் வழங்கப்பட்டன. கழகத் தலைவர் லயன் ச.மனோகரன் தலைமையில் நடைபெற்ற பரிசோதனை முகாமில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு சிகிச்சை பெற்றனர். (ம-9)

## தாக்கப்பட்ட நிலையில் இருவர் ஆஸ்பத்திரியில்

தாக்குதல்களுக்கு இலக்கான இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மட்டுவில் தெற்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கிருஷ்ணன் (வயது-60), சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த தங்கவேலு ரவீந்திரன் (வயது-26) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

நேற்று முன்தினம் இரவு தாக்குதல்களுக்கு இலக்காகி காயமடைந்த இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இருபகுதியினருக்கு இடையே நடந்த சச்சரவில் தலையிட்டவர்களே தாக்குதலுக்கு இலக்காகினர் என்று கூறப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-9)

## பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் மருந்து தட்டுப்பாடு இல்லை

வடமராட்சி, ஓக 27

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்கு பற்றாக்குறை இல்லை என்று வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் டி.விநோதன் தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைக்குத் தேவையான மூன்றாம் காலாண்டு மருந்து வகைகள் உரிய காலத்தில் யாழ். பிராந்திய சுகாதாரச் சேவைகள் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டமையால் மருந்து வகைகளின் பற்றாக்குறைக்கு இடமில்லாமல் போய்விட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-8)

## காரைநகர் பிரதேச அபிவிருத்திக்கு உறுப்பினர்களுக்கு நிதி ஒதுக்கீடு

### தீர்மானம் நிறைவேற்றம்

காரைநகர், ஓக.27

காரைநகர் பிரதேசத்தின் அபிவிருத்திக்காகப் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு நிதி ஒதுக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற காரைநகர் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேச சபைத் தலைவர் வே.ஆனைமுகன் தலைமையில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் பிரதேச சபை உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ள வேண்டும் என்று பிரதேச சபை உறுப்பினர் க.பாலச்சந்திரன் கோரிக்கையை முன்வைத்தார்.

கோரிக்கையை ஏற்றுக் கொண்ட சபை அடுத்த ஆண்டு முதல் காரைநகர் பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்காக உறுப்பினர்களுக்கு நிதி ஒதுக்கீடு மேற்கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் தலைவருக்கு இரண்டு லட்சம் ரூபாவும் உப தலைவருக்கு ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவும் உறுப்பினர்களுக்குத் தலா ஒரு லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

சோலைவரி அறவிடுவதற்கு முன் ஏற்பாடாக வீடு வீடாகச் சென்று விவரம் திரட்டல், காரைநகர் பிரதேசத்தில் இயங்கும் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் பிரதேச சபையில் பதிவை மேற்கொண்டு அதற்கான உரிமம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் போன்ற தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. (ம-250)

## குடிதண்ணீர் வழங்க கோரிக்கை

யாழ்ப்பாணம். ஓக. 27

புங்குடுதீவு மற்றும் குறிகாட்டுவான் பகுதிக்குக் குடிதண்ணீர் பெற்றுத்தருமாறு இந்தப்பகுதி மக்கள் தேசிய குடிதண்ணீர் விநியோக வடிகாலமைப்பு சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போதய கடும் வறட்சி காரணமாக இந்தப் பிரதேசங்களுக்கு பவுசர் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு வழங்கப்பட்டுவரும் தண்ணீர் மக்களது அத்தியாவசிய தேவைகளுக்குப் போதுமானதாக இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இதனால் மேலதிகமாக குடிதண்ணீர் விநியோகிப்பதற்கு தேசிய குடிதண்ணீர் விநியோக வடிகாலமைப்பு சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதனை அடுத்து புங்குடுதீவு, குறிகாட்டுவான் பகுதிகளுக்கு குடிதண்ணீரை விநியோகிப்பதற்கு தேசிய குடிதண்ணீர் வடிகாலமைப்பு சபை நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது என்று சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-17)

## தொழில் திணைக்களத்தின் கட்டடப் பணிகள் பூர்த்தி

யாழ்ப்பாணம், ஓக.27

யாழ். பண்ணையில் அமைக்கப்பட்டுவரும் வடமாகாண தொழில் திணைக்களத்தின் கட்டடப் பணிகளில் 90 வீதமானவை பூர்த்தியடைந்துள்ளன என்று வடக்கு மாகாண பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மூன்று மாடிகளைக் கொண்ட இந்தக் கட்டடத்தில் கீழ் மாடி தொகுதியின் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன.

அடுத்த மாதத்துக்குள் இந்தப் பணிகள் யாவும் நிறைவடையும் எனக் கட்டட ஒப்பந்தக்காரருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்று மேலும் கூறினார். (ம-17)

## கடைகள் உடைத்து திருட்டுக்கள்

யாழ்ப்பாணம், ஓக.27

யாழ்.நகர் மற்றும் அரியாலையில் நள்ளிரவில் கடைகள் உடைக்கப்பட்டுப் பணம் உட்பட 16 லட்சத்து 32 ஆயிரத்து 540 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று யாழ். பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீகுகனேசன் தெரிவித்தார்.


கடந்த வாரம் இந்தத் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. யாழ். கஸ்தூரியார் வீதியில் முஸ்லிம் பள்ளிவாசலை அண்மித்துள்ள கடை ஒன்றும் அரியாலையில் உள்ள கடையொன்றும் இரவு நேரம் உடைக்கப்பட்டுப் பணம் உட்பட 16 லட்சத்து 32 ஆயிரத்து 540 ரூபா பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போயுள்ளன.

சம்பவம் தொடர்பில் எவரும் இதுவரை இனங்காணப்படவில்லை. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்- என்று அவர் மேலும் கூறினார். (ம-4)

## கோழிகளுக்கும் நோய்

தற்போது தொடர்ந்து நிலவும் கடும் வறட்சி காரணமாக ஆனைக்கோட்டை மற்றும் சில பகுதிகளில் கோழிகளுக்கு நோய் ஏற்பட்டுள்ளது.

இதனால் இரவு படுக்கைக்கு செல்லும் கோழிகள் இரவில் வீழ்ந்து இறக்கின்றன. இதனால் கோழி வளர்ப்போர் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். (ம-100)



காரைநகர் மாவுதனை பகுதியில் 25 பரப்புக் காணியில் புதிய குளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. லண்டனிலுள்ள காரை நலன்புரி சங்கத்தால் கொள்வனவு செய்யப்பட்டுக் காரைநகர் தெற்கு விவசாய சம்மேளனத்துக்கு வழங்கப்பட்ட காணியில் காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் வீ.கண்ணனின் முயற்சியால் இந்தப் புதிய குளம் அமைக்கப்பட்டுள்ளது. வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இராணுவ பொறியியல் பிரிவால் அமைக்கப்பட்ட இந்தக் குளம் 65 மீற்றர் பரப்பளவைக் கொண்டது. 5 மீற்றர் ஆழமும் 20 ஆயிரம் கனமீற்றர் நீர் கொள்ளளவு உடையதாகவும் இது அமைக்கப்பட்டுள்ளது. (ம-250)

# ஐந்து மில்லியன் ரூபா செலவில் கசூரினா கடற்கரையில் மண்டபம்

## காரைநகர் பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

காரைநகர், ஓக.27

காரைநகர் கசூரினா கடற்கரையில் ஐந்து மில்லியன் ரூபா செலவில் இளைப்பாற்று மண்டபம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று காரைநகர் பிரதேச சபைத் தலைவர் வே.ஆனைமுகன் தெரிவித்துள்ளார்.

காரைநகர் பிரதேச சபையால் பி.எச்.டி.பி. திட்டத்தின் கீழ் 50 லட்சம் ரூபா செலவில் கசூரினா கடற்கரையில் இந்த இளைப்பாற்று மண்டபம் அமைக்கப்படவுள்ளது.

உல்லாசப் பயணிகளின் நலன் கருதி கசூரினா கடற்கரையில் மேலும் பல அடிப்படை வசதிகளை மேற்கொள்ள பிரதேசசபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

கடந்த வாரம் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான இரு சோலர் லைற் கருவிகள் கடற்கரையில் பொருத்தப்பட்டன.

அண்மையில் மக்கள் மீளக்குடியமர்ந்த மடத்துவளவுப் பகுதியில் இரு சோலர் லைற்களும், வலந்தலைப் பகுதியில் ஒரு சோலரும் பொருத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ம-250)

## நடிகை மனோரமா வைத்தியசாலையில்



சென்னை, ஓக.27

பழம்பெரும் நடிகை மனோரமா உடல் நலக் குறைவு காரணமாக மருத்து வமனையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

சென்னை தியாகராய நகரில் குடும்பத்தினருடன் வசித்து வரும் மனோரமா வுக்கு திடீரென காலிலும் இடுப்புப் பகுதியிலும் வலி ஏற்பட்டது. சிகிச்சைக்காக அவரை தனியார் மருத்துவ மனைக்கு நேற்றுமுன் தினம் சனிக்கிழமை காலை அழைத்துச் சென்றுள்ள னர்.

அவரைப் பரிசோதித்த டாக்டர் பிரமோத், தசைப் பிடிப்பு ஏற்பட்டுள்ளதே வலிக்குக் காரணம் என கூறினார். முதுமை காரண மாக ஏற்படும் சாதாரண பிரச்சினைதான் இது; மூன்று நாள்கள் மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை மேற் கொண்டு அதன் பின்னர் வீட்டுக்குச் செல்ல லாம் என வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளார். (வ)

## அணிசேரா நாடுகளின் மாநாடு: ஈரான் செல்கிறார் பிரதமர் மன்மோகன்



டில்லி, ஓக.27

அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் பங்கேற் பதற்காக, பிரதமர் மன்மோகன் சிங் நாளை ஈரான் செல்கிறார்.

ஈரானின் தெஹ்ரான் நக ரில், அடுத்த வாரம் அணி சேரா நாடுகளின் உச்சி மாநாடு நடக்கவுள்ளது. இதில், இந் தியா, பாகிஸ்தான் உட்பட, 120 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கின்றனர். இதில், பங் கேற்பதற்காக, பிரதமர் மன் மோகன்சிங், நாளை செவ் வாய்க்கிழமை டில்லியில் இருந்து புறப்படுகிறார்.

ஈரானில், பிரதமர் மன் மோகன் சிங், நான்கு தினங் கள் தங்கியிருப்பார். 'ஈரா னின் அணு ஆயுதத் திட்டம் காரணமாக, அந்தத் நாட்டின் மீது, பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்றும், அந்த நாட்டுடன் பேச்சு எதி லும் பங்கேற்கக் கூடாது' என் றும், இந்தியா உள்ளிட்ட நாடு களுக்கு, அமெரிக்கா நெருக் கடி கொடுத்து வருகிறது. இந்தநிலையில், பிரதமரின் ஈரான் சுற்றுப் பயணம், முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. (வ)

## அஸாமில் மீண்டும் வெடித்தது வன்முறை

வஹாத்தி, ஓக. 27

அஸாமில் மீண்டும் வன் முறை வெடித்துள்ளது. சிராங் மாவட்டத்தில் ஏற்பட்ட புதிய வன்முறையில் 5 பேர் கொல்லப்பட்டனர். இதைய டுத்து அந்த மாவட் டத்தில் காலவரையற்ற ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளது.

இந்தக் கலவரத்தில் இதுவரை 85 பேர் உயிரிழந் துள்ளனர் என்று அதிகாரிகள் தெரி வித்துள்ளனர். கோக்ர ஜார், சிராங், துப்ரி உள்ளிட்ட மாவட்டங்களில் போடோ பழங்குடியினருக்கும், முஸ் லீம்களுக்கும் இடையே ஏற்பட்ட பயங்கர வன்முறை யில் பாதிக்கப்பட்டு 5 லட்சம் பேர் அகதிகளாக இடம் பெயர்ந்து முகாம்களில் தங் கியுள்ளனர் என்பது நினைவி ருக்கலாம்.

> சற்று கட்டுப்பாட்டில் இருந்த கலவரம் சிராங் மாவட்டத்தில் மீண்டும் வெடித்துள்ளது.

இடையில் சற்று அடங்கி கலவரம் தற்போது சிராங் மாவட்டத்தில் மீண்டும் வெடித்துள்ளது. நேற்று அதி காலையில், பிஜ்னி என்ற இடத்தில் ஐந்து பேர் கத்தி யால் சரமாரியாகக் குத்திக் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து அந்தப் பகுதிக்கு கூடுதல் பாதுகாப் புப் படையினர் விரைந்துள் ளனர். (வ)



உத்தரப்பிரதேச மாநிலம் மொரதாபாத்தில் நடைபெற்ற அன்னை தெரசாவின் பிறந்தநாள் விழாவில் பங்கேற்று அவருக்கு அஞ்சலி செலுத்திய பாடசாலைச் சிறுமிகள்.

# இலங்கை இராணுவத்துக்கு பயிற்சி; கண்டித்து முற்றுகைப் போராட்டம்

### 100 இற்கும் மேற்பட்டோர் கைது



இலங்கை இராணுவத் துக்கு இந்தியாவில் பயிற்சி யளிப்பதைக்கண்டித்து கோவை யில் முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட் டத்தில் ஈடுபட்ட நூற்றுக்கு மேற்பட்டோர் கைது செய் யப்பட்டனர்.

நீலகிரி மாவட்டம் வெலிங் டனில் எம்.ஆர்.சி. என்ற இரா ணுவப் பயிற்சி மையம் உள் ளது. இங்கு கடந்த மாதம் நடைபெற்ற கருத்தரங்கில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த சிலர் கலந்து கொண் டனர். இதற்கு எதிர்ப்புத் தெரி வித்ததால் இலங்கை இராணு வத் தினர் வெலிங்டனிலி ருந்து வெளியேறினார்கள்.

இந்த நிலையில் கடந்த ஜூலை மாதம் இலங்கை இராணுவத்தின் விமானப் படையினர் சென்னை தாம் பரத்தில் பயிற்சி பெற்றனர். இதற்கு கடும் எதிர்ப்பு கிளம் பியதால் அவர்களும் அங்கி ருந்து புறப்பட்டு பெங்களூர் சென்றனர்.

இதற்கிடையில் இலங்கை இராணுவ அதிகாரிகள் 2 பேருக்கு வெலிங்டன் இரா ணுவ மையத்தில் கடந்த 3 மாதங்களாக பயிற்சி அளிக்கப் பட்டு வந்தது. இந்த தகவல் நேற்று முன்தினம் வெளிவந் தது தெரிந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அவர் களை திருப்பி அனுப்ப வேண் டும் என்று கோரியும் கோவை யில் பல்வேறு அரசியல் கட்சி யினர் நேற்று முன்தினம் முற்றுகைப் போராட்டம் நடத்தி னர்.

வெலிங்டனில் இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கு எதிர்ப் புத் தெரிவித்து கோவை மாவட்ட தந்தை பெரியார் திராவிடர் கழகத்தினர் ரெட் பீல் டில் உள்ள இராணுவ மையத்தை முற்றுகையிட முயன்றனர்.

இதற்காக தந்தை பெரி யார் திராவிடர் கழக பொதுச் செயலாளர் கு.ராமகி ருட்டி ணன் தலைமையில் ரெட்பீல் டில் உள்ள இராணுவ மையத்தை முற்றுகையிட கட்சியினர் திரண்டு சென்றனர். அப் போது அங்கு பாதுகாப்புக்கு நின்ற பொலிஸார் அவர் களை தடுத்து நிறுத்தி கைது செய்து வானில் ஏற்றினார்கள்.

முற்றுகைப் போராட்டத் தில் ஈடுபட்டவர்கள் தங்கள் கட்சிக் கொடிகளை ஏந்தி இலங்கை இராணுவம் மற்றும் மத்திய அரசைக் கண்டித்து கோஷங்கள் எழுப்பினர். பின் னர் முற்றுகைப் போராட்டத் தில் ஈடுபட்ட 50 இற்கும் மேற் பட்டோரை பொலிஸார் கைது செய்து வானில் ஏற்றி அழைத் துச் சென்றனர்.

இதேபோல கோவை மாநகர் மற்றும் கோவை மாவட்ட ம.தி.மு.க. சார்பில் முற்றுகைப் போராட்டம் அவினாசி வீதியில் உள்ள கடவுச்சீட்டு அலுவலகம் முன்பாக நடைபெற்றது.

முற்றுகைப் போராட்டத் தில் ஈடுபட்டவர்கள் இலங்கை இராணுவம் மற்றும் மத்திய அரசுக்கு எதிராக கோஷங் கள் எழுப்பினார்கள். அதன் பின்னர் முற்றுகையில் ஈடு பட்ட 60 பேர் கைது செய் யப்பட்டனர். பின்னர் அவர் கள் வானில் ஏற்றி அருகில் உள்ள திருமண மண்டபத் துக்குக் கொண்டு சென்று அடைக்கப்பட்டனர். (வ)

## கடலோர எல்லையின் பாதுகாப்பே எமக்குள்ள மிகப் பெரிய சவால்

### பாதுகாப்பு அமைச்சர் அந்தோனி கருத்து



இந்தியாவின் நீண்ட கட லோர எல்லையைப் பாது காப்பது மிகப்பெரிய சவால் என பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிர மாநில கட லோரப் பாதுகாப்புக்கு நுட்ப மான சென்சர் கருவிகளின் தொகுப்பை ஆரம்பித்து வைத் துப் பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் பேசுகையில் மேலும் தெரி வித்ததாவது:-

இந்தியாவின் மேற்கு கட லோரப் பகுதி பாதுகாப்பு ரீதி யாக மிகவும் ஆபத்து நிறைந் தது. அதனால்தான் கடலோரப் பாதுகாப்புக்கான நுட்பமான சென்சர்கருவிகளின்தொகுப்பை குஜராத்திலும் மகாராஷ்டிரத் திலும் முதலில் செயற்படுத் தத் தீர்மானம் செய்யப்பட் டது. கடலோரப் பாதுகாப்பு நிலைமை வேகமாக மாறக் கூடியது. அச்சுறுத்தல்களை விரைவாக எதிர்கொள்ள எப்போதும் உஷார் நிலையும் ஒருங்கிணைந்த செயற்றிட் டமும் தேவை. மீனவர்களின் பங்கு இதில் மிக முக்கிய மானது. கடலோரப் பாதுகாப் பில் அவர்களின் அதிகபட்ச பங்கேற்பை நாம் உறுதி செய்ய வேண்டும்.

சைபர் அச்சுறுத்தல் அதி கரித்து வருகிறது. இதனை எதிர்கொள்ள உரிய நட வடிக்கைகள் எடுக்கும்படி இராணுவத்தினரை மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. மும்பை தாக்குதலின் போது, மீன் பிடிக்கும் சிறு படகு கூட பயங்கரவாதத் தாக் குதலுக்குப் பயன்படுத்தப்பட லாம் என்பதைத் தெரிந்து கொண்டோம். அந்தச் சம்ப வத்துக்குப் பின்னர் பாது காப்பு பற்றிய நமது கண் ணோட்டம் மிகப் பெரிய மாறுதலை அடைந்திருக்கி றது. -என்றார். (வ)

## பிரதமர் அலுவலகத்தின் பெயரில் ஆறு போலி டுவிட்டர் கணக்குகள்

பிரதமர் அலுவலகத்தின் பெயரில் டுவிட்டர் இணையத் தளத்தில் உருவாக்கப்பட்ட 6 போலி இணையப் பக்கங்கள் நீக்கப்பட்டுள்ளன.

பிரதமர் அலுவலகத்துக்கு டுவிட்டர் இணையத்தளத் தில்தனி இணையப் பக்கம் உள் ளது. ஆனால், பிரதமர் அலு வலகம் என்ற பெயரில் மேலும் 5 போலி இணையப் பக்கங் கள் இருந்ததால் மக்களிடையே குழப்பம் ஏற்பட்டது.

அத்துடன் போலி இணை யப் பக்கங்களில் மத நல்லி ணக்கத்தைச் சீர்குலைக்கும் ஆட்சேபகரமான தகவல்க ளும் இடம்பெற்றிருந்தன. இத னால், அந்த 6 போலி இணையப் பக்கங்களையும் நீக்க வேண் டும் என்று டுவிட்டர் இணை யத் தள நிறுவனத்துக்கு பிரதமர் அலுவலகம் முறைப் பாடு செய்தது.

ஆனால், டுவிட்டர் நிறு வனம் நடவடிக்கை எடுக் க வில்லை. இந்த நிலையில், போலி இணையப் பக்கங்களை நீக்க நடவடிக்கை எடுக்கும் படி மத்திய தகவல் தொழில் நுட்பத் துறையின் சைபர் பாது காப்புப் பிரிவை பிரதமர் அலு வலகம் கேட்டுக் கொண்டது.

அதைத்தொடர்ந்து டுவிட் டர் நிறுவனத்தை சைபர் பாதுகாப்புப் பிரிவு தொடர்பு கொண்டது. 2 மாத கால தாமதத்துக்குப் பின்னர் அந்த 6 போலி இணையப் பக்கங் களை டுவிட்டர் நிறுவனம் நீக்கி உள்ளது. இது தொடர் பாக பிரதமர் அலுவலகத் துக்கு டுவிட்டர் நிறுவனம் கடிதம் எழுதியள்ளது. (வ)

# அணு ஆயுதங்களைக் குறைக்கத் தயார்

## ரஷ்ய ஜனாதிபதி தெரிவிப்பு

பரஸ்பர அடிப்படையில் புதிய அணு ஆயுதக் குறைப்புக்களை மேற்கொள்வதற்கு தயாராகவுள்ளதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா தலைமையிலான ஐரோப்பிய ஏவுகணைப் பாதுகாப்பு கட்டமைப்புக் குறித்து வோஷிங்டன் தனது கவலைகளை வெளியிடும் பட்சத்தில் அணு ஆயுதக் குறைப்பை மேற்கொள்ள முடியும் என்று அவர் கூறியுள்ளார்.



பேரழிவை ஏற்படுத்தும் அணு ஆயுதப் பரவலை தடுப்பது உலகளாவிய நிழ்ச்சி நிரலில் முக்கிய ஒரு விடயம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஹிரோஷிமாவில் நடைபெறும் அணு ஆயுதப் போரைத் தடுப்பதற்கான மருத்துவர்களின் சந்திப் புக்கு எழுத்து மூலம் அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பாவில் ஏவு கணை பாதுகாப்பு கட்டமைப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை அமெரிக்கா ஏற்கனவே ஆரம்பித்துள்ள நிலையில் ரஷ்யாவுடனான இரு தரப்பு உறவுகள் பாதிக்கப் படலாம் என சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

எனினும் ஈரானின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்காகவே இந்தக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் ரஷ்யாவுக்கு எந்தவொரு ஆபத்தும் இல்லை எனவும் அமெரிக்கா கூறியுள்ளது.(வ)

# கைதிகளுக்கு சிறையில் கோலாகல திருமணம்

## மெக்ஸிக்கோவில் நல்வழிப்படுத்தத் திட்டம்

குற்றச்செயல்களில் இருந்து விலக முயற்சிக் கட்டும் என்ற நோக்கில் மெக்சிகோவில் 100 சிறைக் கைதிகளுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

மெக்ஸிக்கோ சிறையில் சிறைத்துறை அதிகாரிகள் 100 சிறைக்கைதிகளுக்கு திருமணம் செய்து வைத்து மகிழ்ந்தனர்.

மெக்ஸிக்கோவில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்கள் பெரும்பாலும் இளைஞர்கள். இவர்கள் போதைப் பொருள் கடத்தலில் கைதானபின், சிறிது நாள்கள் சிறையில் இருந்து பின்னர் விடுதலை ஆகின்றனர். ஆனால், இந்த போதைப் பொருள 'கடத்தல் மன்னர்கள்' திருந்துவதில்லை.

மறுபடியும் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டு திரும்பவும் சிறை வாசம் அனுபவிக்கின்றனர். இவர்களைத் திருத்த பொலிஸார் எவ்வளவோ முயற்சி எடுத்தும் முடியவில்லை என்பதால் கைதிகளுக்குத் திருமணம் செய்து வைக்கும் முயற்சியில் இறங்கி கைதிகளை நல்வழிப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளது.

இதன்படி நேற்றுமுன்தினம் சிறை வளாகத்திலேயே திருமணப் பதிவு நடைபெற்று வரிசையாக 100 ஜோடிகளுக்குத் திருமணம் செய்து அழகு பார்த்திருக்கின்றனர் மெக்சிகோ சிறை வளாக அதிகாரிகள். மெக்ஸிக்கோ இளைஞர்கள் கடத்தும் போதைப் பொருள்கள் அமெரிக்காவுக்குச் செல்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## அணிசேரா மாநாட்டில் பங்கேற்குமாறு ஹமாஸ் தலைவருக்கு அழைப்பு

டெஹ்ரானில் அணி சேரா நாடுகளின் மாநாட்டில் 120 நாடுகளின் தலைவர் கலந்து கொள்கிறார்கள்.

ஈரானில் நடைபெறவுள்ள அணிசேரா மாநாட்டில் பங்கேற்குமாறு ஹமாஸ் இயக்கத் தலைவருக்கு ஈரான் அழைப்பு விடுத்துள்ளது.

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் அணி சேரா நாடுகளின் மாநாடு எதிர்வரும் 29 ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதில் இந்தியா, எகிப்து, வடகொரியா உள்ளிட்ட 120 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள். அமெரிக்கா, இஸ்ரேல் நாடுகள் மாநாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு பாலஸ்தீன ஜனாதிபதி முகமது அப்பாஸுக்கு ஏற்கனவே ஈரான் அழைப்பு விடுத்து இருந்தது. அவரும் பங்கேற்க ஒப்புக்கொண்டிருந்தார்.

இந்தநிலையில் தீவிரவாதத் தாக்குதல்களில் ஈடுபட்டு வரும் ஹமாஸ் இயக்கத்தின் தலைவர் இஸ்மாயில் ஹானியிஹ்கும் ஈரான் திடீர் அழைப்பு விடுத்திருக்கிறது.

இது பாலஸ்தீன ஜனாதிபதி முகமது அப்பாஸுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகளுக்கு கோபத்தை ஏற்படுத்தும் எனக் கருதப்படுகிறது.

# சந்திரனில் முதன்முதல் கால் பதித்த நீல்ஆம்ஸ்ட்ரோங் காலமானார்



சந்திரனில் முதன் முதலில் காலடி எடுத்து வைத்தவர் என்ற பெருமை கொண்டிருந்த அமெரிக்க விஞ்ஞானி நீல் ஆம்ஸ்ட்ரோங் தனது 82ஆவது வயதில் காலமானார்.

அமெரிக்காவின் ஒகியோ மாகாணத்தில் உள்ள வாபா கோனெட்டா என்ற சிறிய நகரில் பிறந்த ஆம்ஸ்ட்ரோங் புருடியூ பல்கலைக் கழகத்தில் பொறியியல் படிப்பை முடித்த பின்னர் தன்னுடைய 30 ஆவது வயதில் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் பயிற்சி விமானியாகப் பணியில் சேர்ந்தார்.

தொடர்ந்து அவர் படிப்படியாக முன்னேறி தனக்கென ஓர் இடத்தைப் பிடித்தார். இந்தநிலையில் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் சந்திரன் குறித்த பல்வேறு சோதனைகளை மேற்கொண்டு வந்தது.

இதற்காக அப்பலோ விண்கலம் தயார் செய்யப்பட்டது. அப்பலோ ஒன்று மற்றும் இரண்டு என தயாரிக்கப்பட்டு இறுதியில் அப்பலோ 11 என்ற விண் கலம் மூலம் விண்ணில் பறந்தார்.

கடந்த சில மாதங்களாக இதய நோயால் அவதிப்பட்டு வந்த அவருக்கு இந்த மாத தொடக்கத்தில் தான் இதய அறுவைச் சிகிச்சை நடந்தது குறிப்பிடத்தக்கது. (வ)

## நேபாளத்தில் படகு கவிழ்ந்து 6 பேர் சாவு

காத்மாண்டு, ஓக.27

நேபாளத்தில் படகு கவிழ்ந்ததில் 6 பேர் உயிரிழந்தனர். மேலும் காணாமற் போன பலரைத் தேடிவருகின்றனர். இதுகுறித்து அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்ததாவது:-

நாட்டின் மத்திய பகுதியில் உள்ள பக்மதி ஆற்றில் 50 பயணிகளுடன் சென்ற ஒரு படகு நேற்று முன்தினம் சனிக்கிழமை திடீரெனக் கவிழ்ந்தது. தகவல் அறிந்த பொலிஸாரும் அந்தப் பகுதி பொது மக்களும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டதில், ஒரு பெண் உயிருடன் மீட்கப்பட்டார். 6 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. 6 ஆண்கள் நீந்திக் கரை சேர்ந்தனர். காணாமற்போன மற்றவர்களைத் தேடும் பணி நடைபெற்று வருகிறது- என்றார். (வ)



அதிபர் தேர்தல் பிரசாரத்தில் பங்கேற்க கேம்ப் டேவிட்டுக்கு தனது மகள்கள் மலியா மற்றும் சஷாவுடன் செல்கிறார் அமெரிக்க ஜனாதிபதி பாரக் ஒபாமா.

# இணைய சுதந்திரத்துக்கு இந்தியா முக்கியத்துவம் தர வேண்டும்

## அமெரிக்கா வேண்டுகோள்

தேசிய பாதுகாப்பில் கவனம் செலுத்தும் அதே நேரத்தில் இணையத்தின் சுதந்திரத்துக்கும் முக்கியத்துவம் தர வேண்டும் என்று இந்தியாவுக்கு அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் விக்டோரியா நூலண்ட் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது:-

வதந்தியைப் பரப்பி வருவதாக டுவிட்டர் இணையத் தளத்தில் உள்ள சில கணக்குகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தியா தெரிவித்துள்ளது. இது தொடர்பாக டுவிட்டர் மட்டுமின்றி, கூகுள், ஃபேஸ்புக் ஆகிய நிறுவனங்களுடனும் இந்திய அரசு பேசி வருவதாகத் தெரிகிறது.

இந்த விடயத்தில் எங்களாலான உதவியைச் செய்வதற்கு நாம் தயாராக உள்ளோம். பேச்சுரிமையையும், இணையத்தின் சுதந்திரத்தையும் கருத்தில் கொண்டு இந்தியா இந்தப்பிரச்சினையை அணுக வேண்டும் - என்றார்.

# ஏவுகணைச் சோதனையில் அமெரிக்காவை நெருங்கும் சீனா

வோஷிங்டன், ஓக.27

ஏவுகணை பாதுகாப்பு சோதனை மற்றும் தொழில் நுட்பத்தில் உலக வல்லரசான அமெரிக்காவை நெருங்கும் முயற்சிகளில் சீனா ஈடுபட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய நீர்மூழ்கிக் கப்பல்களிலி ருந்து ஏவுகணைகளை ஏவும் சாதனங்களை முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கும் நடவடிக்கைகளில் சீனா களமிறங்கியுள்ளது.

இதுகுறித்து, அமெரிக்காவிலிருந்து வெளிவரும் நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிக தூரம் சென்று குறிப்பிட்ட இலக்கைத் தாக்கி அழிக்க வல்ல திறமை கொண்டதும், ஏவுகணை எங்கிருந்து ஏவப்பட்டது என்பதை எவரும் அறிந்து கொள்ள இயலாத வகையிலான தொழில்நுட்பத்தையும் சீனா உருவாக்கி வருவதாக அதில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

# ஈரான் - சர்வதேச அணு சக்திக் கழக ஒப்பந்த முயற்சி தோல்வி கண்டது

ஈரான் இரகசியமாக அணு ஆயுதங்களைத் தயாரிப்பதாக அமெரிக்கா, இஸ்ரேல் குற்றம் சுமத்தி உள்ளதுடன் பல்வேறு தடைகளையும் விதித்துள்ளன.

மேலும் இஸ்ரேல் எந்த நேரமும் ஈரான் மீது தாக்குதல் நடத்தத் தயாராக உள்ளது.

இதனைத் தடுக்கும் விதமாக ஈரானுடன் ஒப்பந்தமொன்றை மேற்கொள்ளும் முயற்சியில் சர்வதேச அணு சக்தி கழகம் இறங்கியது. ஆனால் இந்த பேச்சு தோல்வியில் முடிந்துள்ளது.

இதுகுறித்து சர்வதேச கழகத்தின் தலைமை ஆய்வாளரான ஹெர்மன் நாக் கேட்ஸ் தெரிவித்ததாவது:-

பேச்சு தீவிரமாக நடந் தாலும் கருத்து வேறுபாடுகள் மறையவே இல்லை. இதுவே ஒப்பந்தத்துக்குத் தடையாக இருந்தது - என்றார்.

சர்வதேச அணு சக்தி குழு, தங்கள் பிரதிநிதிகளை ஈரானில் உள்ள பார்ச்சின் இராணுவத் தளத்தைப் பார்வையிட அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டது.

ஈரானின் பிரதிநிதியான அலி அஸ்கார் சுல்தானியா, பேச்சில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

ஈரானின் ஃபோர்டோவில் பூமிக்கு அடியில் யுரேனியம் செறிவூட்டும் அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளதால் சர்வதேச அணு சக்திக் கழகத்தின் ஐயம் மேலும் வலுப்படுகிறது.

விண்வெளிக்கலம் அனுப்பிய படங்களில் பார்ச்சின் இராணுவத் தளத்தில் ஒரு கட்டடத்தை துணிக் கூடாரமிட்டு மறைத்திருப்பது தெரிகின்றது.

இவ்வாறு மறைத்து வைப்பதாலும் இந்த இராணுவத் தளத்தில் அணு ஆயுதத் தயாரிப்பு நடைபெறுகிறதோ என்ற ஐயம் மேலும் வலுத்துள்ளது.

## இந்தோனேஷியாவில் விமானம் மாயம்

இந்தோனேசியாவில் சிறியரக பயணிகள் விமானம் ஒன்று காணாமற்போயுள்ளது. ஆஸ்திரேலியர் உள்ளிட்ட 4 பயணிகளுடன் சென்ற பைபர் பிஏ-31 ரக சிறிய விமானமே காணாமற் போயுள்ளது.

பொர்னியா தீவுப்பகுதியில் சென்றுகொண்டிருந்த போது விமான கட்டுப்பாட்டு அறையின் தொடர்பை இழந்தநிலையில், மாயமாகி உள்ளதாகவும், அந்த வழித்தடத்தில், மீட்பு விமானங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும், செயற்கைக்கோளின் உதவியுடனும் மாயமான விமானம் தேடப்பட்டு வருவதாகவும் இந்தோனேஷிய அரசு தெரிவித்துள்ளது.

# தலிபான்களின் முக்கிய தளபதி விமானத் தாக்குதலில் சாவு



தலிபான்களின் முக்கிய தளபதி நேட்டோ விமானத் தாக்குதலில் உயிரிழந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை நேட்டோ கூட்டுப் படையினரின் விமானத்தாக்குதலில் பாகிஸ்தானில் இயங்கும் தலிபான் குழுவினரின் மூத்த படைத் தளபதி ஒருவரை ஆப்கானிஸ்தானில் வைத்து கொல்லப்பட்டுள்ளார்.


இந்தச் சம்பவம் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதிகளில் அதிகரித்து வரும் வன்முறை பதற்றங்களுக்கு மத்தியில் நிகழ்ந்துள்ளது.

முல்லாஹ் ததுல்லா எனப்படும் பாகிஸ்தானின் பஜாவுர் பழங்குடியினரின் அமைப்பைச் சேர்ந்த தலிபான்களை வழிநடத்தும் தளபதியே இந்த விமானத் தாக்குதலில் ஆப்கனின் குனார் மாகாணத்தின் எல்லை அருகே கொல்லப்பட்டிருப்பதாக நேட்டோ புலனாய்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் 12 போராளிகளும் ததுல்லாவின் துணைப் படைத் தளபதியும் சேர்த்துக் கொல்லப்பட்டதாக குனார் பொலிஸ் தலைவர் ஜெனரல் எல்வாஷ் முஹம்மட் நஷிரி கூறியுள்ளார்.

# எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் பெரும் தீ

## வெனிசுலாவில் 19 பேர் சாவு: 53 பேர் காயம்



உலகின் மிகப்பெரிய சுத்திகரிப்பு நிலையமான வெனிசுலாவில் அமைந்துள்ள எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையில் ஏற்பட்ட மோசமான வெடி விபத்தில் 10 வயது சிறுவன் உட்பட 19 பேர் உயிரிழந்தனர். 53 பேருக்கும் மேற்பட்டோர் படுகாய மடைந்துள்ளனர்.

அமுவே பிளான்ட் எனப்படும் இந்த நிலையம் வெனிசுலாவின் வடமேற்கே உள்ள ஃபல்கொன் மாநிலத்தில் அமைந்துள்ளது.

இந்த மாநில ஆளுநர் ஸ்டெல்லா லூகோ ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:-

இந்த எண்ணெய் நிலையத்தின் அருகிலுள்ள வீடுகள் சிலவும் தீ வெடிப்பினால் சேதமடைந்துள்ளன. தற்போது தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்து விட்டனர். உலகின் மிகப் பெரிய எண்ணெய் உலைகளில் ஒன்றான அமுவே ஒரு நாளைக்கு 645 000 பரல்கள் உற்பத்தி செய்து வருகின்றது.

இந்த உலையில் மேலதிக வெடிப்பு அபாயம் எதுவுமில்லை-என்றார்.

தீ விபத்துக்கான காரணம் இன்னமும் கண்டு பிடிக்கப் படவில்லை.

# காம்பியாவில் ஒரேநாளில் 9 பேருக்கு தூக்குத் தண்டனை

மேற்கு ஆபிரிக்க நாடான காம்பியா நாட்டில் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்ட 9 பேருக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப் பட்டுள்ளது.

கடந்த 27 ஆண்டுகளாக காம்பியாவில் தூக்குத் தண்டனை உட்பட மரண தண்டனைகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

இந்த நிலையில் புதிய ஜனாதிபதியாக உள்ள யாயா ஜெமாஹ் தன்னுடைய ஆட்சியை மிகவும் கடுமையாக்கி உள்ளார்.

அதன்படி குற்றவியல் வழக்குகளில் நீதிமன்றத்தால் குற்றஞ்சாட்டப்பட்ட 8 ஆண்கள், ஒரு பெண் என 9 பேருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து கடந்த 24 ஆம் திகதியன்று அவர்களுக்கு சிறையில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் இருவர் செனகல் நாட்டினர் என்பது குறிப்பிடத் தக்கது.

இதற்கு சர்வதேச பொது மன்னிப்பு என்ற அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

மேலும் 12 இற்கும் மேற்பட்டோர் தூக்குத் தண்டனை பட்டியலில் உள்ளனர் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

காம்பியாவின் இந்தச் செயலுக்கு பிரிட்டன் அரசும் கண்டனம் தெரிவித்துள்ளது.

# சீனாவில் பஸ் - லொறி விபத்து 36 பேர் உடல் கருகிச் சாவு



சீனாவில் பயணிகள் பஸ் ஒன்று இரசாயனப் பொருளை ஏற்றி வந்த லொறி மீது மோதி விபத்தில் 36 பேர் உடல் கருகி உயிரிழந்தனர்.

சீனாவின் வடக்கே ஷாங்ஜி மாகாணத்தில் இருந்து இரண்டுக்கு படுக்கை வசதி கொண்ட சொகுசு பயணிகள் பஸ் ஒன்று 50 பேருடன் சென்று கொண்டிருந்தது.

இந்த பஸ் யானான் தேசிய நெடுஞ்சாலையில் அதிகாலை 2 மணியளவில் வந்து கொண்டிருந்த போது மெத்தனால் என்ற இரசாயனப்பொருளை ஏற்றிச் சென்ற லொறி மீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து நடந்த நொடியில் பஸ் தீப்பிடித்து எரிந்தது. இதில் 36 பேர் தீயில் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர்.

மேலும் பலர் தீக்காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அமெ. துப்பாக்கிப் பிரயோகம் இருவர் உயிரிழப்பு

அமெரிக்காவின் நியூயோர்க் எம்பயார் அரச கட்டடத்திற்கு அருகில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட் டுள்ளது.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் உயிரிழந்ததுடன், மேலும் எட்டுப் பேர் காயமடைந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உயிரிழந்தவர்களில் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட நபரும் இருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. -(வ)

# ஆஸியில் அமெ. படைத் தளங்களா? மறுக்கிறார் வெளியுறவு அமைச்சர்

## அப்படியான கோரிக்கை எதுவுமில்லை என்கிறார் அவர்

ஆஸ்திரேலியாவில் அமெரிக்காவின் நிலையான போர்ப் படைத்தளங்களை அமைப்பது தமது எதிர்பார்ப்பு அல்லவென ஆஸ்திரேலிய வெளிவிவகாரத் துறை அமைச்சர் பொபிகா தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா இதுவரை உத்தியோகபூர்வமாக எந்தக் கோரிக்கையையும் விடுக்கவில்லை. எனினும் படைத்தளங்களை ஸ்தாபிப்பது தொடர்பான கோரிக்கைக்கு அனு மதியளிப்பதற்கு ஆஸ்திரேலியா முன்னுரிமை வழங்காது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சீனாவில் மேம்பட்டு வரும் பூாது காப்பு பலத்தின் முன்னிலையில், ஆசிய பசுபிக் வலயத்தினுள் தமது இராணுவத்தின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

6 மாதகால பயிற்சிகளுக்காக அமெரிக்காவின் மெரின் படைச்சிப்பாய்கள் 2500 பேர் வரை ஆஸ்திரேலியாவின் டாவின் பிராந்தியத்துக்கு தற்போது சென்றுள்ளனர்.

இது சீனாவின் பெரும் கண்டனத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்வாறு தற்காலிகமாக தங்கியிருப்பதற்கு மாத்திரமன்றி நிலையான அமெரிக்க படைத் தளங்களை அங்கு ஸ்தாபிப்பதற்கு அனுமதி வழங்குவது ஆஸ்திரேலியாவின் அபிலாஷை அல்ல-என்றார். (வ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



வையத்துள் 26.11.1959

தெய்வத்துள் 08.09.2011

அமரர்

**மயில்வாகனம் சூரியகுமாரன் (சிறீ)**

(உரிமையாளர்: மயில்வாகனம் நகைக்கடை பருத்தித்துறை)

திதி: ஏகாதசி

ஈராறு மாதங்கள் ஆனபோதும்
சோராது உனைத் தேடுகிறோம்
நேற்றுப் போலுள்ளது உன் பேச்சு
காற்றுக் கூட அமைதியானது -உன்
மூச்சின்றி
கட்டழகான உன் கருந்தேகமும்
உருளைக்கண்ணும் விளையாட்டு உணர்வும்
தொட்டுணர முடியாத உன்
அம்மா, மனைவி, மகன், சகோதர
சகோதரி, மச்சான், மச்சாள்,
மருமக்கள், பெறாமக்கள்,
பாசம் யாவும் பட்டுப்போனதேன் விதியோ?
நம்பமுடியவில்லை எம் வாழ்வில்
நாம் நினைப்பதெல்லாம் நடப்பதில்லை
நடப்பதை நாம் நினைப்பதில்லை என்பதால்
ஈரவிழிகளுடன் எம் இதயம் பகிர்கின்றோம்.

ஓம் சாந்தி !

இல.88, பூதராயர் கோயில் ஒழுங்கை,
பருத்தித்துறை.

ஆறாத்துயருடன்
குடும்பத்தினர்.

(21910)(5-6-7)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 24.04.1948

மறைவு 07.09.2011

**காசிப்பிள்ளை ஸ்ரீசண்முகராஜா**

(முன்னாள் வர்த்தகர்- நாத்தாண்டியா, ஜெயராம் 353,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்)

திதி: ஏகாதசி

அன்பென்ற சொல்லின் அழகான அர்த்தமே!
அப்பா என்று நாம் அழைக்க அரவணைத்த தெய்வமே!
பண்புக்கும் பாசத்துக்கும் இலக்கணமாய்த் திகழ்ந்தவரே!
உம்மோடு நெடுநாள்கள் நாம் வாழ ஆசை கொள்ள!
ஏனப்பா எமை விட்டுச் சென்றீர்கள் தனியாக!
ஆறாத வேதனையில் அழுகின்றோம் தினம் தோறும்!
வற்றாத விழிகளுடன் வாடுகின்றோம் உமை எண்ணி!
எம் கண்கள் எதிரே இனி உம் முகம் தான் தெரியாதோ?
எமை விட்டுச் சென்ற துயர் அது கனவாய் தான் போகாதோ?

39, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

(220170)(5-6-7)


**வீடு விற்பனைக்கு**

ஸ்ரான்லி வீதி, அத்தியடியில் 517/8, இலக்கமுடைய 1¾ 2 பரப்பில் அறையுடன் வீடு விற்பனைக் குண்டு.

தொடர்பு: 077 502 3848,077 803 5236

(22162)(5-6-7)

**கடை வாடகைக்கு**

93 அடி நீளமும், 11 அடி அகலமும் கொண்ட கடை (ஆதி விநாயகர் கோவில் முன்பாக) வாடகைக்கு விடப்படும்.

* ஹோட்டல்கள் தவிர்க்கப்படும்
* தரகர்கள் தேவையில்லை.

தொடர்பு: 024 222 0112

முகவரி: இல.66, புகையிரத நிலைய வீதி, வைரவபுளியங்குளம், வவுனியா.

(20858)(5-6-7)

**காணி விற்பனைக்கு/வாடகைக்கு**

யாழ்.கல்வியன்காடு, சட்டநாதர் வீதிக்கு அருகில் 2பரப்பு காணி விற்பனைக்கு/வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 071 252 0503, 077 131 6095
075 239 0421

(20854)(5-6-7)

**வீடு வாடகைக்கு**

பரந்தன், சந்திக்கு அருகில் 100மீ தொலைவில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 868 5517
077 971 0501

(19312)(5-6-7)


# சோதனைகள் சாதனைகள் ஆகட்டும்

(22)

முற்றிலும் நம்பிக்கை இழப்பதைவிட நமக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியின் மீது நம்பிக்கை வைக்கிறபோது நம்மிடமே நமக்கு நம்பிக்கை தோன்ற ஆரம்பிக்கிறது. இருட்டு நேரத்தில் தனி வழியில் செல்லும்போது அச்சத்தைப் போக்கிக்கொள்ள பாடிக் கொண்டே செல்கிறோம். அல்லது விசிலடித்துக்கொண்டு செல்கிறோம். அமைதியான இரவில் நாம் ஏற்படுத்துகின்ற ஓசை நமக்குத் துணை இருப்பதைப் போன்ற எண்ணம் நமக்கு ஏற்படுகிறது. இது ஒரு மனோதத்துவமே.

அதைப் போலத்தான் சோர்வு ஏற்படுகின்ற போது இறைவனின் துணையை நாடுகின்றோம். நமது முயற்சிகளுக்கு அவன் துணை இருக்கிறான் என்கிற நம்பிக்கை நமக்கு புதிய பலத்தைத் தருகிறது.

சோர்வு நீங்கி உற்சாகத்துடன் வேலையில் ஈடுபட்டு வெற்றிகரமாக அதைச் செய்து முடிக்கிறோம். இந்தக்



கடவுள் நம்பிக்கை எந்த விதத்திலும் மூட நம்பிக்கை ஆகாது.

இதற்குச் சான்று வேறு எங்கேயும் போய் நீங்கள் தேட வேண்டாம். நம்முடைய பிரமாண்டமான கோயில்களைப் பாருங்கள். அதில் வடிக்கப்பட்டுள்ள கலை அழகுமிக்க சிற்பங்களைப் பாருங்கள். எந்திர சாதனங்கள் அதிகம் இல்லாத காலத்தில் இவை எல்லாம் எப்படிச் சாத்தியமாயிற்று?

இதை உருவாக்கியவர்கள் கடவுள் நம்பிக்கையை ஆழமாகக் கொண்டிருந்தவர்கள். இந்த நம்பிக்கை பெரிய சாதனைகளை உருவாக்கும் ஆற்றலை அவர்களுக்குக் கொடுத்தது.

நம்முடைய நாட்டில் மட்டுமல்ல, உலகெங்கும் உள்ள பல நாடுகளிலும் நிகழ்ந்துள்ள பல அற்புத படைப்புக்களுக்கு தெய்வ பக்தியே காரணமாக இருந்திருக்கிறது. பைபிள் நிகழ்ச்சிகள் சாகா வரம் பெற்ற வண்ண ஓவியங்களாக தீட்டப்பட்டுள்ளன. கிரேக்க நாட்டு தேவதைகள் கலைப் பொக்கிஷங்களாக சிற்ப வடிவம் பெற்றிருக்கின்றன. இப்படி எத்தனையோ சொல்லிக் கொண்டு போகலாம். அதாவது தெய்வ பக்தி கடுமையான உழைப்புக்கும், உன்னதமான கலைத் திறமைக்கும் ஆதாரமாக இருந்திருக்கிறது.

ஆக மனிதன் கடவுளிடம் வைக்கின்ற நம்பிக்கை கஷ்டம் ஏற்படுகின்றபோது அவனுக்கு கைகொடுக்கின்றது. எதிர்பாராத விபத்துக்களால் அவன் சோர்வடைகின்றபோது அந்தச் சோர்வு நீங்கி, உற்சாகமாக முயற்சிகளை மேற்கொள்ள கடவுள் நம்பிக்கை துணை இருக்கின்றது.

ஒரு காரியத்தைச் செய்யும்போது அது வெற்றிபெற இறைவன் துணையை நாட வேண்டுமே தவிர, சோம்பேறித்தனத்தில் இருப்பவர்களுக்கு கடவுள் சோறு போடுவார் என்று எதிர்பார்க்கக் கூடாது. அது பக்தியும் ஆகாது.

சாதனைகள் புரிய எண்ணுகிறவர்கள் சோதனைகளைச் சந்திக்க வேண்டியே இருக்கும். வெற்றி பெற்ற மனிதர்கள் இராஜபாட்டையில் நடைபோட்டு வந்தவர்கள் அல்லர். கரடு முரடான பாதைகளைக் கஷ்டப்பட்டு கடந்தே வந்திருக்கிறார்கள். சோதனைகளை வெற்றிகொள்ளாமல் சாதனைகள் இல்லை.

இன்னொரு விடயத்தையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். கடவுள் நம்பிக்கை என்பது கண்மூடித்தனமாக ஒன்றில் நம்பிக்கை வைக்கின்ற விடயம் அல்ல. பிரபஞ்சம் எங்கும் வியாபித்துள்ள பேராற்றலையே இறைவன் என்கிறோம். இந்தப் பிரபஞ்ச பேராற்றல்தான் உயிர்ச் சக்தியாக நம்முள் இருந்து நம்மை இயக்கிக் கொண்டு இருக்கிறது.

நமக்குச் சோர்வு ஏற்படுகின்றபோது இந்தச் சக்தியோடு நாம் தொடர்புகொண்டு நம்மைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். பிரார்த்தனையின் மூலமும், தியானத்தின் மூலமும் பிரபஞ்ச சக்தியோடு நம்மை இணைத்துக் கொண்டு விடலாம். அப்படி இணைத்துக்கொள்ளும்போது பிரபஞ்ச சக்தி நமது உடலுக்குள் பாய்ந்து சோர்வை நீக்கி புதிய ஆற்றலை நமக்கு அளிக்கிறது.

கடவுள் நம்பிக்கையின் மூலம் பிரபஞ்ச ஆற்றலோடு நம்மை இணைத்துக்கொள்ளும் சக்தியை நாம் அடையலாம். கடவுளை நினைத்து மனதை ஒருமைப்படுத்தி பிரபஞ்ச சக்தியை வேண்டும் போது அது தானாகவே நம்மை வந்து அடைகின்றது.

கடவுள் மீது நம்பிக்கை வைப்பவர்கள் சோதனைகளைக் கண்டு மலைப்பதில்லை. சோதனைகள் தங்கள் திறமையை வெளிப்படுத்த இறைவன் அனுப்பிய வரப்பிரசாதம் என்று ஏற்றுக் கொள்கிறார்கள். சோதனைகளைக் கொடுத்த இறைவன் அதை வெல்வதற்கும் துணையிருப்பான் என்று நம்புகிறார்கள். இப்போது மேலே சொல்லியுள்ள கருத்துக்கள் அனைத்தையும் ஒருசேர இணைத்துப் பாருங்கள்.

-பி.சி.கணேசன்- (தொடரும்)

# நாயன்மார்களின் வழிபாட்டு முறைகள் மகிழ்ச்சியான வாழ்வைப் பெற்றுத்தரும்

## சுந்தரர் குருபூசை நிகழ்வில் ஜாக்கிரத் சைத்தன்ய

யாழ்ப்பாணம், ஓக. 27

நாயன்மார் காட்டிய மதவழிபாடுகள் எமது மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாக அமைவதால், அதன் வழி எமது கடமைகளை நிறைவேற்றுவோமானால் மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை நாமும் வாழ்ந்து காட்டமுடியும்.

நாயன்மார்கள் தமது வாழ்நாள்களை இறைவனுக்கும், ஏழை மக்களுக்கும் தொண்டுகள் செய்வதில கழித்தவர்கள். அதனால் தான் மறைந்தும் மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று யாழ். சின்மயாமிசனைச் சேர்ந்த பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய தெரிவித்தார்.

இந்து சமய கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் இடம்பெற்ற சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை தினத்தில் ஆன்மிக சொற்பொழிவு நிகழ்த்தும் போதே ஜாக்கிரத் சைத்தன்ய இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

காலத்துக்கு காலம் சைவசமயத்தை மீண்டும் புதுப்பிப்பதற்காகவே மகான்கள் தோன்றிக் கொண்டிருக்கிறார்கள். எப்பொழுதெல்லாம் தர்மம் அழிக்கப்படுகின்றதோ அப்பொழுதெல்லாம் இறைவன் அவதாரம் எடுக்கின்றான். இறைவன் ஞானிகள் வடிவில் தோன்றி தர்மத்தை நிலைநாட்டுகின்றார்.

அந்த வகையில் நாயன்மார்கள் மிக முக்கியத்துவம் பெறுகின்றார்கள். மகான்கள் வழியில் நாயன்மார் வரிசையில் தோன்றியவர்தான் சுந்தரமூர்த்தி நாயனார்.

இறைவனைத் தன்னுடைய தோழனாக நினைத்து சன்மார்க்கத்திலேயே முக்கியத்துவம் அறிந்தவர். இறைவனே பித்தா என அடியெடுத்துக் கொடுக்க தேவாரப் பாடல்களைப் பாட ஆரம்பித்தவர். அவர் காட்டிய யோக மார்க்கமானது எங்களுடைய வாழ்க்கையை நாம் எவ்வாறு கட்டுப்பாட்டோடு வாழ்ந்து இறை நிலையை-இன்ப நிலையை அடையலாம் என கூறுகின்றது. இன்றைய காலத்தைப் பொறுத்தவரையில் குழந்தைகள் அனைவரும் பெற்றோரை வணங்க வேண்டும்; விபூதி அணிய வேண்டும். ஓம் நமசிவாய மந்திரத்தை குறைந்தது ஐந்து நிமிடங்களாவது உச்சரிக்க வேண்டும். அப்பொழுது தான் வாழ்க்கை மகிழ்ச்சியானதாக அமையும்.

ஆகவே இன்றைய சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நன்னாளில் சைவ ஒழுக்கங்களை சிவசிந்தனையுடனும் நன்மார்க்கத்துடனும் கடைப்பிடித்து மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வோம் - என்றார். (எ-14)

# தென்மராட்சி கிராம சேவகர்களின் சேவைநலன் பாராட்டு விழா

வரணி, ஓக. 27

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடந்த காலங்களில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற இ.பரராஜசேகரம் மற்றும் சி.உமாபாலனுக்கு சேவைநலன் பாராட்டு விழாவும், பாராட்டுப்பத்திரம் வழங்கும் நிகழ்வும் அண்மையில் மீசாலை திருப்புகழ் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு தென்மராட்சி பிரதேச கிராம அபிவிருத்தி சங்கங்களின் தலைவர் வே.விநாயகமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்கள பணிப்பாளர் ஜே.ஜேசி பெலீசியனும் சிறப்பு விருந்தினராக வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் அருள்வேல் செல்வனும் கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி உதவி பிரதேச செயலர் செல்வி ந.ரஞ்சனாவும் யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நவமணி அலோசியஸ் ஜெயராஜனும் கலந்து சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் மேற்படி பிரதேச செயலகத்தில் கிராம அபிவிருத்திப் பிரிவில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களாக கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற திருமதி கு.ரதீஸ்குமாரி, திருமதி சத்தியா தனுராஜ், இ.இராகவன், தனுஜா குமாரகுலசிங்கம் ஆகியோருக்கு பாராட்டு வைபவமும் பாராட்டுப் பத்திரமும் வழங்கப்பட்டது.

மேலும் முதலுதவிப் பயிற்சியில் பங்கு பற்றி சித்தியெய்திய 11 பேருக்கு சான்றிதழ் பத்திரங்களும் வழங்கப்பட்டன. தென்மராட்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி கிராம அலுவலர் சு.ரவீகரன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் தென்மராட்சி பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாச அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர். (எ-122)

# சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்



தாவடி ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ குமார சரவணபவக் குருக்கள் யாழ்.நீதிபதி முன்னிலையில் அகில இலங்கைச் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் இலங்கையில் பல பாகங்களிலும், வெளிநாடுகள் பலவற்றிலும் ஆலயங்களில் சமயக் கிரியைகளைத் தலைமையேற்று நடத்தி வருவதோடு சமயத்தினூடாக சமூகப்பணிகள் ஆற்றிவருபவர்.

பல ஆலயங்களில் நிர்வாக சபையின் ஆலோசகராகவும், சர்வ தேச இந்து குருமார் ஒன்றியத்தின் பொருளாளராகவும் கடந்த காலங்களில் சேவை புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(எ)

# கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 27

நவாலி- ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்தில் தொடர்ச்சியாக 13 நாள்கள் ''குருமுருகனின் தெய்வீகங்கள்'' எனும் தலைப்பில் உரையாற்றிய சொல்லின் செல்வர் எஸ். பாலச்சந்திரன் ஆலய பிரதம குருவால் பாராட்டப்பட்டார்.

கடந்த 13 நாள்களாக கதிர்காம முருகனின் விசேட பூசை வழிபாட்டை தொடர்ந்து குருமுருகன் தொடர்பான சிறப்புச் சொற்பொழிவு இடம்பெற்றது.

அத்துடன் திருப்புகழ், திருமுறை, பெரியபுராணம், கந்தபுராணம், திருக்குறள், மகாபாரதம் போன்ற துறைகளையும் இணைத்து சிறப்புரையாற்றியதை கௌரவித்து ஆலய பிரதம குரு மா.பத்மநாதன் பொன்னாடை போர்த்து, பொற்கிழி வழங்கி கௌரவித்தார். நவாலி ஊன்றுகோல் நிறுவன ஸ்தாபகர் க.நாகலிங்கம் சந்தனமாலை அணிவித்து உரையாற்றினார். (எ-50)

# நியமனம்

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியாக கே.ரி.சிவபாதம் கடந்த 13 ஆம் திகதி முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இங்கு வைத்திய அதிகாரியாக பணிபுரிந்த தினேஸ் ஜெயக்குமார் மேல் படிப்புக்காக வெளிநாட்டுக்குச் சென்றுள்ளதைத் தொடர்ந்தே இந்தப் பதவிக்கு நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரியாக பணிபுரிந்து வந்த சிவபாதம் நியமிக்கப்பட்டுள்ளார். (எ-100)



வடலியடைப்பு அறநெறிப்பாடசாலை மாணவர்கள் நல்லூர் உற்சவ தினத்தையொட்டி இந்து சமய கலாசார திணைக்களத்தின் அனுசரணையுடன் நாவலர் மணிமண்டபத்தில் நடத்திய பண்ணிசை நிகழ்வின்போது. (எ-7)

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வீதி, முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை சுஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சஹாரா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## இன்னும் வலிக்கும் உட்காயங்கள்

காயங்களில் உட்காயம், வெளிக்காயம் என்று இரு பிரிவுண்டு. பொதுவாக எல்லோரும் வெளிகாயங்கள் பற்றியே அதிகமாக அக்கறைப்படுவார்கள். ஏனெனில் வெளிகாயமே எல்லோரது கண்களினதும் பார்வைப் புலத்தை தன்பக்கம் ஈர்த்து அனுதாபத்தையும் கண்ணீரையும் பெறக்கூடியது. வெளிக்காயங்களின் புலப்படு தன்மையே அதனது பலமும் பலவீனமும்.

வெளிக்காயங்கள் சம்பாதிக்கின்ற அனுதாபத்தின் சிறு வீதத்தையே உட்காயங்கள் பெற்றுக்கொள்ள முடிகிறது. அதுவும் உட்காயத்தால் அவதிப்பட்டவர் சொன்னால் மாத்திரமே அதன் வலி பற்றிய உணர்தலை மற்றவர்கள் அறிய முடிகிறது. ஏறக்குறைய இத்தகைய உட்காய வலியால் அவதிப்படுவோரின் நிலையை ஒத்ததாகவே யாழ்ப்பாணத்தில் காணாமற் போனோரின் உறவுகள் இருக்கின்றனர்.

வன்னியில் இறுதிப் போரை படைத்தரப்பு தொடங்கிய மறுநொடியே குடாநாட்டுக்கான தரைப்பாதை துண்டிக்கப்பட்டது. கடல் அல்லது ஆகாய மார்க்கமாக – அதுவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே – வெளியிடங்களுக்கு யாழ்ப்பாணத்து மக்கள் படைத்தரப்பின் பாதுகாப்பு அனுமதி பெற்று சென்று வரமுடிந்தது. ஒரு சிறு துரும்பு அசைந்தாலும் படையின் அனுமதி தேவை. வெளியுலகத் தொடர்புகள் ஏறக்குறைய துண்டிக்கப்பட்ட நிலையில், குடாநாடு இராணுவ ஊரடங்குச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. விடுதலைப்புலிச் சந்தேக நபர்கள் என்ற பெயரில் பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு படையினரால் உத்தியோகபூர்வமாக பிடிக்கப்பட்டோரை விடவும் வெள்ளை வான்களில் வருவோரால் தூக்கிச் செல்லப்பட்ட இளைஞர்களின் எண்ணிக்கையை பல மடங்கு அதிகம். இவ்வாறு தூக்கிச் செல்லப்பட்டோரில் பலரின் கதி கடைசிவரை தெரியவேயில்லை. அவர்களில் சிலர், ஒருசிலநாள்கள் கழிந்த பின்னர் நகங்கள் பிடுங்கப்பட்டு, ஆண் குறி சிதைக்கப்பட்டு, உடலெங்கும் மின் அழுத்தியால் தோல் கருக்கப்பட்டு வீதிகளில் சடலங்களாக வீசப்பட்டன. போர் தொடங்கிய ஆரம்ப காலங்களில் – 2006ஆம் ஆண்டில் – இந்த வேட்டை தன் உச்சப்புள்ளியைத் தொட்டிருந்தது. "462பேர் 2006ஆம் ஆண்டில் மட்டும் குடாநாட்டில் காணாமற் போயிருந்தனர். இவர்களில் 128பேர் மாத்திரமே விடுவிக்கப்பட்டிருந்தனர். ஏனைய 272பேரினதும் கதி பற்றி தெரியவில்லை." இவ்வாறு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் கூறியுள்ளார். இந்த புள்ளி விவரம் மனித உரிமை ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளில் மட்டும் கணக்கில் எடுத்து வெளியிடப்பட்டது. பலர் பயத்தில் முறைப்பாடுகளைச் செய்யவேயில்லை. இது தவிர அதே வருடத்தில் 280 பேர் இனந்தெரியாதோரால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டிருந்தனர். முள்ளிவாய்க்காலில் இறுதிப்போரில் நிகழ்ந்த மனிதப் பேரவலம் ஒத்த அழிவு தெட்டம் தெட்டமாக யாழ்ப்பாணத்திலும் 2006ஆம் ஆண்டில் இருந்து நிகழ்ந்திருந்தது.

வெளிக்காயமாக துருத்திக்கொண்டு நிற்கின்ற முள்ளிவாய்க்கால் அவலத்துக்கு நீதி தேடுவதில் காட்டும் அக்கறையைப் போல, உட்காயமாக ஒழிந்திருந்து வலி தரும் யாழ்ப்பாணத்தின் இருண்ட நாள்களில் மேற்கொள்ளப்பட்ட பலியெடுப்புகள் தொடர்பாகவும் நீதி கிடைக்க சர்வதேசம் தன் கடைக்கண் பார்வையைத் திருப்பவேண்டும். என்று யாழ்ப்பாணத்தின் புலமையாளர்களும், காணாமற் போனவர்களின் உறவுகளும் மீண்டும் ஒருமுறை தம் கோரிக்கையை கண்ணீர் வழியே அனுப்பியுள்ளனர்.

இந்தக் கோரிக்கை நீர் மேல் எழுத்தாகுமா? இல்லையேல் நீதிக்கான உரமாகுமா?

# மஹிந்தவின் வீரத்தனமும் சிங்கள மக்களும்

தமிழில் : வியெஸ்ரி
மூலம்: ராவய

வீர புருஷர்கள் இரு ஓரங்களும்கூரானவாளொன்றை ஒத்தவர்கள், புத்திசாலித்தனம் வாய்த்த இனத்தவர்கள். இத்தகைய வீரபுருஷர்கள் விடயத்தில் அவதானத்துடனேயே செயற்படுவர். இத்தகைய வீர புருஷர்களுடாகத் தமது தேவையை நிறைவு செய்து கொண்ட பின்னர் அவர்களுக்கு கௌரவமாக ஓய்வு வழங்கிவிடுவர். வீர புருஷரொருவருக்கு காலக்கட்டுப்பாடின்றித் தொடர்ந்து செயற்பட இடமளிக்கும் இனங்கள் தமது நிகழ் காலத்தைப் போன்றே, எதிர்காலத்தையும் ஆபத்துக்கு உள்ளாக்கிக் கொள்கின்றன. கறுப்பு ஜூலை கலவரத்தால் பெரும் பாதிப்புக்கு உள்ளான இந்த நாட்டின் தமிழ் மக்கள், தலை நிமிர்ந்து மீண்டும் தமது வாழ்க்கையைத் தொடர வாய்ப்பு கொடுத்ததன் மூலம் பிரபாகரன் தமிழ் மக்கள் மத்தியில் வீர புருஷரானார். அவர் படிப்படியாக கடும்போக்கு வாதியாக மாற்றமுற்ற பின்னரும், தமிழ் மக்கள் மனோ ரீதியில் பிரபாகரனின் தலைமைத்துவப் பிம்பத்தில் ஈடுபாடு காட்டி தொடர்ச்சியாக அவருக்கு ஆதரவு நல்கினர்.

விடுதலைப்புலிகளின் தலைவரால் என்றோ ஒரு நாள் தமிழீழம் பெற வாய்ப்பமையும் என்ற நம்பிக்கை காரணமாக, தமிழ்மக்களது மனச்சாட்சி அற்றுப்போனதுடன் அவர்களது நாக்குகளும் பேச்சிழந்தன; ஊமையாகின. மாயையில் மனது மயங்கி, கனவுலகில் சஞ்சரித்த தமிழ் மக்கள் பிரபாகரனின் அகோரச்செயற்பாடுகளைப் பொருட்படுத்தினாரல்லர். வீரத்தனம் என்பதன் அர்த்தம் இடத்துக்கிடம், காலத்துக்கு காலம், சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு மாற்றமுறும் ஒன்று. வீரத்தனம் மற்றும் நல்லொழுக்கம் என்ற சொற்களை நீண்ட காலத்துக்கு கடும்போக்குவாதத்துக்கான அர்த்தமாகப் பயன்படுத்திக் கொண்டால், கடும்போக்குவாதத்தையே உண்மையான வீரத்தனம் என நம்பும் நிலை ஏற்படும் என கிலெம்பெரரி என்ற அறிஞர் தமது 'லாங்விச் ஒவ்தேர்ட் றீச்' என்ற நூலில் விபரித்துள்ளார். வீரத்தனமும் கடும்போக்குவாதமும் ஒன்றிணைவது 'நாஸி'க் கோட்பாடாகக் கூடக் கொள்ள இயலாத ஒன்று. விடுதலைப் புலிகளது நிர்வாகத்தில் தமிழ் மக்கள் இதனை அனுபவிக்க நேர்ந்தது. இன்று ராஜபக்ஷ நிர்வாகத்தில் சிங்கள மக்களும் அத்தகைய நிலைக்கு முகம் கொடுக்க வேண்டி நேர்வதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

அண்மையில் இலங்கை இந்திய கிரிக்கெட் அணிகளுக்கிடையே கொழும்பில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டித் தொடரில், இலங்கை கிரிக்கெட் அணி தோல்வியைச் சந்திக்க நேர்ந்தமை பலரும் அறிந்தததொன்றே. குறிப்பிட்ட போட்டித் தொடரில் இலங்கை அணி தோல்வியடைந்ததையடுத்து, இலங்கை ரசிகர்கள், பிரமுகர்களுக்கான பார்வையாளர் பகுதியிலிருந்து கொண்டு இந்திய அணியை உற்சாகப்படுத்திக் கோஷமெழுப்பிய கிரிக்கெட் ரசிகர்கள் மீது வெற்றுச் சோடா போத்தல்களை வீசித்தாக்குதல் மேற்கொண்டதுடன் தூஷண வார்த்தைகளால் திட்டித் தீர்த்ததாகவும் செய்திகள் வெளியாகின. அமைச்சர்கள் போன்ற அரச உயர் மட்ட ராஜதந்திரிகள் மட்டத் தரப்பினருக்கென ஒதுக்கப்பட்ட விசேட பார்வையாளர் பகுதிக்குள் அனுமதியின்றி வேறெவரும் உள்நுழைய இயலாது என்பது தெரிந்த ஒன்றே. இந்த நிலையில் இத்தகைய அநாகரிகச் செயற்பாடு அரசியல் அதிகாரத் தரப்பினரின் அனுசரணையுடனேயே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என நம்ப இடமுண்டு. குறிப்பிட்ட தாக்குதலை மேற்கொண்டோர் அரசியல் அதிகாரத் தரப்பினரின் ஆதரவாளர்கள் என்பதாலேயே அவர்களால் இவ்விதம் இந்திய கிரிக்கெட் அணி ஆதரவாளர்கள் மீது துணிச்சலாக தாக்குதல் மேற்கொள்ள முடிந்ததாக நம்ப இடமுண்டு.

குறிப்பிட்ட தாக்குதல் சம்பவத்தின் போது, தாக்குதல்களுக்கு உள்ளான இந்திய கிரிக்கெட் அணியின் ஆதரவாளர்கள், உதவி கோரி கூக்குரலிட்ட போதிலும், அவர்களுக்கு உதவ எவரும் முன்வரவில்லை. பாதுகாப்பு படையினர் மற்றும் பொலிஸாரின் உதவி கோரப்பட்டும் கூட அவர்கள் கூட கண்டும் காணாதது போன்று அங்கிருந்து விலகிச்சென்றுவிட்டனர். இலங்கை அணி போட்டியில் தோல்வியுற நேர்ந்த தொடரின் ஏனைய போட்டிகளின் முடிவிலும் இந்திய அணியின் ஆதரவாளர்கள், இலங்கை அணி ஆதரவாளர்களின் கடும்கோபத்துக்கு உட்பட நேர்ந்தது. விளையாட்டு ரசிகர்கள், தம் தீவிர ரசிகத்தனம் காரணமாக எல்லைமீறி உணர்ச்சிவசத்தால்தவறு செய்வது வழமையே. ஆயினும், குறிப்பிட்ட சம்பவத்தில் அரசியல் பின்புல ஆதரவுடன் சட்டம்,ஒழுங்கைமீறும்விதத்தில்இலங்கை அணி ரசிகர்கள் நடந்துகொண்டமை பரபரப்பான ஒரு சம்பவமாக அமைந்தது. அரசின் மத்தியிலேயே கடுங்கோட்பாட்டு நிலை அரசோச்சுவது கவலைக்குரிய ஒன்றே. இச் சம்பவம் அதனையே தொட்டுக்காட்டி நிற்கிறது.

கிழக்கு மாகாணம் - பாணமபிரதேசத்தில் அமைந்திருந்த பிள்ளையார் கோவில், பாணம பௌத்த விகாரை நிர்வாகத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் ஊர்காவல் படை வீரர்களும், சிவில் உடுப்பில் இராணுவ வீரர்களும் இணைந்து பங்கேற்றுள்ளனர். அந்த நடவடிக்கைக்கான திட்டங்களை வகுத்ததும், செயற்படுத்துவித்ததும் அப்பகுதி விகாரைக்குப் பொறுப்பான பௌத்த பிக்கு ஒருவரே அந்த வகையில் சிங்கள பௌத்த கடுங்கோட்பாட்டாளர்கள், ஒழுக்கம் பேணுவதில் உணர்ச்சி வசப்படும் கிரிக்கெட் ரசிகர்களை விட தரத்தில் தாழ்ந்தவர்களே. இதில் கவலைக்குரியது என்னவெனில் பாதுகாப்புப் படைத் தரப்பினரும் இந்த அநாகரிகச் செயற்பாட்டில் பங்கு கொண்டமையே. அரசியல் அதிகாரப் பாதுகாப்பின் பின்னணியுடன் சிங்களகடுங்கோட்பாட்டாளர்கள்முன்னர் விளையாட்டுத்துறையில் அநாகரிகமாக நடந்துகொண்டனர். கிழக்கில் இந்து மதத்தவர்களுக்கு எதிராக பௌத்த கடுங்கோட்பாட்டாளர்களுடன் பாதுகாப்புப்படையினரும் இணைந்து செயற்பட்டுள்ளனர். இதனால் சிங்கள இனத்தின் இருட்டுப்போன்று அதன் கலாசாரப் பெருமையும் தாழ்வுற நேர்ந்துள்ளது. சிங்கள இனத்தின் பாரம்பரிய செயற்திட்டங்களை நிலைநிறுத்தும் விதத்தில் நாட்டின் ஆட்சி அதிகாரத் தரப்புக்களின் அனுசரணையுடனேயே வர்க்க வாத, மதகடுங்கோட்பாட்டு வாதம் பயன்படுத்தப்படுகிறது.

ராஜபக்ஷ நிர்வாகம் போரை வென்றெடுத்தமை உண்மையே. அது மட்டுமே அத்தரப்பினரின் ஒரேயொரு வெற்றி ஏனைய சகல விடயங்களிலும் அவர்களது திறமை மழுங்கிப்போயுள்ளது. அண்மையில் மீளியக்கப்பட்ட நுரைச்சோலை மின் உற்பத்தி தொகுதி மீண்டும் பழுதுபட்டுள்ளது. இந்த ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை வினாத்தாளில் ஐந்து பாரதூரமான தவறுகள் இடம்பெற்றுள்ளன. ஆனால் அந்தத் தவறுக்குப் பொறுப்பேற்று அத்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் தமது பதவியைத் துறக்க முன்வரவில்லை. அவ்விதம் ஒரு துறையில் இடம்பெறும் தவறுக்குப் பொறுப்பேற்று அத்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் தமது பதவியைத் துறக்கும் நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டிருந்திருக்குமானால், இன்றைய ராஜபக்ஷ நிர்வாகத்தில் அமைச்சரவை வெறுமையாகியிருந்திருக்கும். போரினால் இடம்பெயர்ந்தோரை மீள்குடியமர்த்துவதில் அரசு பூரண வெற்றி கண்டிருப்பதாக பாதுகாப்பின் செயலாளர் உலகத்துக்குப் பறை சாற்றுகிறார். அதேவேளை விடுதலைப் புலிகளுக்கு எதிரான போக்குடைய ஆனந்தசங்கரியோ அரசின் மீள்குடியேற்றச் செயற்பாடுகள், இடம்பெயர்ந்தோரின் சிரமங்களுக்கு பரிகாரம் அளிக்கும் விதத்தில் திருப்திகரமாக அமையவில்லையெனக் குற்றம் சாட்டுகிறார் அந்தவகையில்இன்றையராஜபக்ஷ நிர்வாகம்உள்ளுடல்இல்லாத வெளியில் தோலால் பூசி மெழுகப்பட்ட பொருளொன்றை ஒத்ததே அண்மையில் நடந்து முடிந்த 2012 லண்டன் ஒலிம்பிக் போட்டிகளுக்காக இலங்கை ஒலிம்பிக் குழுவழுமில்லியன்ரூபாசெலவிலான நுழைவுச் சீட்டுகளைக் கொள்வனவு செய்திருந்த போதிலும், அதில் கலந்து கொள்ளச் சென்ற விளையாட்டு வீரர்களை நெறிப்படுத்த எந்தவொரு பயிற்சியாளரையும் உடன் அனுப்பத் தவறியுள்ளது. கடந்த நிதியாண்டில் விளையாட்டுத்துறைக்கென 1923 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட போதிலும், அந்த நிதி நாட்டின் விளையாட்டுத்துறையை மேம்படுத்த வல்லாது ராஜபக்ஷ குடும்பத்தினரின் மதிப்பை மேம்படுத்தும் நோக்கில் ஹம்பாந்தோட்டையில் விளையாட்டரங்கு நிர்மாணிக்கச் செலவிடப்பட்டுள்ளது. அரசின் இத்தகைய செயற்பாடுகளால் மக்கள் மத்தியில் உருவாகும் அதிருப்தியை மழுங்கடிக்க வீர புருஷர்களை உருவாக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது.

ராஜபக்ஷ நிர்வாகத்தில் தேசியத்தை கட்டியெழுப்புவது என்பதன் அர்த்தம், பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை இனங்கள் மத்தியில் தொடர்ச்சியாக மோதல்களை இடம்பெறச்செய்தல் என்பதாகும். பெரும்பான்மையின சிங்கள மக்களே இந்த நாட்டின் உருத்தாளர்கள் எனவும் ஏனைய சகலரும் அவர்களது எதிரிகளே என்றதொரு உணர்வை சிங்களமக்கள் மனதில் நிலைநிறுத்தும் போக்கு இது. அந்த விதத்தில் மகாவம்ச சான்றிதழுடன் ராஜபக்ஷ தரப்பினால் நாட்டின் பொருளாதாரச் சிக்கல், நிர்வாகச்சீர்கேடுகள் என்பவற்றை மூடிமறைத்து எவ்வித இடையூறுமின்றி நாட்டை நிர்வகிக்க இயலும்.

பிரபாகரன் விடுதலைப்புலிகள் அமைப்பை உருவாக்கி, கட்டிவளர்த்தார் கடைசியில் முடிவில்லா அதிகார ஆசையால் ஈர்க்கப்பட்டு அதன் அழிவுக்கே வழிசமைத்தார். தமக்குக் கீழ்படிந்த தமிழீழமே அவரது வேட்கையாக அமைந்தது. தமது கடுங்கோட்பாட்டு நிலைப்பாட்டிலிருந்து ஓரங்குலமேனும் அசைந்து கொடுக்க முன்வர அவர் தயாராயில்லாமையால் முடிவில்லாத போர் ஒன்றுக்கு நாடு உட்பட நேர்ந்தது.விடுதலைப்புலிகள்அமைப்பை உருவாக்கிய சிற்பியே அதன் அழிவுக்கும் காரணமாக அமைந்ததால், அவர் காப்பற்ற, பாதுகாக்கமுயன்ற தமிழ் மக்களையும் பேரவலத்துக்குள் சிக்க வைத்தார். தமிழ் இனத்துக்காக அவரது அர்ப்பணிப்பு பெறுமதிமிக்கதே ஆயினும், இனம் குறித்த அவரது பார்வை, சிங்கள எதிரி தமிழினத்துக்குச் செய்த பாதிப்பை விட அதிகமானதெனக் கொள்ளத்தக்கதே. அந்த வகையில் தமிழ்மக்கள் அபாயஎச்சரிக்கையையும் கணக்கில் எடுக்காததால் தாமே தமக்கான புதைகுழியைத் தோண்ட நேர்ந்தது. அதே போன்று ராஜபக்ஷ நிர்வாகமும்.

இனவாதம் என்ற மாயையில் சிக்குண்டு நலிவடைகின்றோம். வீர புருஷர்கள் என்ற மாயையின் பின்னால் சென்று வீழ்ச்சியையும் நாசத்தையும் சந்திக்காமல் வெளியேற முயல்வோம்.

# கபிலவஸ்து புனித புத்த சின்னத்துக்கு இந்திய காவலர்களே பாதுகாப்பு

## கொழும்பு அருங்காட்சியக திருட்டின் எதிரொலி

கோகுலன்

**சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் வெளியான ஒரு கட்டுரையின் தொகுப்பு**

- ★ கபிலவஸ்த்து புனித சின்னத்தின் பாதுகாப்பில் இந்தியாவின் அக்கறை
- ★ சர்வதேச நாடாளுமன்றக் குழுவை அழைக்கிறார் றிசாட் பதியுதீன்
- ★ யு.என்.பி. குழுவுக்கு தேர்தல் ஆணையாளர் இடித்துரைப்பு
- ★ முன்னாள் போராளியின் மனைவி தொடர்ந்துள்ள வழக்கு.
- ★ பிரிட்டிஷ் அரசு தீர்மானம் வெளியுறவு அமைச்சுக்கு பேரடி.

கபிலவஸ்து நினைவுச் சின்னங்கள் சுமார் 30 வருடங்களுக்குப் பின்னர் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு நாட்டின் பல பகுதிகளுக்கும் பௌத்த மக்களின் தரிசனத்துக்காக கொண்டு செல்லப்பட்டதில் ஒரு சர்ச்சை தோன்றியிருப்பது தெரியவந்துள்ளது. நாட்டின் பல பௌத்த ஆலயங்களிலும் தரிசனத்துக்கு வைக்கப்பட்ட இந்தப் புனித சின்னங்கள் களனி ரஜமகா விகாரைக்குக் கொண்டுசெல்லப்படாதமை குறை கூறுவதற்கு இலக்காகியுள்ளது. களனி ரஜமகா விகாரை பௌத்தர்களின் வரலாற்று முக்கியத்துவமிக்க ஒரு விகாரையாகக் கருதப்படுகின்றமை ஒரு புறமிருக்க புத்த பெருமான் இலங்கை விஜயங்களின் போது இந்த விகாரைக்கும் வருகை தந்திருந்தார் என்பது ஐதீகம். இருந்த போதிலும் அச்சின்னங்கள் களனியில் வேறு ஒரு விகாரைக்கு எடுத்துச்செல்லப்பட்டிருந்தது. பின்னர் நேராக பெல்மதுளைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்குள்ள ரஜமகாவிகாரையில் தரிசனத்துக்கு வைக்கப்பட்டது. இந்த விகாரையில் இருந்துதான் சில காலத்துக்குமுன்னர் அரசின் முன் முயற்சியில் புத்தரின் புனித சின்னங்கள் என்ற பெயரில் ஒரு பொருள் ஜப்பானுக்கு அனுப்பப்பட்டிருந்தது என்பதை வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

இந்த புனித சின்னங்களை அனுப்பியிருந்த இந்திய தேசிய அரும்பொருள் காட்சியக அதிகாரிகள் கபிலவஸ்து புனித சின்னங்களின் பாதுகாப்புக்கென தங்களின் பாதுகாவலர்களையும் அதனுடன் அனுப்பி வைத்திருந்தனர். நிச்சயமாக அவை இந்திய அரசின் மதிப்பு கூறமுடியாத அரும்பொருள்கள் எனவே அந்த விடயத்தில் அவர்கள் மெத்தனமாக இருந்து விட முடியாது.

அண்மையில் கொழும்பு அரும்பொருள்கள் காட்சியகத்திலிருந்து வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கலைப்பொருள்கள் காணாமற்போயிருந்தமை இந்திய அதிகாரிகளை விழிப்புடன் இருக்கும்படி செய்திருக்க முடியும். அதனால் அதன் முழுப்பாதுகாப்பும் தங்கள் பாதுகாவலர்களின் கவனத்தில் இருக்க வேண்டும் என்று எண்ணியிருப்பார்கள். கொழும்பு அரும்பொருள்காட்சியக சம்பவம் இலங்கை அதிகாரிகளின் பாதுகாப்பு தொடர்பில் எதுவித நம்பிக்கையும் ஏற்படுத்துவதாக இருந்திருக்க முடியாது.

இலங்கை பாதுகாப்புத் துறையினர் புனித சின்னங்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. அதற்காக இந்திய அதிகாரிகள் அசமந்தமாக இருந்துவிட முடியாது.

### பிரிட்டிஷ் பிரஜைகளுக்கு தடைவிதிப்பு

பிரிட்டிஷ் பிரஜைகள் இலங்கைக்கு பிரயாணம் மேற்கொள்வதற்கு எதிராக பிரித்தானிய அரசு ஆலோசனை வழங்கியிருப்பதாக வெளிவந்திருக்கும் செய்தி இலங்கை வெளியுறவு அமைச்சுக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. இலங்கையில் மேற்குநாடுகளுக்கு எதிரான தேசிய எழுச்சியொன்று உருவாக்கப்பட்டு வருவதும் பால் விணைக்குற்றங்கள் அதிகரித்து வருவதையும் சுட்டிக்காட்டியே பிரிட்டன் தனது பிரஜைகள் இலங்கைக்கு பயணம் மேற்கொள்வதற்கு எதிராக ஆலோசனை வழங்கியுள்ளது.

நாங்கள் எவ்வளவோ செய்திருக்கிறோம். ஆனால் இப்படி நடந்துவிட்டது என்று வெளியுறவு அமைச்சின் நெருங்கிய உதவியாளர் ஒருவர் கூறினார். அவர் சொல்வதின் கருத்து என்ன என்று கேட்டபோது, ஜனாதிபதி மஹிந்த, மகாராணியின் பொன் விழா, பகல் போசனத்தில் கலந்துகொள்ள சென்றார். எமது உயர் ஸ்தானிகர் ஓர்க்கிட்மலர் ஒன்றுக்கு மகாராணியின் பெயரை சூட்டி மகிழ்ந்தார். சில பிரப்புக்களையும் இங்கு வரும்படி செய்தார் என்றார் அவர்.

ஆனால் அவையொன்றாலும் வேலையாகவில்லை என்பது இப்போது தெரிகிறது. பிரிட்டிஷ் பிரஜைகளுக்கு அந்த நாடு வழங்கியுள்ள ஆலோசனையானது இலங்கை மீதான ஒரு குரூரமான தாக்குதல் மட்டுமல்ல அவமானமும் கூட.

பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற சங்கத்தின் வருடாந்த மகாநாடு அடுத்தமாதம் இலங்கையில் நடைபெறவிருக்கும் நிலையில் பிரிட்டன் எடுத்துள்ள முடிவு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

வெளியுறவு அமைச்சு பிரிட்டிஷ் அரசுக்கு விண்ணப்பம் ஒன்றை விடுத்தது ஆனால் அது அவர்களின் காதுகளில் ஏறவில்லை. பிரிட்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் பெரும் சாதனைகள் புரிந்துள்ளதாக ஊடகங்களில் பிரசாரப்படுத்தப்பட்ட போதிலும் அவரது பணியினால் எதுவித பயனுள்ள தாக்கமும் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. பிரச்சினைகள் ஏற்படும் இடங்களுக்கெல்லாம் அவைகளைத் தீர்த்துவைப்பதற்காக அனுப்பி வைக்கப்படும் பிரதி ஸ்தானிகர் இப்பொழுது பேர்லினுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

### பதியுதீன் விடுத்துள்ள கோரிக்கை

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவரான அமைச்சர் றிசாத் பதியுதீனின் ஆதரவாளர்கள் மன்னார் நெருக்கடி குழு (Mannar Crisis Group)என்ற அமைப்பொன்றை உருவாக்கியிருக்கிறார்கள். அமைச்சர் றிசாத் பதியுதீன் தமக்கு எதிரானவழக்கு கொழும்பு மற்றும் மன்னார் நீதிமன்றங்களில் நடைபெறும் போது சர்வதேச நாடாளுமன்ற பிரதிநிதிகள் குழுவொன்று அவ்விடங்களில் பிரசன்னமாகியிருக்க வேண்டும் என்று கோரியிருக்கிறார்.

அந்தக் கடிதத்தின் பிரதிகளை இந்த அமைப்பு ஊடகங்களுக்கு அனுப்புவதன் மூலம் தனது பிரசாரத்தை ஆரம்பித்துள்ளது. இந்த விசாரணைகள் ஆத்திரமூட்டும் சூழ்நிலைகளில் நடைபெறலாம் என்றும் இதில் சட்டவியலாளர்களின் சங்கம் தமக்கு எதிராக கடும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருப்பதுடன் புலன்விசாரணைகள் முடிவுறாமல் வழக்கு இன்னமும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாத நிலையிலும் தாம் நீதி மன்றத்தை அவமதித்ததற்கான குற்றவாளியாக கூறிவருகிறார்கள் என்றும் அமைச்சர் இந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

நீதி நிலைநாட்டப்படுவதற்கு சர்வதேச நாடாளுமன்ற பிரதிநிதிகள் பிரசன்னமாய் இருப்பது உறுதியளிப்பதாக விருக்கும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கமானது வெளிநாட்டவர்கள் நமது உள்நாட்டு விவரங்களில் தலையிடக் கூடாது என்று தெரிவித்து வரும் நிலையில் அதில் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஒருவர் தன்னை காப்பாற்றிக் கொள்ள வெளிநாட்டு உதவியை நாடியிருப்பது விசித்திரமாக விருக்கின்றது.

### மாலைதீவு அதிபரின் பதில்

இலங்கைக்கு வருகை தந்திருந்த மாலைதீவுகள் அதிபர் மொகமத் வாகீத்திடம் ஆசிய பூதங்களான இந்தியா, சீனா ஆகிய இரு நாடுகளுக்குமிடையில் சமநிலையை எவ்வாறு பேணிக் கொள்ளப் போகிறீர்கள் என்று கேட்கப்பட்டது. அங்கிருந்த இந்திய நிருபர் ஒருவர் அதை எவ்வாறு கையாள்வது என்பதை இலங்கையிடம் அவர்கள் கற்றுக் கொள்ளலாம் என்று கிண்டலாக குறிப்பிட்டார். இலங்கையிடம் நாங்கள் கற்றுக்கொள்ள பல விடயங்கள் இருக்கின்றன என்று கூறிய மாலைதீவுகள் அதிபர் ராஜதந்திரமாக கேள்விக்கு பதிலளிக்காமல் விட்டுவிட்டார்.

### தேர்தல் ஆணையாளருடன் ஐ.தே.க. சந்திப்பு

வரும் செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி நடைபெறவிருக்கும் தேர்தல் தொடர்பான முறைகேடுகள் பற்றி ஐக்கிய தேசியக் கட்சியினர் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவுடன் அண்மையில் சந்திப்பொன்றை நடத்தினார்கள்.

வாக்குச் சாவடிகளிலிருந்து வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்படும்போது அவைகள் மாற்றப்பட்டுவிடக் கூடிய சாத்தியம் இருப்பதாக அவர்கள் ஆணையாளரிடம் கூறினார்கள்.

அவ்வாறான முறைகேடுகள் எதுவும் நடைபெற மாட்டாது என ஆணையாளர் உறுதியளித்தார்.

அப்படி ஒரு சம்பவம் ஒரு முறை 1981 ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்திசபை தேர்தலின் போது யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது என்று கூறிய ஆணையாளர் அப்போது ஐ.தே.க.ஆட்சியில் ஓர் அமைச்சராக விருந்தவரான ஜயவிக்கிரம பெரேரா பக்கம் திரும்பிப் பார்த்தார்.

ஆணையாளரின் இந்த பதில் ஐ.தே.க. குழுவினருக்கு அதிர்ச்சியை அளிப்பதாய் இருந்திருக்கவேண்டும்.

### போராளியின் மனைவி கொடுத்துள்ள வழக்கு

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஓர் அரசுத் தலைவருக்குரிய பாதுகாப்பு அளிப்பது தொடர்பாக வத்சலாதேவி என்பவர் தொடர்ந்துள்ள வழக்கு நியூயோர்க்கிலுள்ள தென்மாவட்ட நீதிமன்றத்தில் ஒகஸ்ட் 23 ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது என்று ஈ.ஜ.என். ஊடகம் அறிவித்துள்ளது.

கேணல் ரமேஷ் என்றழைக்கப்படும் முன்னாள் போராளி துரை ராஜசிங்கம் என்பவரின் கைம்பெண்ணான வத்சலாதேவியால் இந்த வழக்கு மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அவரது முகவருக்கும் எதிராக தொடரப்பட்டுள்ளது.

அமெரிக்க மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு மாறாக சித்திரவதை செய்தமை மனிதத்துவத்துக்கு மாறான முறையில் நடத்தியது மற்றும் போர்க் குற்றங்கள் புரிந்தமைக்கான இழப்பீடுகளை அவர் கோரியுள்ளார்.

நீதிபதி நவோமி றீஸ் புச்வால்ட் முன்னிலையில் இந்த வழக்கு விசுவநாதன் ருத்திரகுமாரனால் வாதிக்கப்பட்டது. அமெரிக்க ராஜாங்க அமைச்சின் சார்பில் உதவி அமெரிக்க சட்டவாளர் அமி ஏ.பார்சலோ வாதிட்டார். ஸ்பீக் ஹியூமன் றைட்ஸ் சார்பில் அலி அபெட் பெய்டவுன் மனுவொன்றை சமர்ப்பித்து வத்சலா சார்பில் வாதிட்டார் ராஜாங்க அமைச்சினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் படி ஜனாதிபதி பதவியிலிருக்கும் ஓர் அரசுத் தலைவர் என்ற முறையில் குற்றச்சாட்டுக்களில் இருந்து அவருக்கு விலக்கு அளிக்கப்பட முடியுமா என்பதை தீர்மானிப்பதே நீதிமன்றத்தின் முன் உள்ள பிரச்சினை.

நீதிவான் கருத்து தெரிவிக்கையில் ராஜாங்க அமைச்சின் நிலைப்பாட்டை மாற்றும் வகையில் காங்கிரஸ் சபை சட்டத்திருத்தம் எதையும் நிறைவேற்றவில்லை. அது ராஜாங்க அமைச்சின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்வதாக இருக்கிறது என்று கூறி தீர்ப்பை ஒத்திவைத்தார். ✸

# அதிக வருமானம் தரும் மாம்பழ உற்பத்தி

லக்ஸ்மன்

யாழ்.மாவட்டத்தில் உற்பத்தியாகும் மாம்பழங்கள் இலங்கையில் மட்டுமன்றி எம்மவர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் நல்ல வரவேற்கை பெற்றுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் சுமார் எழுபத்தி இரண்டாயிரத்துக்கும் அதிகமான மரங்கள் இருப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவித்த போதும் மாமரங்களின் உற்பத்தித்திறன் அவற்றில் பெறக்கூடிய பழங்களைவிட நான்கு முதல் ஐந்து மடங்குவரை குறைவாகவே உள்ளது என்று யாழ்ப்பாண விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபால சுந்தரம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் மாம்பழங்களின் உற்பத்தி குறைவாகக் காணப்படுவதாகவும் மாம்பழச் செய்கை தொடர்பாக விவசாயத் திணைக்களம் மேற்கொண்டு வரும் செயற்பாடுகள் குறித்துக் கேட்கப்பட்டபோதே இந்த விடயம் கூறப்பட்டது.

எமது மக்கள் மாமரங்களின் உற்பத்தித் திறனை அறியாது அவற்றைப் பாராமுகமாக விட்டுவிடுகின்றனர் இதனால் அவை பெரு விருட்சங்களாகி உற்பத்தி குறைந்த மரங்களாகின்றன. அத்துடன் கைவிடப்பட்ட பராமரிப்புக் குறைந்த மாமரங்களில் குருவிச்சை போன்ற ஒட்டுண்ணி மற்றும் மா இலைத் தத்தி போன்ற பீடைகளும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. மரங்களின் உற்பத்தித்திறன் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது.

இவற்றின் உற்பத்தித் திறன்களையும் தரத்தையும் மேம்படுத்தும் நோக்குடனும் அதனை ஏற்றுமதி செய்யவும் சந்தைப்படுத்தவும் வேண்டிய நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கூடியதாக வடமாகாண விவசாயப் பணிப்பாளரின் நெறிப்படுத்தலுடன் யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் மாமரச் செய்கை குறித்த பெரிய அளவிலான திட்டங்களை முன்னெடுக்கின்றது.

இதன் முதல் கட்டமாக யாழ். மாவட்டத்தில் உள்ள உத்பத்தித்திறன் குறைந்த 5 ஆயிரம் மாமரங்கள் உரியமுறையில் கத்தரிப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு அனுசரணையாக மாகாணத்தால் ஒதுக்கப்பட்ட நிதியில் 2.3 மில்லியன் ரூபாவும் உலக உணவு விவசாய தாபன நிதியில் இருந்து 8.4 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தின் பல பாகங்களிலும் இருந்து முதல் கட்ட நடவடிக்கையாக நாற்பது வேலையற்ற இளைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு மாமரங்களை கத்தரித்தல், பராமரித்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளக் கூடியதான பயிற்சிகள் திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் முறைப்படி வழங்கப்பட்டதுடன் மாமர உரிமையாளர்களை ஒருங்கிணைத்து பழஉற்பத்தியாளர் சங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளது. பதினொரு பழ உற்பத்தியாளர் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சங்கங்களுக்கு மாமரங்களைக் கத்தரிப்பதற்குரிய இயந்திரவாள், கத்தரிப்பு வாள், மற்றும் அதற்குத் தேவையான உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளது. இது மாகாணத்தால் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து வழங்கப்பட்டதாகும். இவற்றைப் பயன்படுத்தி ஏற்கனவே பயிற்றப்பட்ட கத்திரிப்பாளர்களைக் கொண்டு கத்தரிப்பு வேலைகளும் தற்போது இடம்பெறுகின்றது. ஒரு குடும்பத்திற்கு ஆகக்கூடியதாக இரண்டு மாமரங்களைக் கத்தரிப்பதற்கு மரம் ஒன்றுக்கு ஆயிரத்து 500 ரூபா வீதம் ரூபா மூவாயிரம் வழங்கப்படுகின்றது. இது கத்தரிப்பாளருக்கான கொடுப்பனவாகும். உரிமையாளர் ஊடாகவே வழங்கப்படும். இதற்கென 7.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனவே உரிமையாளர்கள் தமது மாமரங்களைக் கத்தரித்து உரியமுறையில் பாதுகாத்து கூடிய உற்பத்திக்கும் தரத்திற்கும் உதவ வேண்டும். தத்தமது பகுதிவிவசாய போதனாசிரியர்களின் உதவியை இதற்காகப் பெறமுடியும்.

இங்கு உற்பத்தி செய்யப்படும் பழங்களுக்குச் சிறந்த சந்தைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடியதாக சாவகச்சேரி மீசாலைப் பகுதியில் பழங்களைச் சேகரித்து விற்பனை செய்யும் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

மாகாணத்தால் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து 32 மில்லியன் ரூபா நிதி இதற்கெனச் செலவிடப்பட்டுள்ளது. பழ உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தினூடாக அந்தப் பகுதிகளில் உற்பத்தி பண்ணப்படும் தரமான பழங்களைக் கொள்வனவு செய்து மீசாலையில் உள்ள மத்திய நிலையத்தினூடாக ஏனைய பிரதேசங்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆர்வம் மிக்க பழ உற்பத்தியாளர்கள் இதில் இணைந்து கொண்டு தரமான உற்பத்திகளைச் செய்வதனூடாக கணிசமான வருமானத்தைப் பெறக்கூடியதாக இருக்கும் இதற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் எனவும் யாழ்.மாவட்ட விவசாய பணிப்பாளர் ஸ்ரீபாலசுந்தரம் கேட்டுக்கொண்டார்.

# ஞானியின் போதனை

“அந்த ஆள் என்னைக் கண்டபடி திட்டிவிட்டான். அதை நினைத்தால் மிகவும் வருத்தமாக இருக்கிறது” என்று சொல்லி ஒருவர் கவலைப்பட்டார். “இதில் கவலைப்பட என்ன இருக்கிறது?” என்றார் ஒரு பெரியவர். அவர் ஒரு மகான்.

“என்ன இப்படிச் சொல்கிறீர்கள்? ஒருவர் நம்மைப் பார்த்துத் திட்டினால் வருத்தமாக இருக்காதா?” என்றார் இவர். “அது எப்படி வருத்தமாக இருக்கும்? திட்டுவது என்பது என்ன? அது வெறும் சத்தம்தானே?” என்று கேட்டார் அந்தப் பெரியவர்.

இதைக் கேட்டவுடன் இவருக்கு தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது.

அந்தப் பெரியவர் சொல்வது ரொம்பப் பெரிய விடயம். அதை நாம் புரிந்து கொள்ள முயற்சி செய்யலாம் என்றால், நடைமுறை வாழ்க்கைக்கு அது ஒத்துவருவது போல் தெரியவில்லை.

இருந்தாலும் அந்தப் பெரியவர் அதற்கு என்னதான் விளக்கம் தருகிறார் என்று பார்ப்போம்.

ஒரு ரயில் போய்க் கொண்டிருந்தது. அதில் ஒரு சாது சென்று கொண்டிருந்தார். அவர் ஹரித்வார் போய்க் கொண்டிருந்தார். ரயிலில் அதிக கூட்டம். நம்ம ஊர் ரயில்...! கேட்கவா வேண்டும்? பயணச்சீட்டு வாங்கிக் கொண்டு அரைவாசிப் பேர், ‘அது எதற்கு அனாவசியமாக’ என்ற நினைப்பில் அரைவாசிப்பேர்...!

இந்தக் கூட்டத்துக்கு மத்தியில் அந்தச் சாதுவும் போய்க் கொண்டிருந்தார். உட்காருவதற்காக இருந்த இடத்தில் ஓர் ஆள் படுத்திருந்தான். அவன் கொஞ்சம் முரட்டு ஆசாமி. அவன் கால் பக்கத்தில் சிறிது இடம் மிகுதி இருந்தது. அந்த இடத்தில் சாது உட்கார்ந்தார். ஆனால் அந்த முரட்டு ஆள் இரவு முழுவதும் இவரைக் காலால் உதைத்துக் கொண்டேயிருந்தான்.

அது இவருக்கு மிகவும் அவமானமாகப்பட்டது. அதனால் துக்கம் ஏற்பட்டது. இருந்தாலும் சாது ஒரு மாதிரியாகச் சகித்துக்கொண்டு பிரயாணம் செய்தார். பொழுது விடிந்தது. அந்தச் சாது ஹரித்வார் வந்து சேர்ந்தார். அங்கே ஒரு பெரிய ஞானியைச் சந்தித்தார்.

இரவு ரயிலில் அந்த ஆள் உதைத்ததையும், அதனால் தனக்கு ஏற்பட்ட துக்கத்தையும் இந்தச் சாது அந்த ஞானியிடம் கூறினார். சொல்லிவிட்டு, “ஏன் சுவாமி? எனக்குத் துக்கம் ஏற்பட்டதே, அது தவறா?” என்று கேட்டார். “தவறுதான்...” என்றார் அந்த ஞானி. அதைத் தொடர்ந்து மேலும் அவர் சொல்ல ஆரம்பித்தார்.

“உனக்கு இன்னும் தேகாபிமானம் (உடல்மீது பற்று) போகவில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. அஷ்டாவக்கிரர் என்ன சொல்கிறார் தெரியுமா? உண்மையான ஞானி யாராவது தன்னை வந்தனை செய்தால் அதற்காக மகிழ்ச்சியடையமாட்டான். யாராவது தன்னை நிந்தனை செய்தால் அதற்காகவும் வருத்தப்படமாட்டான்” என்று கூறுகிறார்.

“நிந்தனை என்பது ஒரு ஒலிதான். தேகாபிமானம் இருக்கும் வரையில் இந்த ஒலி நம்மை வேதனைப்படுத்தும். ‘நான் உடல் இல்லை, ஆத்மா-என்ற நினைவிருந்தால் இந்த ஒலி நம்மைப் பாதிக்காது.

“மனு என்ன சொல்கிறார் தெரியுமா? ‘ஒரு சாதகன் பாராட்டுதலை விஷம் என்று நினைத்துப் பயப்பட வேண்டும்; அவமானத்தை அமிர்தம் என்று நினைத்து சந்தோஷப்பட வேண்டும்’ என்கிறார். ‘அவமானப்பட்டால் கவலையே படாமல் எப்படியிருக்க முடியும்? என்றுதான் நமக்குத் தோன்றுகிறது. அதனால்தான் நம்மில் யாரையும் இதற்கு உதாரணம் காட்ட முடியவில்லை. பெரியவர்கள் இதற்கு புத்தரையும் கபீரையும் உதாரணம் காட்டுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் அவமானம் ஏற்பட்டபோது அவர்கள் கவலையேபடவில்லையாம்”.

“புத்தரை அவமானப்படுத்த வேண்டும் என்பதற்காக கௌசாம்பி ராணி, ஓர் இளம் பெண்ணை கொலைசெய்து சடலத்தைப் புத்தர் குடிசைக்கு முன்னால் போடச் சொன்னாள். அப்படியே செய்தார்கள். புத்தர் தான் அந்தப் பெண்ணைக் கெடுத்துக் கொலை செய்துவிட்டார் என்று அப்போது எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் புத்தர் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. பிறகு பிறகு உண்மை தெரிய வந்ததும் புத்தரின் புகழ் இன்னும் அதிகமாயிற்று.

‘ஒரு பெரிய சபையில் ஒரு மோசமான பெண் நுழைந்து, தனக்கும் கபீருக்கும் சம்பந்தம் உண்டு என்று சொன்னாள். அதற்கு கபீர் கவலைப்படவில்லை. அவர்களைப்போல் நாமும் இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும், பழகிக் கொள்ள வேண்டும்”.



“‘நிந்தனை - அபகீர்த்தி அவமானம் எல்லாம் நம்மைப் பண்படுத்துவதற்காக ஆண்டவன் கொடுக்கும் பிரசாதம் என்று நினைக்கவேண்டும்” என்று அந்த ஞானி தெரிவித்தார்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# பொன் விழாக் கண்டு மிளிர்ந்து நிற்கும் மல்லாவி மகா வித்தியாலயம்



**க.அன்ரனி**

‘கல்வி அழகே அழகு’ என நாலடியார் பாடல் வழி கட்டியங் கூறி பரிணமித்து எழுந்ததுதான் வன்னி மண்ணின் மடியிலே மல்லாவி மகா வித்தியாலயம். அது இன்று சான்று பகன்று அதன் பாதையில் வளர்ந்து உயர்ந்து மல்லாவி மத்திய கல்லூரியாக நிமிர்ந்து நிற்கிறது என்றால் மிகையாகாது. மல்லாவி மத்திய கல்லூரியானது மாங்குளம் நகருக்கு அணி செய்யும் வகையில் சந்தியிலிருந்து 10 மைல் தொலைவில் துணுக்காய் வீதியில் அமைந்துள்ள பாடசாலையாக மிளிர்கிறது.

இந்தப் பாடசாலை 10-02-1961 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதிபர் உட்பட 5 ஆசிரியர்களுடன் ஆரம்பமான காலத்தில் 32 மாணவர்களுடன் உதயமானது இந்தப் பாடசாலை 40×20 அடி நீளமான கொட்டிலாக ஆரம்பத்தில் நிர்மாணிக்கப்பட்டது.

ஆரம்ப காலத்தில் கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசுந்தரத்தால் துணுக்காய் விதானையாரது முயற்சியினாலும் அத்திபாரம் இடப்பட்டு தரம் 5 வரையான வகுப்புக்களைக் கொண்ட பாடசாலையாக இயங்கி வந்தது, மல்லாவியுடன் மல்லாவியை அண்டிய கிராமத்திலுள்ள மாணவர்கள் கல்வி கற்பதற்கு பெரும் தளமாக அமைந்தது.

இப் பிரதேசத்து கல்வியியலாளர்களதும் - கிராம முன்னேற்றச் சங்க உத்தியோகத்தர்களதும் முயற்சியால் இந்தப் பாடசாலை வளர்ச்சியினைப் பெற்று படியுயர்ந்து தரம் 8 பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டது. மேலும் அந்தக் கிராமத்தில் அதிகரித்த வளர்ச்சிப் போக்கின் வேகத்தால் தற்போது க.பொ.த. உயர்தரம் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளைக் கொண்டு பரிணமித்து இன்று அந்தப் பிரதேசத்தில் இசுறு பாடசாலையாக மிளிர்கின்றது.

அந்த வகையில் வன்னிப் பெருநிலப்பரப்பில் முல்லை மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள 57 பாடசாலைகளில் முதல் தர 1AB பாடசாலையாக மு/ மத்திய கல்லூரி அமைத்துள்ளது.

இந்தக் கல்லூரியானது முதல் அதிபர் மு.ஆறுமுகத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்டு இந்த வருடம் ஐம்பதாவது வருட நிறைவுடன் பொன்விழாவையும் கண்டுள்ளது. இந்தக் கல்லூரியில் கல்வி கற்று ஆசிரியராகப் பணியாற்றி இன்று அதிபராகப் பணி செய்யும் அளவுக்கு திகழ்கின்றார். தற்போதைய அதிபர் து. ஜேசுதானந்தர்.

இந்தக் கல்லூரியானது ஆரம்பத்தில் ஒரு சிறிய பாடசாலையாக, இருந்து பல தடைகளையும் சவால்களையும் எதிர்கொண்டு பல வகையான வளப்பற்றாக்குறைகளையும் சந்தித்து பலரது முயற்சியின் வெளிப்பாடாகப் படிப்படியாக வளர்ந்து இன்று வரை சாதித்துள்ள சாதனைகளின்பின் இன்று கல்லூரி மிளிர்ந்து நிற்கின்றது. ஒவ்வொரு வளர்ச்சிப்படிகளிலும் பணியாற்றிய அதிபர்கள் ஆசிரியர்கள் எடுத்த பெரும் முயற்சிகள் பயன்படுத்திய முகாமைத்துவ நுட்பங்கள் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன.

இந்தக் கல்லூரியில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் எல்லா நாடுகளிலும் எல்லாத்துறைகளிலும் சிறப்பாகப் பணி செய்து பிரகாசித்துக் கொண்டிருக்கின்றார்கள். பல நாடுகளில் இருந்து கல்லூரியின் வளர்ச்சிக்காக ஒன்று கூடல்களை நடத்துவதோடு பழைய மாணவர் சங்கக் கிளைகளை நிறுவ இடம்பெயர்வுக்கு முன் 2005 -2006 ஆம் ஆண்டு காலப் பகுதியில் லண்டன் பழைய மாணவர் சங்கக் கிளையினர் பெருமளவு நிதியினை வழங்கி கல்லூரியின் வளர்ச்சிக்காக அரும் பாடுபட்டுள்ளார்கள்.

2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது இந்தக் கல்லூரியானது, சொத்துக்களை இழந்து கிளிநொச்சி இராமநாதபுரம் றெட்பாணா ஆகிய பகுதிகளில் இடம் பெயர்ந்த நிலையில் பாடசாலைகளில் தனித்தும் சேர்ந்தும் காலை, மாலை நேர பாடசாலைகளாகவும் இயங்கியபோது தங்களது உடைமைகளை இழந்து உயிர் ஆபத்துக்களை பார்க்காது மாணவர்களின் கல்விக்காகத் தங்களை அர்ப்பணித்து சேவையாற்றிய பிரதி அதிபர் பகுதி தலைவர்கள், ஆசிரியர்கள் பணியாளர்கள் எல்லோரினதும் சேவையால் இன்று இக் கல்லூரி உயர்ந்து நிமிர்ந்து நிற்கின்றது. இருப்பினும், இடப்பெயர்வுகள் போர்க் கொடூரங்களில் பல அழிவுகளைச் சந்தித்த போதும் மன உறுதியுடன் இருந்தது.

அக்கால கட்டத்தில் உடைமைகளை இழந்து உயிர்களையும் இழந்து உடல் அவயங்களை இழந்த பலரோடு கல்வியை மட்டும் சுமந்து கொண்டு முள்ளிவாய்க்காலில் இருந்து முட்கம்பி வேலி வரை சென்று மீண்டும் தனது கல்வியைத் தொடர்வதற்கு முன்பு சில விடயங்களை ஞாபகப்படுத்தின, கொடூரமான போரில் கல்வி கற்ற மாணவர்களின் பெற்றோர்கள் அவர்களின் உடன் பிறப்புக்கள் உறவுகள் பழைய மாணவர் சங்க உப செயலாளர் அமரர் பொன் றஞ்சன் அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்களின் உடன் பிறப்புக்கள் பெற்றோர்கள், உறவினர்கள் போன்றோரை இழந்துள்ள இந்தக் காலப்பகுதியில் ஏற்பட்ட மறக்க முடியாத வடுக்களாக மனத்திரையில் பதித்துள்ளன. 2008 - 2009 ஆகிய இடப்பெயர்வுக் காலப் பகுதியானது கல்லூரியின் வரலாற்றில் இருள் அடைந்த உறங்கிக் கிடந்த மறக்க முடியாத காலங்களாகும்.

> இடப் பெயர்வின் பின் மீள் குடியேற்றம் ஆரம்பித்து 2009–11–27 ஆம் திகதி மீண்டும் சொந்த இடத்திற்கு கல்லூரி கால் பதித்தது, இவ் வேளையில் போரால் சேதமடைந்திருந்த கட்டடங்கள் இரண்டு மாடி கட்டட வகுப்பறைகள், நூலகம் ஆகியவை 1.8 மில்லியன் ரூபாவில் திருத்தம் செய்யப்பட்டன.

இடப் பெயர்வின் பின் மீள் குடியேற்றம் ஆரம்பித்து 2009-11-27 ஆம் திகதி மீண்டும் சொந்த இடத்திற்கு கல்லூரி கால் பதித்தது, இவ் வேளையில் போரால் சேதமடைந்திருந்த கட்டடங்கள் இரண்டு மாடி கட்டட வகுப்பறைகள், நூலகம் ஆகியவை 1.8 மில்லியன் ரூபாவில் திருத்தம் செய்யப்பட்டன.

போர் அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மனமகிழ்விற்கான (BANK OF LIFE) அமைப்பினால் மகிழ்ச்சி இல்லம் சிறப்பாக அமைக்கப்பட்டது முன்னைய வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதனின் ஆதரவும் ஆலோசனைகளும் நிறைவாகக் கிடைத்தன, 2010 ஆம் ஆண்டு ஐந்து பெரிய மண்டபங்கள் சுவர் மூலம் வகுப்பறைகளாக பிரித்து அடைக்கப்பட்டன, வன்னிப் பெரு நிலப்பரப்பில் கலாசார விழாவை எமது கல்லூரியில் நடத்துவதற்கு மாகாணக் கல்வித் திணைக்களத்திடம் அனுமதி பெற்று மைதானத்தில் சேதமடைந்திருந்த இந்திரவதனி கலையரங்கு ஒரு மில்லியன் ரூபாவில் புனரமைக்கப்பட்டு கலாசார விழாவும் சிறப்பாக நடைபெற்றது. இடப்பெயர்வின் பின்னர் பெற்றோர்களை இழந்த மாணவர்களுக்கு றோட்டறிக் கழகம் மல்லாவி மத்திய கல்லூரிக்காக நாங்கள் என்ற பழைய மாணவர் அமைப்பினர் மல்லாவிப் பங்குத் தந்தை, அருட் சகோதரர் தயாகரன் அடிகளார், கியுடெக் நிறுவனத்தினர் ஆகியோரின் உதவி கிடைத்து வருவது பாடசாலை மாணவர்களுக்கு பெரும் ஆறுதலை அளித்து வருகின்றது.

(யுனிசெப்) நிறுவனத்தினால் சுகாதார வசதிகளுக்காக குழாய் நீர் விநியோகம், நீர்ப்பம்பி, நீர்ப்பம்பிக்கான அறை, கிணறு திருத்தம், மலசல கூடம் திருத்தம், என்பன. 0.5 மில்லியன் ரூபா செலவில் செய்யப்பட்டதுடன் மாணவர்கள் ஆசிரியர்களுக்கான தளபாடங்கள் மற்றும் மிதிவெடிகள் விழிப்புணர்வு செயற்பாடு இடர் பாதுகாப்பு மகிழ்வூட்டற் செயற்பாடு என்பவற்றுக்காக தம் நிதியீட்டங்களை வழங்கி வருகின்றன தொடர்ந்து உதவி வருவது இடப்பெயர்வால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு புத்துணர்வையும் மனமகிழ்ச்சியையும் ஏற்படுத்துகின்றது.

2010 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் உயர்ந்த பெறுபேற்றினைப் பெற்ற 16 மாணவர்கள் பல்கலைக் கழகம் சென்றுள்ளனர் பலர் கல்வியியற் கல்லூரிக்கான வாய்ப்பினையும் பெற்றுள்ளனர். இந்தக் கல்லூரி அதிபர் உட்பட 30 ஆசிரியர்களையும் 500 இற்கும் மேற்பட்ட மாணவர்களையும் கொண்டு இயங்கி வருகின்றது.

# முஸ்லிம்கள் ஒன்றுபட்டால் தனித்தே ஆட்சி அமைக்கலாம்

## அழைக்கிறார் மு.கா.வேட்பாளர்



**முஸ்லிம்கள் 42 சதவீதமும், தமிழர்கள் 32 சதவீதமும், சிங்களவர்கள் 25 சதவீதமும் உள்ள நிலையில் திருகோணமலை மாவட்டத்தையும் எம்மால் வெற்றி கொள்ள முடியும் என்று நான் திடமாக நம்புகின்றேன்.**

அம்பாறை,ஓக.27

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற கிழக்கில் நாம் அனைவரும் ஒன்றுபட்டால் ஆட்சியில் பங்காளிகளாக அல்லாமல், நாம் தனித்தே ஆட்சியைக் கைப்பற்ற முடியும். -இவ்வாறு திகாமடுல்ல மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் ஏ.எம்.ஜெமீல் கூறினார்.

சாய்ந்தமருது சீ பிரீஸ் மண்டபத்தில் நடைபெற்ற இளைஞர் அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் 44 சதவீதமும், சிங்களவர்கள் 37 சதவீதமும், தமிழர்கள் 18 சதவீதமும் உள்ளனர். தன்மானமுள்ள முஸ்லிம் இளைஞர்கள், யுவதிகள் மற்றும் புத்திஜீவிகள் நன்கு சிந்தித்துக் களமிறங்கினால் அம்பாறை மாவட்டத்தை எம்மால் ஏன் வெற்றியீட்ட முடியாது?

அதேபோல் திருகோணமலை மாவட்டத்தில் முஸ்லிம்கள் 42 சதவீதமும், தமிழர்கள் 32 சதவீதமும், சிங்களவர்கள் 25 சதவீதமும் உள்ள நிலையில் திருகோணமலை மாவட்டத்தையும் எம்மால் வெற்றிகொள்ள முடியும் என்று நான் திடமாக நம்புகின்றேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நாம் இரண்டாம் நிலையில் உள்ளோம். அங்கு நாம் கணிசமான ஆசனங்களைப் பெறமுடியும். இந்தநிலையில் அனைத்து கிழக்கு மாகாணத்திலும் நாமே கூடிய ஆசனங்களைப் பெறக்கூடிய வாய்ப்பு எம் கண் முன்னே தெரிகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் பேரியக்கமானது எமது சமூகம் முகம் கொடுத்துக்கொண்டிருக்கும் பிரச்சினைகளை அரசியல் மயப்படுத்தி, எமக்கான தீர்வைப் பெற முஸ்லிம் சமூகத்தை ஒற்றுமைப்படுத்தவே சமூக ரீதியாகச் சிந்திக்கின்றது. இது தவிர, நாட்டில் வாழ்கின்ற சகோதர சமூகங்களுடன் ஐக்கியத்துடன் சுமுகமாகவே வாழவே விரும்புகின்றது.

இந்தத் தேர்தலில் பிரதேச ரீதியாகச் சிந்தித்து விருப்பு வாக்குகளுக்குத் துணைபோய் பிரிந்துவிடாமல் கட்டாயமாக மரச்சின்னத்துக்கு அனைத்து முஸ்லிம் மக்களும் வாக்களிக்க வேண்டும். அதன்மூலம் எமது ஒற்றுமையை இந்த நாட்டுக்கும், சர்வதேசத்துக்கும் எடுத்துக்காட்டி மிக விரைவில் ஏற்படப்போகும் இனப்பிரச்சினைத் தீர்வில் எமது பங்கையும் உரிமையுடன் கேட்டுப்பெற இந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நமது வாக்குப் பலத்தைப் பயன்படுத்தி சமூகத்தின் நீண்டகால அபிலாஷைகளையும், உரிமைகளையும் பெற்றுக்கொள்வதற்குக் கிடைத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிடுவோமாயின், நமக்கு இனி ஒருபோதும் இவ்வாறான வாய்ப்புக் கிடைக்கப்போவதில்லை- என்றார். (ச)

# சூறாவளியால் பாதித்த வீடுகள் புனரமைப்பு



மட்டக்களப்பு,ஓக.27

போரதீவுப்பற்றுப் பிரிவில் மினி சூறாவளியினால் பாதிப்படைந்த வீடுகளை சிரமதானம் மூலம் சீர்செய்து கொடுக்கும் பணியில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு கிளை போரதீவுப்பற்று தொண்டர்களூடாக முன்னெடுத்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப் பற்று பிரிவில் அமைந்துள்ள பலாச்சோலை, ஆனைகட்டியவெளி போன்ற பகுதியில் மினி சூறாவளியினால் பாதிப்படைந்த வீடுகளைத் திருத்தியும் முறிந்த மரங்களை அகற்றி சிரமதானப்பணியிலும் செஞ்சிலுவைத் தொண்டர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இந்தப் பணியில் தன்னலம் கருதாது சேவையிலீடுபட்ட தொண்டர்களுக்கும் செஞ்சிலுவை அமைப்பின் மட்டக்களப்பு கிளையினருக்கும் போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் என்.வில்வரெத்தினம் நன்றி தெரிவித்துள்ளார்.

மினிசூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு கிளையினால் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கூரைகளுக்கான பாங்குகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)



மட்டக்களப்பில் அமைக்கப்பட்ட கிழக்கு மாகாண தகவல் தொழில்நுட்ப கணினி ஆய்வகத்தை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர திறந்து வைத்தார்.

# சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர் மீது தாக்குதல்

மட்டக்களப்பு,ஓக.27

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செட்டிபாளையம் பகுதியில் தேர்தல் பிரசாரப்பணிகளில் ஈடுபட்டிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 8 மணிக்கு செட்டிபாளையத்தில் முன்னாள் முதலமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

குறித்த பகுதியில் தேர்தல் பிரசாரப்பணிகளில் ஈடுபட்டிருந்த ஒருவரை மோட்டார் சைக்கிளில் வந்தோர் வழிமறித்து தாக்கியுள்ளதாக அந்தக்கட்சியைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

**தேர்தல் பிரசாரப் பணிகளில் ஈடுபட்டிருந்த ஒருவரை மோட்டார் சைக்கிளில் வந்தோர் வழி மறித்து தாக்கியுள்ளனர்.**

இந்தச் சம்பவத்தின்போது வாழைச்சேனை, பேத்தாழையைச் சேர்ந்த சாமித்தம்பி விநோதன் (27வயது) என்பவரே காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச)

# மீண்டும் முதலமைச்சர் பிள்ளையான்தான்

## லக்பிம தகவல்

கிழக்கு மாகாணத்தில் தமது சகோதரியான உருத்திரமலர் ஞானபாஸ்கரனை முதலமைச்சராக்குவதற்கு பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக லக்பிம செய்தி வெளியிட்டுள்ளது. எனினும் தம்மை தவிர வேறு ஒருவர் கிழக்கின் முதலமைச்சராக மீண்டும் வர முடியாது என்று முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், தமது கருத்துக்களை கூறுவதற்கு அதிகாரம் உள்ளது. அது குறித்து தாம் குற்றம் கூறவில்லை. ஆனால் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் முன்னணி வெற்றிபெறும் என்று பிள்ளையான் குறிப்பிட்டுள்ளதாக லக்பிம செய்தி வெளியிட்டுள்ளது. (ச)

# மட்டு. பெரும்போகம் 25 இல் ஆரம்பம்

மட்டக்களப்பு,ஓக.27

மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும்போக விவசாயச் செய்கையை எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கலாம் என்று வவுணதீவுப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பெரும்போக விவசாயச் செய்கை ஆரம்பக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுணதீவுப் பிரதேசத்தின் உன்னிச்சை நீர்ப்பாசனம், சிறு நீர்ப்பாசனம் மற்றும் மானாவாரி வயல்களில் பெரும் போக விவசாயச் செய்கையை மேற்கொள்வது தொடர்பான ஆரம்பக் கூட்டம் நேற்றுமுன்தினம் வவுணதீவுப் பிரதேச செயலகத்தில் மேலதிக அரச அதிபர் கே.விமலநாதன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது இந்த ஆண்டு பெரும்போக விவசாயச் செய்கையை மேற்கொள்வது தொடர்பான பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் வவுணதீவுப் பிரதேச செயலர் வெ.தவராசா, நீர்ப்பாசண பிரதிப் பணிப்பாளர் மோகனதாஸ், நீர்ப்பாசன பொறியியலாளர்கள், விவசாயத் திணைக்கள அதிகாரிகள், காப்புறுதிக் கூட்டுத்தாபன அதிகாரிகள், வங்கி அதிகாரிகள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், விவசாயிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# யானைகள் அட்டகாசம்; மக்கள் அச்சம்

அட்டாளைச்சேனை,ஓக.27

அட்டாளைச்சேனை, சம்புநகர் பிரதேசத்தில் யானைகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளதுடன் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

சம்புநகர் பிரதேசத்தில் உட்புகுந்த சில யானைகள் அங்குள்ள தென்னை மரத்தோட்டங்களை சேதப்படுத்தியதுடன், குடியிருப்பாளர்களையும் தாக்கமுற்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசத்தில் சில நாள்களாக யானைகள்உட்புகுந்து அட்டகாசப்படுத்தும் நிலை அதிகரித்துள்ளதனால் மக்கள் அச்சமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# தமிழரின் வாழ்வு முள்ளிவாய்க்காலுடன் முடிந்துவிட்டது என நினைக்கக்கூடாது

## முன்னாள் அமைச்சர் மன்சூர் கூறுகிறார்



மருதமுனை,ஓக.27

தமிழ் மக்களின் வாழ்வு முள்ளிவாய்க்காலுடன் முடிந்துவிட்டது என்று எண்ணக்கூடாது. தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும் என்று முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.எம். மன்சூர் தெரிவித்தார்.

மருதமுனை செஸ்டோ ஸ்ரீலங்காவின் ஏற்பாட்டில் 'மருதமுனை வரலாற்றில் தனியாள் ஆளுமை ஏ.எம்.ஏ.ஜெலீல்' நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்குப் பிரதேசத்திலே வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் மக்கள் பிரிவினைவாதிகள் அல்லர். எப்போதும் ஒற்றுமையாகவும், நட்பாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தமிழ் மக்கள் எப்போதுமே முஸ்லிம் மக்களோடு இணைந்து வாழ விரும்புகிறார்கள்.

அவர்கள் இன ஐக்கியத்துடன் வாழ விரும்புகிறவர்கள். ஆனால், எதிர்பாராதவிதமாக அநியாயங்களும், கொடுமைகளும் தலைதூக்கி உரிமைகளும் பறிக்கப்பட்டபோது சகிக்கமுடியாத சூழ்நிலையில்தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்தினார்கள்.

தமிழர் உரிமைகளை மறந்தவர்கள் அல்லர். அவர்களின் எண்ணங்கள் உண்மையானவை. அவர்களின் நியாயமான உரிமைகளும், இனரீதியான சிந்தனைகளும் எவராலும் பறிக்க முடியாதவை - என்றார். (ச)

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உற்சாகமான அனுபவங்களைப் பெறுவீர்கள். நண்பர் ஒருவருடன், வெளியிடங்களுக்குச் செல்ல நேரிடலாம். சிலரின் தந்திரமான செயற்பாடுகளைப் பார்த்து கோபம் அடையலாம். சில வேலைகளை தப்பும், தவறுமாகச் செய்து விட்டு, மீண்டும் செய்ய நேரிடலாம். சிலரின் விமர்சனத்தைச் சந்திக்கலாம்.

**இடபம்:** விளையாட்டாகச் செய்த காரியம் ஒன்று வீண் கவலையை ஏற்படுத்தும். நன்றி மறந்த ஒருவரை நினைத்துக் கவலை அடைவீர்கள். குடும்ப உறுப்பினர்களுடன் சண்டை, சச்சரவுகள் ஏற்படலாம். ஓய்வெடுக்கக்கூட நேரமில்லாத அளவுக்கு, கடும் வேலைப்பளுவைச் சந்திக்கலாம்.

**மிதுனம்:** அலைச்சல் இருந்தாலும் ஆதாயம் பெறுவீர்கள். எதிர்பாராத பலாபலன்களைப் பெற வாய்ப்பு உண்டு. வெளியூர்களில் இருந்து வரும் சிலருக்காகக் காத்திருக்கலாம். குழந்தைகள் கல்வி விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்:** சில காரியங்களில் மதிப்பு, மரியாதை குறையும் அளவுக்கு இருந்தபோதும், சற்று கூடுதல் கவனமிருந்தால் அதைத் தவிர்க்க உதவும். உறவினர்கள் சிலரின் செயற்பாடுகளால் கோபம், பதற்றம் அடையலாம். உங்களின் உள்ளக் குமுறல் ஒன்றை, மற்றவர்களிடம் கொட்டித் தீர்ப்பீர்கள். மனக்குழப்பம் உண்டாகும்.

**சிங்கம்:** வழக்கத்துக்கு மாறாக கூடுதல் நேரம் ஓய்வுக் கொள்வீர்கள். உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர், அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். உல்லாசமாகப் பேசி சிலரிடம் வம்பில் மாட்டிக் கொள்ளலாம். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். குடும்ப உறுப்பினர்களிடம், வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**கன்னி:** நேற்று வந்த வரவுகளை இன்று, தாராளமாகச் செலவு செய்வீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குத்தகை தொடர்பான தொழில் புரிபவர்களுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெறலாம். வெளியிடங்களுக்குச் செல்லும் போது, தூரத்து உறவினர் ஒருவரைப் பார்க்கலாம்.

**நாளை**

ஆவணி- 12 செவ்வாய்க்கிழமை 28.08.2012
திதி: துவாதசி மு.இ. 11.05 வரை
நட்சத்திரம்: பூராடம் மு.ப. 08.02 வரை
சுபநேரம்: 10.35-12.05 வரை
ராகு காலம்: 03.05- 04.35 வரை

**துலாம்:** உங்களின் முயற்சிகளுக்கு சிலர் உறுதுணையாக இருப்பர். குறைந்த அளவில் ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்த வேலை ஒன்றில் கணிசமான ஆதாயம் பெறலாம். நண்பர்கள் வட்டம் விரிவடையும். குழப்பங்கள் இல்லாமல் எதிலும் தெளிவான முடிவு எடுப்பீர்கள். அனுகூலமான நாள்.

**விருச்சிகம்:** உங்களின் திறமையை மற்றவர்களிடம் வெளிப்படுத்த முற்படுவீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கலாம். தெரியாமல் சிலருக்கு, வாக்குக் கொடுத்து விட்டு தவிக்கலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம்.

**தனுசு:** நீங்கள் தடை, தாமதங்களுக்குப் பின்னர் வெற்றி காணும் நாள். நீண்ட தூர பயணங்கள் செல்ல நேரிடலாம். யாரிடமும் குதர்க்கமாக பேசுவதைத் தவிர்க்கவும். மாமன், மைத்துனர்கள் வழியில், அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். நன்றி மறந்த ஒருவரை எதிர்பாராமல் சந்திக்க நேரிடலாம்.

**மகரம்:** உறவினர்களை நம்பி உங்களின் வேலை ஒன்றை ஒப்படைப்பீர்கள். சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமைந்தாலும், அது நல்லவிதமாகவே நடக்கும். சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம்.

**கும்பம்:** நண்பர்களுடன் ஏற்பட்ட மனக்கசப்பு அகன்று பாசம் அதிகரிக்கும். தொழில் ரீதியாக சிலர் உங்களை பாராட்டலாம். நீண்ட நாள் இழுபறி காரியம் ஒன்றை முடித்த திருப்தி காணப்படும். பல மணிநேரமாகும் என, நினைத்த காரியம் ஒன்று, சில மணி நேரங்களில் முடிந்து விடலாம்.

**மீனம்:** பெருமைக்காக சில காரியங்களை செய்து அவதிப்படுவீர்கள். கையிருப்பு குறைந்து பணப்பற்றாக்குறை ஏற்படும். உத்தியோகத்தர்கள் தொழிலில், அதிக கவனமுடன் செயற்பட வேண்டும். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகி விடுமோ என, பயம் கொள்வீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | | | | | 3 | | |
| 1 | 4 | | 6 | 7 | | 2 | 9 | |
| | 7 | | 5 | 3 | | | 4 | |
| | | | | 5 | | | 7 | |
| | 8 | 9 | | 2 | | 6 | 5 | |
| | 5 | | | 1 | | | | |
| | 6 | | | 9 | 3 | | 1 | |
| | 3 | 7 | | 8 | 1 | | 6 | 4 |
| | | 8 | | | | | | 9 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 4 | 7 | 6 | 3 | 9 | 8 | 2 |
| 2 | 7 | 8 | 9 | 5 | 4 | 1 | 3 | 6 |
| 9 | 6 | 3 | 1 | 2 | 8 | 7 | 5 | 4 |
| 4 | 8 | 9 | 3 | 7 | 6 | 2 | 1 | 5 |
| 5 | 3 | 7 | 2 | 1 | 9 | 4 | 6 | 8 |
| 6 | 2 | 1 | 4 | 8 | 5 | 3 | 7 | 9 |
| 3 | 1 | 6 | 8 | 9 | 2 | 5 | 4 | 7 |
| 8 | 4 | 2 | 5 | 3 | 7 | 6 | 9 | 1 |
| 7 | 9 | 5 | 6 | 4 | 1 | 8 | 2 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# ENGLISH EXAMINATIONS

UNIVERSITY OF CAMBRIDGE

A/L முடிந்துவிட்டதா.....?

நீங்கள் பல்கலைக்கழகத்துக்குப் போவதற்கு முன் உங்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்து ஓர் சர்வதேச Engilsh Qualification னை அடையுங்கள். இன்றே Cambridge English Course இல் சேருங்கள்.



எல்லாப்பரீட்சைகளுக்கும் உரிய நூல்கள் கடந்தகால வினாத்தாள்கள் Test போன்றவை எமது கல்லூரியில் கிடைக்கும்.

விரிவுரையாளர்கள் பல்கலைக்கழகங்களில் பல வருடம் விரிவுரையாற்றிய அனுபவம் உடையவர்கள்.

**Cambridge English Exams**
5 மட்டங்களில் நடைபெறுகின்றது.

- C2 Mastery CPE
- C1 Proficiency CAE
- B2 Vantage FCE
- B1 Threshold PET
- A2 Waystage KET

## KEY English Test

**A1 , A2** *U.K Settlement viso* வுக்கான பரீட்சையை *KET*
**KEY English Test** நாளாந்த English பயன் பாட்டிற்கு உகந்த பரீட்சை. பாடங்கள் *Reading and Writing Listening & Speaking*. பரீட்சையில் *70%* புள்ளிகள் பெற்று *A2 Certificale*
*46 - 69* வரையிலா புள்ளிகள பெற்றால் *A1 Certificat* கிடைக்கும்

| | |
|---|---|
| Date of Exam | 17 th Nov 2012 |
| Application closing date | 20 th September |
| Exam Fees | Rs 6300/= |

## Perliminary English Test

**Leval B1**
**PET Perliminary English Test** இது ஓர் **Intermediate Level** பரீட்சையாகும் **For those who want to use English for work and study** நீங்கள்
**B1** தகுதியைப் பெறத்தவறமிடத்து **A2 Certificate** கிடைக்கும் .

| | |
|---|---|
| Date of Exam | 17 th Nov 2012 |
| Application closing date | 20 th September |
| Exam Fees | Rs 7500/= |

## First Certificate in English

**Level B2 FCE**

உலகத்தில் அதிகமானவர்கள் எடுக்கும் பரீட்சை இதுவாகும் **At FCE Leval Candidates can deal confidently with a broad range of written and Spoken English. England** இல் எல்லா **University** களும் **IELTS** ற்கும் பதிலாக இந்தப் பரீட்சையை ஏற்றுக் கொள்ளுகின்றன.

**Subjects** Reading , Writing , Use of English, Listening ,Speaking

ஏன் நீங்கள் Camrdge English பரீட்சைகளை எடுக்கவேண்டும்.
மிகவும் குறைவான பரீட்சைக் கட்டணங்கள்
Certificates are valid for life

| | |
|---|---|
| Date of Exam | 8 th Dec 2012 |
| Application closing | 5 th October |
| Exam Fees | Rs. 11200/= |

| | |
|---|---|
| Course Schedule | Mon, Tue, Wed, Thu |
| Duration | 12 weeks |
| Time | Batch 1 10.30 - 12.30 |
| | Batch 2 04.00 - 06.00 pm |

வகுப்புகள்
29.08.2012 ஆரம்பம்

# CITY COLLEGE OF ENGLISH

143, Adiyapatham Road, Thirunelvely.

எமது புதிய கிளை
பலாலி வீதி, உரும்பிராய்.
[உரும்பிராய் பெற்றோல் நிலையத்திற்கு முன்பாக]

T.P :- 021 2220384 - 077 8803887,
021 3216027

# அரச ஊழியர்களுக்கும் வைத்திய பரிசோதனை

### சுகாதார அமைச்சு நடவடிக்கை

கொழும்பு,ஓக.27


வறுமைப் பிரதேசங்களில் உள்ள அரச ஊழியர்களை பூரண வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

அரச ஊழியர்களைப் பீடித்துள்ள தொற்றாத நோய் குறித்து கண்டறிவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

குறிப்பாக வறுமைப் பிரதேசங்களில் உள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களில் பணியாற்றும் அரச ஊழியர்கள் இவ்வாறு வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

கொழும்பு பொறளை வைத்திய மத்திய நிலையத்தின் உதவியுடன் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் குறித்து இதன்போது சோதனை செய்யப்படவுள்ளதோடு நோய் உள்ள அரச ஊழியர்கள் சிகிச்சைக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)



உடவளவை நீர்த்தேக்கத்தின் நிலைமை தொடர்பில் கண்டறிவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று அப்பகுதிக்குச் சென்றார்.

# தேர்தலில் இருந்து விலகவில்லை

### தமிழர் கூட்டணி அறிவிப்பு

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து அகில இலங்கை தமிழர் கூட்டணி எந்தச் சந்தர்ப்பத்திலும், விலகிக் கொள்ளாது என்று அக் கூட்டணியின் செயலாளர் விக்னேஸ்வரன் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கபட்டிருப்பதாவது:-

எமது கூட்டணி கிழக்கு மாகாணசபைத் தேர்தலிலிருந்து விலகிக்கொண்டதாக பொய்ப் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது. இது ஓர் அப்பட்டமான பொய்யாகும்.

எமது கூட்டணி எந்தச் சந்தர்ப்பத்திலும் தேர்தலிலிருந்து விலகிக்கொள்ளாது. மக்களுக்கு புதிய பாதை ஒன்றைக் காட்டுவதற்காகவே எமது கூட்டணி தேர்தலில் போட்டியிடுகின்றது.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-சி)

# ஹிந்தோட்டையில் கடைக்குத் தீ

இரண்டு குழுக்களுக்கு இடையிலான மோதலைத் தொடர்ந்தே தீவைக்கப்பட்டது.

கொழும்பு,ஓக.27

காலி, ஹிந்தோட்ட பிரதேசத்தில் வியாபார நிலையங்கள் மூன்றில் தீ பரவல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் இந்தத் தீ பரவல் இடம்பெற்றுள்ளது.

தீயியை காலி தீயணைப்புப் படையினர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். இரண்டு குழுக்களுக்கு இடையிலான மோதலைத் தொடர்ந்து வியாபார நிலையங்களுக்கு தீயிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை காலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# தூக்கி எறியுங்கள் அமைச்சர் பதவியை

### ஹக்கீமுக்கு உயர்பீடம் அழுத்தம்



கொழும்பு,ஓக.27

அமைச்சர் பதவி வேண்டாம். அந்தப் பதவியைத் தூக்கி எறியுங்கள் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதி உயர்பீடத்தினால் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது.

**அமைச்சரவையில் அங்கம் வகித்துக் கொண்டு தேர்தல் மேடைகளில் அரசை விமர்சனம் செய்வது நகைப்பிற்குரியது என்று உயர் பீடம் சுட்டிக்காட்டியுள்ளது.**

கிழக்கு மாகாணத் தேர்தல் பிரசாரப் பணிகள் சூடு பிடித்திருக்கும் சந்தர்ப்பத்தில் இவ்வாறு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான பசீர் சேகுதாவூத் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

அமைச்சரவையில் அங்கம் வகித்துக் கொண்டு தேர்தல் மேடைகளில் அரசை விமர்சனம் செய்வது நகைப்புக்குரியது என்று உயர் பீடம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த அழுத்தம் காரணமாக ஹக்கீம் விரைவில் மிக முக்கியமானதீர்மானம் ஒன்றை எடுப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஹக்கீம் பதவி விலக மறுத்தால் அவரது பிரசன்னம் இன்றி தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்வது குறித்து கட்சியின் அதி உயர்பீடம் கவனம் செலுத்தி வருகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

# 9 கடைகளில் திருட்டு; சந்தேகநபர் சிக்கினார்

கொழும்பு,ஓக.27

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூஜாபிட்டிய நகரில் 9 கடைகளை உடைத்து சுமார் 12 லட்சம் ரூபா பெறுமதியுள்ள பொருள்களைத் திருடியதாகக் கூறப்படும் சந்தேநபர் ஒருவரை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைதுசெய்துள்ளனர்.

குறித்த நபர் பொருள்களைத் திருடிப் பல பிரதேசங்களுக்கு விற்பனை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கணினிகள், கையடக்கத் தொலைபேசிகள், வாகன உதிரிப்பாகங்கள், உணவுப் பொருள்கள் உட்படப் பல பொருள்களை இவர் திருடியுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. (ச)

# சிலாபத்தில் ஒதுங்கிய இரும்புக் குழாய்கள்



கொழும்பு,ஓக.27

இரும்புக் குழாய்கள் சில சிலாபம் கடலில் கரையொதுங்கியுள்ளன. 46 அடி நீளமும் 3 அடி அகலமும் கொண்ட இந்த இரும்புக் குழாய்களைக் கரைக்கு கொண்டு வரும் நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

பாணந்துறை கடலில் மூழ்கிக்கொண்டிருக்கும் வெளிநாட்டுக் கப்பலைச் சேர்ந்த இரும்புக் குழாய்களே இவ்வாறு சிலாபம் கடலில் கரையொதுங்கியிருக்கலாம் என்று கடற்படையினரும், மீனவர்களும் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் கரையோர பாதுகாப்பு அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்கள் இது குறித்த விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# இலங்கைக்கு எதிராக மீண்டும் ஜெனிவாவில் தீர்மானம் வரும்

### ஐ.தே.க. எச்சரிக்கை

கொழும்பு,ஓக.27

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையின் பூகோள காலக்கிரம மீளாய்வுக் கூட்டத்தொடருக்கு இலங்கை அரசு அனுப்பி வைத்துள்ள பதில் அறிக்கை பூரணமாக இருக்காவிட்டால், இலங்கைக்கு எதிராக இன்னுமொரு தீர்மானம் வருவதைத் தவிர்க்கமுடியாமல் போய்விடும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், தேசிய இனப் பிரச்சினைக்கு இந்த அரசிடம் எதுவிதத் தீர்வுகளும் இல்லை. அரசு காலத்தை இழுத்தடிக்கும் கைங்கரியத்தைக் கையாள்வது இதற்குச் சான்றாகும் என்றும் அந்தக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையின் பூகோள காலக்கிரம மீளாய்வுக்கூட்டத்தொடரின்போது இலங்கைக்கு 72 பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

குறித்த பரிந்துரைகளை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தி அடுத்த கூட்டத்தொடரின்போது பதில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என அதன்போது நிபந்தனை விதிக்கப்பட்டது. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உலக காலக் கிரம மீளாய்வுக் கூட்டத் தொடர் 4 வருடங் களுக்கு ஒரு தடவை நடைபெறவுள்ளது.

அந்த அடிப்படையில் 2008 ஆம் ஆண்டு கூடிய உலக காலக்கிரம மீளாய்வுக் கூட்டத்தொடர் மீண்டும் இந்த வருடம் நவம்பர் மாதத்தில் கூடவுள்ளது. இக்கூட்டத்தொடருக்கு இலங்கை அரசு, பரிந்துரை நடைமுறைதொடர்பில் பதில் அறிக்கையொன்றை அனுப்பி வைத் துள்ளது.

இலங்கை அரசின் இந்த அறிக்கையை மீளாய்வு செய்வதற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகம் இந்தியா, ஸ்பெயின், பெனின் ஆகிய மூன்று நாடுகளை நியமித்துள்ளது. குறித்த மூன்று நாடுகளும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 19ஆவது கூட்டத் தொடரின்போது இலங்கைக்கு எதிராக வாக்களித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த மூன்று நாடுகளும் இலங்கையின் பதில் அறிக்கையை ஆய்வுசெய்த பின்னர், அதில் திருப்தியில்லையென அறிக்கை தாக்கல் செய்தால், இலங்கைக்கு எவ்வாறான நிலை உருவாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் வெளிவிவகார நடவடிக்கைகளைக் கையாளும் முக்கிய உறுப்பினரும், கட்சியின் உப தலைவருமான லக்ஷ்மன் கிரியெல்லவிடம் செய்தியாளர் வினவியபோது,

இலங்கை அரசு ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பூகோள காலக்கிரம மீளாய்வுக்குப் பதில் அறிக்கை அனுப்பிவைத்துள்ளது. அந்த அறிக்கை இணையத்தளத்தில் வெளியிடப்படும் என வெளிவிவகார அமைச்சர் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

அது குறித்து ஆராய்ந்த பின்னரே உத்தியோக பூர்வமாக எதையும் அறிவிக்கமுடியும்.

எப்படியிருந்தபோதிலும் பரிந்துரை நடைமுறை விடயம் பூரணமாக இல்லாமல் இருந்தால் இலங்கைக்கு எதிராக இன்னுமொரு தீர்மானம் வரும். அதை தடுக்க முடியாது - என்றார். (ச-சி)

# நீதித்துறை சுதந்திரமாகச் செயற்படவில்லை

### சரத் பொன்சேகா குற்றச்சாட்டு



கொழும்பு,ஓக.27

இலங்கையின் நீதித்துறை இன்று சுதந்திரமாகச் செயற்படவில்லை. அது இன்று 18 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் சர்வாதிகாரியினால் நியமிக்கப்படும் நீதிபதிகளால் நிர்வகிக்கப்படுகின்றது என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரிய உட்பட்டோர் பங்கேற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் அரசை தோற்கடிக்க பொது எதிர்க் கட்சி ஒன்று உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். (ச)

# பூந்தமல்லி முகாம் உண்ணா நோன்பாளி செந்தூரன் வைத்தியசாலையில்

பூந்தமல்லி சிறப்பு அகதிகள் முகாமில் உண்ணாவிரதம் இருந்து வந்த செந்தூரன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாட்டுக்கு உரிய ஆவணங்கள் இன்றி கடல் வழியாக வந்த இலங்கை அகதிகளை பொலிஸார் கைது செய்து செங்கல்பட்டு சிறப்பு அகதிகள் முகாமில் அடைத்து வைத்தனர். அங்கு ஏற்பட்ட பிரச்சினையால் செந்தூரன் என்பவரை பூந்தமல்லியில் உள்ள சிறப்பு அகதிகள் முகாமுக்கு மாற்றி இருந்தனர்.

சிறப்பு முகாம்களில் உள்ள இலங்கை அகதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று செந்தூரன் கடந்த 6ஆம் திகதி முதல் தொடர் உண்ணா விரதம் மேற்கொண்டு வந்தார். கடந்த சில தினங்களாக தண்ணீர் கூடப் பருகாமல் உண்ணாவிரதம் இருந்து வந்தார். அவரிடம் உண்ணாவிரதத்தை கைவிடுமாறு அரசு அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

ஆனால் பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் செந்தூரனின் உடல் நலம் குன்றியதால் அவரை உடனடியாக வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை அளிக்க வேண்டும் என்று டாக்டர்கள் கூறினர்.

இதையடுத்து பொலிஸார் விரைந்து சென்று உண்ணாவிரதம் இருந்து வந்த செந்தூரனை வானில் ஏற்றினார்கள். அவரை சென்னை அரச வைத்தியசாலையில் சிகிச்சைக்காகக் கொண்டு சென்று சேர்த்தனர்.(3)


**வேலை ஆள்கள் தேவை**

1) களஞ்சியகாப்பாளர்- ஆண்/பெண் (அனுபவமுள்ளவர்கள் மட்டும்)
2) Room Boy தேவை.
தொடர்பு:- 0214925102
இன்று 27.08.2012 நேரில் வரவும்
(22220) (15-6-7)


# தரமற்ற டீசல் கலப்படம் செய்து விற்பனைக்கு

இலங்கை ரயில் திணைக்களம், இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபை ஆகியவற்றுக்கு விநியோகிக்கப்பட்டிருந்த தரக்குறைவான டீசலை மீளப்பெற்று புதிய டீசல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மீளப்பெற்ற தரக்குறைவான டீசலை சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு சுத்திகரிப்பு நிலையத்துக்கு மீள அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த டீசலை எரி எண்ணெயுடன் கலப்படம் செய்து சந்தைப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்புத் தொகுதியின் பொறியியல் பிரிவின் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மீளவும் சுத்திகரிப்பது தொடர்பாகவே சப்புகஸ்கந்தை புதிய சுத்திகரிப்புத் தொகுதிக்கு அந்த டீசல் தொகைகள் கொண்டுவரப்பட்டுள்ளதாகப் பிரசாரப்படுத்தப்பட்டுள்ள போதிலும் தரம் குறைந்த இந்த டீசலை அங்கு மீள சுத்திகரிக்க இயலாது எனவும் மேற்படி தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் சுத்திகரிப்புத் தொகுதியிலிருந்து பெறப்படும் எரியெண்ணெய் இந்தப் புதிய விநியோகக் களஞ்சியத்தின் 4 ஆம் இலக்கம் கொண்ட தாங்கியிலிருந்தே சந்தைப்படுத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (3-22)


**வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**



- 11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் 1 Kg க்கு UK 650 /= Germany 710 /= France 765 /=
- யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் பொதிகளை உங்கள் வீட்டிலிருந்தவாறே அனுப்பிக்கொள்ளலாம். (Door to Door Service)
- 24 மணி நேரத்தில் விநியோகிக்கும் சேவை (TDD Service)
- மருந்து பொருட்கள், கடலுணவு , மற்றும் எண்ணெய் வகைகள் என்பனவும் அனுப்பிக்கொள்ளலாம்.
- மேலும் சகல நாடுகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி , யாழ்ப்பாணம். Tel : 021 222 6113

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
International Courier & Cargo Service



**புதிய கார் விற்பனைக்கு**

புத்தம்புதிய TATA இன்ரிக்க (சீற்ரா) NP.KH XXXX தொடர் இலக்கம் கொண்ட மரூன் கலர் கார் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0777148148



**af ALLIANCE FRANCAISE DE JAFFNA**
The Only Official French Language Centre in Jaffna

*Learn French the French Way*

French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட, சர்வதேச தரம் வாய்ந்த, யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனமாகிய Alliance Francaise de Jaffna ஊடாக பிரெஞ்சு மொழி வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. France மற்றும் பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்குச் செல்வோர் மற்றும் மொழி ஆர்வமுள்ள எவரும் கற்றுக்கொள்ளலாம்.

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்...
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
61, Kachcheri - Nallur Road, Jaffna Phone: 021 2228093
E-mail: alliance jaffna@yahoo. com
(றக்கா வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டடம்)
மேலதிக விவரங்களை நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம்.
(21993) (2-6-7)


**கண்ணீர் அஞ்சலி**



எமது குருவானவரும் நிறுவனத்துக்கு வழிகாட்டியாய் இருந்த
பொன்னுத்துரை ஜெயசீலன்
(கண்ணன் மாஸ்டர்)
(Institute of .A.C.E. சுன்னாகம்)
அவர்களின் மறைவு எமக்குப் பேரிழப்பாகும். இவரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

No.338, Stanly Road, Jaffna.
உரிமையாளரும், பணியாளர்களும்.
Cool Kingdom Engineering
(22242)(5-6-7)

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை ஜெயசீலன் (கண்ணன் மாஸ்ரர்)

(பிரபல குளிரூட்டி தொழிநுட்பவியலாளர்)

ஆனைக்குட்டி மதவடி, தெல்லிப்பழை கிழக்கைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை ஜெயசீலன் நேற்று முன்தினம் (25.08.2012) சனிக்கிழமை காலமானார்.



அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை- விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தவனம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கலாநிதியின் பாசமிகு கணவரும், நந்தகோபன் (சிசில் கொம்பனி, யாழ்ப்பாணம்), பிரதாபன் (முதலாம் வருட கணினி விஞ்ஞான பிரிவு மாணவன்,யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் சச்சிதானந்தன், மகேந்திரன், தெய்வேந்திரம், ஜெயக்குமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேஸ்வரி, மகாலிங்கம்,Dr.சிவஞானம்,சிவகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(27.08.2012) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
(22244)(5-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி தியாகராசா தவம்ணி

(ஓய்வுபெற்ற ஆசிரியை - வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை)



தலைகாட்டி, வேலணைமேற்கை பிறப்பிடமாகவும் இல.01, சோமசுந்தரம் அவனியு சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தியாகராசா தவமணி கடந்த 25.08.2012 சனிக்கிழமை காலமாகி விட்டார்.


அன்னார் காலஞ் சென்றவர்களான வேலுப்பிள்ளை (நாகேசர்) - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் நாரந்தனை தம்பிஐயா - சுபத்திரை தம்பதியரின் அன்பு மருமகளும் சாம்பசிவத்தின் (ஆஸ்திரேலியா) அன்புத்தாயாரும் ஜெயரூபியின் (ஆஸ்திரேலியா), அன்பு மாமியும் காலஞ்சென்ற அருளானந்தசோதி மற்றும் சுசிலா வைத்தியநாதன் ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் சங்கவதியம்மா, வைத்தியநாதன் ஆகியோரின் மைத்துனியும் சாயித்தனின் (ஆஸ்திரேலியா) அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.01 சோமசுந்தரம் அவனியு சுண்டுக்குளியில் இன்று (27.08.2012) திங்கட் கிழமை மு.ப 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.01,சோமசுந்தரம்
அவனியு
சுண்டுக்குளி.
(22243) (15-6-7)

தகவல்
திரு.திருமதி சாம்பசிவம் (மகன்)
சுசிலா வைத்தியநாதன் (சகோதரி)




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.




அளவெட்டி, ஓக.26

அளவெட்டி நாகேஸ்வரம் நாகவரத நாராயணர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளைமறுதினம் புதன்கிழமை காலை 8 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவில் எதிர்வரும் செப்ரெம்பர் 5 ஆம் திகதி புதன்கிழமை கைலாசவாகனத் திருவிழாவும், 6 ஆம் திகதி சப்பரத் திருவிழாவும் 7 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம்பெறும். 8 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (3-36)

# கிறிஸ்மஸ்தீவு தடுப்பு முகாமில் தஞ்சம் கோருவோர் உண்ணாவிரதம்

ஆஸ்திரேலியாவின் வடமேற்கே கிறிஸ்மஸ் தீவில் உள்ள தடுப்பு முகாம் ஒன்றில் தஞ்சக் கோரிக்கையாளர்கள் பலர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தாம் அகதிகளாக ஏற்றுக் கொள்ளப்பட முன்னரே தமது கோரிக்கையை பரிசீலிப்பதற்காக பசிபிக் தீவான நவ்றூவுக்கு தம்மை அனுப்பிவைக்கும் ஆஸ்திரேலிய அரசின் நடவடிக்கைக்கு எதிராகவே அவர்கள் இந்தப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

தமது கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்[illegible]ாமல் பல ஆண்டுகளுக்கு ந[illegible]றூ தீவிலேயே தங்கிவிட நேர[illegible] என்று தாம் அஞ்சுவதாக தஞ்சக கோரிக்கையாளர் ஒருவர் கூறினார்.

பாதுகாப்பற்ற படகுப் பயணங்கள் மூலம் ஆஸ்திரேலியாவுக்குள் வரமுயற்சிப்போரைத் தடுத்து வைப்பதற்காக நவ்றூ மற்றும் பப்புவாநியுகினி ஆகிய இடங்களில் விசாரணை மையங்களை திறப்பதற்கு அண்மையில் ஆஸ்திரேலிய நாடாளுமன்றம் அனுமதி வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஆபத்தான கடற்பயணங்கள் மூலம் தஞ்சக் கோரிக்கையாளர்கள் ஆஸ்திரேலியாவுக்குள் நுழைவதைத் தடுக்கும் நோக்கோடு இந்த இரண்டு தொலைதூரத்து தடுப்பு முகாம்களும் திறக்கப்படுவதாக ஆஸ்திரேலியா கூறுகிறது.

இனிமேலும் படகுகளில் ஏறி ஆஸ்திரேலியா நோக்கி வருபவர்கள் நேராக இந்தத் தடுப்பு முகாம்களுக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும் தாம் தங்கியிருக்கும் இடைத்தங்கல் இடங்களிலேயே தங்கியிருந்து சட்டரீதியான வழிமுறைகளில் தஞ்சம் கோருபவர்களுக்கு அதிக வாய்ப்புகள் அளிக்கப்படும் என்றும் அவுஸ்திரேலிய பிரதமர் ஜூலியாகிலார்ட் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலிய அரசு அதன் சுயாதீன ஆணைக் குழுவொன்றின் பரிந்துரையின்பேரில் தான் ஏற்றுக் கொள்கின்ற அகதிகளின் எண்ணிக்கையை 40 வீதத்தால் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(3)

# கழிவுகள் அகற்றப்படுமா?

அளவெட்டி, ஓக.27

மாகியப்பிட்டிச் சந்தியில் இருந்து அளவெட்டிக்குச் செல்லும் வீதியில் 30-50 மீற்றர் தொலைவில் உள்ள திருவள்ளுவர் சனசமூக நிலையத்துக்கு முன்னால், பல மாதங்களாக கழிவுப் பொருள்கள் அகற்றப்படாத நிலையில் பொதிகட்டியவாறு குவிந்துள்ளன. இந்தக் கழிவுப் பொருள்களை அகற்றுவதற்கு எவரும் இதுவரை முன்வரவில்லை. இதனால் தெரு நாய்கள் அவற்றை இழுத்துச் சிதறி மேலும் அசிங்கப்படுத்துவதால் கழிவுகள் நாலா பக்கமும் சிதறிக் காணப்படுகின்றன. இனி மழைக்காலம் என்பதால் இவற்றை அகற்றாவிட்டால் நனைந்து இவை துர்நாற்றம் வீசும் அதேசமயம் தொற்றுநோய்களும் பரவும் சூழல் உருவாகும்.

இவற்றை அகற்றுவதற்கு சம்பந்தப்பட்ட பிரதேச சபை நடவடிக்கை எடுக்குமா என இப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (3-36)

# முடியுமா வீதிப் புனரமைப்பு?

அச்சுவேலி, ஓக.27

ஆவரங்கால் சந்தியில் வீதிப் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியடையாமல் இருப்பதால் தொடர்ந்தும் பொதுமக்கள் பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாகிவருவதாக விசனம் தெரிவிக்கின்றனர். பருத்தித்துறை- யாழ்ப்பாணம் வீதி அகலமாக்கப்பட்டு சீரமைக்கப்பட்டு உள்ள நிலையில் ஆவரங்கால் சந்திப்பகுதியில் அச்சுவேலிக்குச் செல்லும் வீதிச் சந்தியில் வீதிப்புனரமைப்புக்கான கருங்கல்லும் கல்லுத் தூசும் கொட்டப்பட்டு பரவிய நிலை யில் உள்ளது. இந்தப் பகுதியில் வாகனங்கள் வரும் போது பெருமளவில் தூசு அள்ளி வீசப்படுவதோடு கருங் கல்லு வாகன ரயரில் சிக்குண்டு வீசப்படுகின்றது. இதனால் அப்பகுதி மக்களும் பயணிகளும் பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.(3-11)

# ‘அனைவருக்கும் சுகவாழ்வு’

அளவெட்டி, ஓக.27

தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் ஆலய வருடாந்த உற்சவகாலத்தை முன்னிட்டு ஆலயச் சூழலில் இன்றும், நாளையும் நாளை மறுதினமுமாக மூன்று நாள்கள் ‘‘அனைவருக்கும் சுகவாழ்வு’’ என்னும் தொனிப்பொருளில் சிகிச்சைகள் நடைபெறவுள்ளன.

சுகவாழ்வு, மருத்துவ விழிப்புணர்வுக் கல்வி, நோய் ஆய்வுப் பரிசோதனைகள் என்பன தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் நடத்தப்படவுள்ளன.

திருவிழாக்காலங்களில் கூடும் பக்தர்களுக்கு ‘‘அனைவருக்கும் சுகவாழ்வு’’ நல்ல பயனைக் கொடுக்கும் என்பதால் இங்கு நீரிழிவு நோய், குருதி அழுத்தம், உடற் பருமன் உடையவர்கள் பயனடையக் கூடியதாகவும் அதற்குரிய வைத்திய ஆலோசனைகளும் வழங்கப்படும் எனவும் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (3-36)

# கொழும்புத்துறையில் வீதி மின் விளக்குகள் ஒளிருமா?

கொழும்புத்துறை, ஓக.27

கொழும்புத்துறை வீதியில் உள்ள வீதி விளக்குகளில் பெரும்பாலானவை இரவு நேரங்களில் ஒளிராது காணப்படுகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சுண்டுக்குளிச் சந்தியில் இருந்து கொழும்புத்துறைச் சந்தி வரையான மின்கம்பங்களில் தேவையான இடங்களில் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள போதிலும் ஒரு சிலவற்றைத் தவிர ஏனையவை நீண்ட நாள்களாக ஒளிராதுள்ளன.

அதேவேளை புதிதாக மின்சார சபையினரால் மின் விளக்குகள் பலமுறைகளில் பொருத்தப்பட்டாலும் அவை சில வாரங்களில் மீண்டும் பழுதடைந்து விடுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது இரவு வேளைகளிலும் வீதிப்போக்குவரத்துக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதனால் வீதிகள் இருளில் மூழ்கியுள்ள போது விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களும் அதிகரிக்கின்றன.

அதேவேளை வீதிகள் இருளில் மூழ்கியுள்ளமையால் திருடர்களுக்கும் மற்றும் முறைகேடான செயல்களில் ஈடுபடுவோருக்கும் சாதகமாக அமைவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே யாழ். மாநகர சபையும், மின்சார சபையும் இவ் விடயத்தில் கவனம் செலுத்தவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(3-135)

# மரண அறிவித்தல்

## திருமதி தெய்வேந்திரன் ஜெகதாம்பிகை
(இந்திரா)



சுப்பிலாகலட்டி, கோப்பாய் தெற்கு, கோப்பாயை பிறப்பிடமாகவும், அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வேந்திரன் ஜெகதாம்பிகை நேற்றுமுன்தினம் (25.08.2012) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் செல்லம்மா தம்பதியரின் இளைய புதல்வியும், கலஞ்சென்றவர்களான பாலசிங்கம்-வள்ளியம்மை தம்பதியரின் ஆசை மருமகளும், தெய்வேந்திரனின் (ஓய்வுபெற்ற தபால் ஊழியர், அச்சுவேலி) பாசமிகு மனைவியும், துவாரகனின் (GAQ-2012 புதிய உயர் கல்லூரி) பாசமிகு தாயாரும், குருமூர்த்தி, சோதிலிங்கம், லோகநாயகி, குகனேஸ்வரன், காலஞ் சென்ற பரமேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கருணானந்தன், நளாயினி(சுவிஸ்), ரவீந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் துசியந்தினி(மாவட்ட செயலகம், யாழ்ப் பாணம்), விஜியந்தினி, லக்ஷாயினி(சுவிஸ்), யாழினி (ஜேர்மனி), கோபிகிருஷ்ணா(கனடா), ரஜீவன்(சுவிஸ்), மிதுலன்(யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி) ஆகியோரின் சிறிய தாயாரும், சொரூபன், தர்மினி, கார்த்திக், சஜிந்தா(கனடா), திவ்யந்தினி, வேணுஜா (யா/இந்து மகளிர் கல்லூரி), சண்ஷாயினி(சுவிஸ்), தக்சாயினி (சுவிஸ்), அகிம்சன்(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கீர்த்தியா (A/L-2014, யா/இந்து மகளிர் கல்லூரி), சங்கீர்த்தன், கிருசிகன்(யா/கொக்குவில் இந்து கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுப்பிலா கலட்டி, கோப்பாய் தெற்கில் அமைந்து உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (27.08.2012) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் இருபாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

டச்சுறோட்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/2943)(5-6-7)

# சந்நிதி ஆலய நிகழ்வுகள்

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் நடைபெற்று வரும் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு பதினொராம் திருவிழாவான இன்று திங்கட்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு செஞ்சொற் செல்வர் இரா. செல்வவடிவேல் "மரணமில்லா வாழ்வு" எனும் கருப்பொருளில் சொற்பொழிவு ஆற்றுவார். (3-8)

* *

ஆலய முன்றிலில் மாலை 4 மணிக்கு சைவப்புலவர் சு.ப. ஜெயகோபாலசாமி ‘‘கண்ணப்பா நில்லு’’ எனும் கருப்பொருளில் சொற்பொழிவு ஆற்றுவார். (3-8-253)

## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட “ A ” தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும். எம்மிடம் கோழிக்குஞ்சு வாங்குபவர்களிடம் புறொயிலர் கோழி (இறைச்சிக் கோழி) மீள் கொள்வனவு செய்யப்படும்.

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர்
வட்டுக்கோட்டை
தொ.பே : 077 8996085

(21786) (5.6.7)

## துயர் பகிர்கின்றோம்



எமது கலாசாலை ஆசிரிய மாணவன் ச.பரமேசன் அவர்களின் தந்தையான திரு.ப.சரவணமுத்து அவர் களின் மறைவையிட்டு (25.08.2012) துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆங்கில மன்றம்,
பலாலி ஆசிரியர் கலாசாலை.

(22237)(5-6-7)

## வலி கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் -கோப்பாய்

பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரல் (தற்காலிகம்)

கீழ்க்காணப்படும் பதவிகளுக்கு பொருத்தமான தகைமையுடையோர் சுயவிவரங்களை உள்ளடக்கிய விண்ணப் பத்துடன் கல்வித் தகைமைச் சான்றிதழ் போட்டோஸ்ரட் பிரதியையும் இணைத்து 2012.09.10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப் பிக்கவும். சம்பளம் தொடர்பாக நேரில் பேசித் தீர்க்கலாம்.

- முகாமையாளர் பதவி
- விற்பனையாளர் பதவி
- கணக்கு பதிவாளர் பதவி
- விற்பனை உதவியாளர் பதவி

க.பொ.த.உயர்தரம், கூட்டுறவுப் பயிற்சி, கணினி அறிவு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

தலைவர்
வலி.கிழக்கு கால்நடை வளர்ப்போர்
கூட்டுறவுச் சங்கம், கோப்பாய்.

(சி/2942)(5-6-7)

# எம்மை நாமே...



"பொம்பள சிரிச்சாப் போச்சு..." என்ற பேச்சு தமிழ் பேசும் மக்களிடம் சர்வ சாதாரணமாகச் சுற்றி வருகின்ற ஓர் எச்சரிக்கைச் சொல்லாகும். இது எதைக் குறிக்கின்றது? ஒரு பெண்ணிடத்தில் உரையாடுகின்ற எந்த ஒரு ஆடவனும் முற்றிலும் துறந்த முனிவனாகப் பேச மாட்டான். அப்படிப்பட்ட இயல்பில் மனிதன் படைக்கப்படவும் இல்லை.

ஒரு பெண்ணிடம் பேசும் போது அவளின் கண் சாடை கிடைக்காதா? சிரிக்க மாட்டாளா? என சிரிப்புக்காக தவம் கிடப்பான். சிரித்து விட்டால் போதும் அது தனது இச்சையைத் தீர்ப்பதற்காக கொடுக்கப்பட்ட பகிரங்க அழைப்பு என்று எடுத்துக் கொண்டு அடுத்தக் கட்ட நடவடிக்கையில் இறங்கி விடுவான். எனவே ஒரு பெண் எப்போதும் ஆடவனிடம் கண்டிப்பாகவும், கடுமையாகவும் இருக்க வேண்டும் என்பதைத் தான் இந்தப் பழமொழி தெரிவிக்கின்றது.

பெண்கள் ஆண்களிடம் குழைந்து, கொஞ்சி, நயந்து பேசினார்கள் என்றால் அது அவர்கள் சபல உணர்வுகளுக்குக் காட்டும் பச்சைக் கொடியாகி விடும்.

பெண்கள் இன்று வெளியே ஆட்டோ, கார், பஸ் ஆகியவற்றில் பயணம் செய்கின்றனர். ஆனால் ஆட்டோ, கார், பஸ் டிரைவர்கள் கண்டக்டர்களிடம் அநாவசியமான பேச்சுக்கள் வைத்திருக்கக் கூடாது.

கடைகளுக்குச் சென்றால் பொருள்கள் வாங்கிக் கொண்டு திரும்ப வேண்டியதுதான் அங்கு அளவுக்கு அதிகமாக அரட்டை அடித்துக் கொண்டு இருப்பதுதப்பு. இன்று வியாபாரிகள் வீடுகளுக்கு வருகின்றனர். அவர்களை ஆட்கள் இல்லாத நேரம் உள்ளே எடுத்து பேசுவதும் தப்புத்தான். இதைவிட கணவனின் நண்பர்கள் என்று பலர் வருகின்றனர். இத்தகையோரிடம் கட்டுப்பாடற்ற முறையில் பேச்சுக்கள் வைத்திருப்பது கூட பெரும் தப்புதான்.

இப்படிச் சின்னச்சின்ன விடயங்களில் பெண்கள் விழிப்பாக இருந்தால் பெரும் ஆபத்துக்களிடமிருந்து எம்மை நாமே காப்பாற்றிக் கொள்ளலாம் அல்லவா?

# விடியலைத் தேடி...

விடிந்தும் விடியாத பொழுதுகளை
பெயரிற்காய் விடியவைத்து
விளக்கேற்றியது போதும்- பெண்ணே
விடியலைத் தேடிப்புறப்படு
அடுக்களையை அர்த்தப்படுத்தாமல்
அடிமைக் தளையறுத்து அறிவுக்கரத்தால்
அகிலத்தை வாழவை.....
சீதனக்காற்றிற்கு தலையசைத்து
திசைமாறியது போதும்
அடிமரமாய் அசையாது நின்று- எம்
விசையைக்காட்டிடு
மௌனப்போர்வைக்குள் மறைந்து கொண்டு
மறுப்புக்களை மறைப்பதுவும்
விருப்பமின்றியே விலைபோவதும்
போதும் போதும்
நாணப் போர்வையை விலக்கிவிட்டு
வெளியேறி வா.....எத்தனை நாட்கள் தான்
நட்சத்திரமாய் மின்னி வானை அலங்கரிப்பது
வெண்ணிலவாய் உவமைப்பட்டு
போதை யேற்றுவது
கவலைகளால் தேய்ந்து போவது போதும்
சூரியனாய் நீ மாறி வானத்தையே வாழவை
கிட்ட நெருங்கிடும் விட்டில்களைச் சுட்டெரி
விடியலுக்கான பூபாளத்தை
நீயே இசைத்துவிடு

கே.கிருஷ்ணமீரா

# தட்டிக் கொடுப்புக்களும் ஊக்குவிப்பும் இருந்தால்...

பெண்களைச் சாதாரணமானவர்கள் என்று எண்ணி விடுவது பொருந்தவறு. எதையும் சமாளித்து முன்கொண்டு செல்லக்கூடிய திறமைகள் அவளிடம் நிறையவே இருக்கின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக எல்லாத்துறைகளிலும் பெண்கள் பங்களிப்புச் செலுத்தி வருவதைக் காணலாம்.

எனினும் ஒரு சில பெண்கள் மட்டுமே சாதனையை நிலைநாட்டுகின்றார்கள். அதிகமான பெண்கள் தங்கள் திறமைகளை தங்களுக்குள் மறைத்து புதைத்து இலைமறை காயாக இருந்து விடுகின்றார்கள். அத்தகையவர்களைத் தட்டிக் கொடுத்து ஊக்குவிப்பு அளிக்க வேண்டும்.

சில பெண்கள் தம் திறமை மூலம் தங்களது இலட்சியத்தை அடைவதற்கு முயற்சிக்கிறார்கள். அந்த இலட்சியத்தையே வாழ்க்கையின் குறிக்கோளாகவும் கொள்கிறார்கள். ஆனால் அதைச் சிலர் அடக்கி அவர்களது கனவுகளை இலட்சியங்களை முடக்கி தடையென்னும் வேலியைப் போடுகிறார்கள்.

ஆண்கள் உயர உயரச் செல்லும் போது "பெண்களையும் உயர்த்த வேண்டும்" என்ற எண்ணப்பாட்டை உருவாக்க வேண்டும். ஆணுக்குப் பெண் நிகர் என்ற கருத்தை ஏற்று அவர்களுக்கு மதிப்பளிக்கப் பழக வேண்டும். பெண்கள் நாட்டின் கண்கள் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

நவீன யுகத்தில் காலடி எடுத்து வைத்திருக்கும் இந்தக் காலத்தில் திறமை, ஆளுமை, தற்துணிவோடு தலைநிமிர்ந்து நிற்கும் பெண்களின் உழைப்பையும் முயற்சியையும் தட்டிக் கொடுத்து முன்னகர்த்திச் செல்ல வேண்டிய பொறுப்பு இந்தச் சமூகத்தின் கைகளிலேயே இருக்கின்றது.

அதேநேரம் பெண்களும் மூடநம்பிக்கைகளிலிருந்து விடுபட்டு முயற்சி எனும் மூலதனத்தைக் கொண்டு உயர்ச்சி என்னும் படிகளை நோக்கி முன் நகர முயலுங்கள்.





# வேண்டாம் தலைவிரி கோலம்

பெண்கள் தலைவிரி கோலமாக இருப்பது ஆகாது. இந்த அமங்களமான தோற்றம் ஆகாது என்று பெரியோர்கள் கூறிக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால் பெண்களோ அதுதான் நாகரிகம், கவர்ச்சி, அழகு என்று எங்கும் எப்போதும் தலைவிரி கோலமாகத் திரிகின்றனர்.

திருமணம், புதுமனைப் புகுதல் போன்ற சுபநிகழ்ச்சிகளிலும் சம்பந்தப்பட்ட பெண்களே தலை விரித்தபடி நிற்கிறார்கள். ஆலயங்களில் தெர்ப்பை அணிந்து உபயம் செய்கின்ற பெண்களும் தலைவிரிகோலமாக நிற்கின்றனர். ஆலய நிர்வாகங்கள், ஆண்கள் மேலாடை இன்றிச் செல்லவேண்டும் என வலியுறுத்துவது போன்று ஆலயத்துக்குள் பெண்கள் தலைமுடியை பின்னிக் கொண்டோ, முடிந்து கொண்டோ செல்ல வேண்டும் என்று வலியுறுத்த வேண்டும். அதேபோல் எல்லா நல்லவிடயங்களுக்கும் பெண்கள் தலையை விரிக்காது அழகாக வாரிப் பின்னலிட்டால் பார்ப்பதற்கும் அழகாய் இருக்குமல்லவா?

கே.சுப்பிரமணியன், கொக்குவில்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் "திலகம்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

# வன்னியில் மனநோயால் பாதிக்கும் மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## ஆற்றுப்படுத்தும் உளச்சேவை உடனடித் தேவை

வவுனியா, ஓக.27

வவுனியா மாவட்டத்தில் மனநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுவதாக வவுனியா பொது வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

போரினால் ஏற்பட்ட பாதிப்புகள், பொருளாதார நெருக்கடி, கலாசார சீரழிவுகள், வேலைவாய்ப்பு இன்மை போன்ற காரணிகளால் மனதளவில் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகின்றது. இவர்கள் பின்னர் மன நோய்க்கு ஆளாகிவிடுகின்றனர்.

வவுனியா மாதாந்தம் 900 பேர் வரை மனநோய்க்கான சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் பலர் குணமடைந்த போதும் புதிய மனநோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளது.

இவற்றைக் கட்டப்படுத்துவதற்கு பல ஆற்றுபடுத்தல் மையங்கள் கிராம ரீதியில் உருவாக வேண்டும். ஒவ்வொரு குடும்பங்களுக்குள்ளும் ஆற்றுப்படுத்துநர் இன்றைய காலகட்டத்தில் அவசியம் தேவைப்படுகின்றனர்.

வவுனியா, ஓமந்தை, செட்டிகுளம், நெடுங்கேணி, நொச்சிமோட்டை, புளியங்குளம், பூந்தோட்டம் உட்பட பல்வேறு பிரதேசங்களில் இருந்து நோயாளிகள் இனம் காணப்பட்டுள்ளனர். மேலும் முள்ளிவாய்க்கால், புதுக்குடியிருப்பு, புதுமாத்தளன், கிளிநொச்சி, மல்லாவி, துணுக்காய், மாங்குளம், முறிகண்டி போன்ற பகுதிகளில் போரினால் பாதிக்கப்பட்ட வயோதிபர்கள் தொடக்கம் இளைஞர், யுவதிகளும் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்குரிய ஆற்றுப்படுத்தும் உளச் சேவையை பல நிறுவனங்கள் வழங்க முன்வர வேண்டும். இல்லையேல் மன நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் அபாயம் ஏற்படும்.

இதனைக் கட்டுப்படுத்த மனநோய் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

(எ-402)

## ஐந்தாம் திருமுறை முற்றோதல்

யாழ். கந்தர்மடம் செல்வ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் தினமும் மாலை பூசையுடன் 5 ஆம் திருமுறை முற்றோதல் நிகழ்வு நடைபெற இருக்கின்றது.

யாழ். குடாநாட்டு ஆலயங்களில் அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதம் ஒரு திருமுறை முற்றோதல், மாதம் ஒரு கோயில் என பன்னிரு திருமுறைகளையும் முற்றோதி வருகிறது.

அந்த வகையில் இம்முறை கந்தர்மடம் செல்வநாகபூஷணி அம்மன் ஆலயத்தில் முற்றோதல் நிகழ்வு இடம்பெற இருப்பதாக இலங்கைத் திருமுறை மன்ற இணைப்பாளர் சி. கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

(3)

சத்திரச் சந்தியிலிருந்து தபாலகம் வரை

## வீதி மூடப்பட்டுள்ளதால் போக்குவரத்துக்கு சிரமம்

வீதி அகலிப்பு புனரமைப்புக்காக கே.கே.எஸ். வீதியில் சத்திரத்துச் சந்தியில் இருந்து தபாலக சுற்று வட்டம் வரையான பகுதி மூடப்பட்டதால் நகருக்கு வருகை தரும் வாகனங்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டன.

இந்தப் பிரதான வீதி எதுவித முன்னறிவித்தலும் இன்றி சடுதியாக மூடப்பட்டதால் நகருக்கான உள்ளகப் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாது வாகனங்கள் சிரமப்பட்டன.

குறிப்பாக தபாலக சுற்று வட்டத்தில் இருந்து புல்லுக்குளம் வரையான வீதியும், அரைகுறையாகப் புனரமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இப் பகுதியினூடாகப் போக்குவரத்தை மேற்கொள்வதில் வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த வீதியின் புனரமைப்புப்பணி கடந்து மூன்று வாரங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் இப்பணிகள் யாவும் ஆமை வேகத்திலேயே இடம்பெற்று வருகின்றன.

தனியார் பஸ்தரிப்பிடம், பாரவூர்தி தரிப்பிடம் மற்றும் மீன்சந்தை, அரச தனியார் நிறுவனங்கள் அமைந்துள்ள பண்ணைக்குச் செல்லும் இந்த வீதியின் புனரமைப்புப் பணியின் தாமதத்தால் போக்குவரத்தை சீராக மேற்கொள்ளமுடியாது மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

(3-17)

## பண்ணிசை வகுப்பு

யாழ்ப்பாணம் சிவத்தொண்டன் நிலையத்தின் ஆதரவுடன் அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடத்தும் இலவசத் தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்பு சிவத்தொண்டன் நிலைய கொழும்புத்துறை மகளிர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

பிரதி செவ்வாய்க்கிழமை தோறும் மாலை 5 மணிக்கு நடைபெற்றுவரும் இந்த வகுப்புகள் வட இலங்கை சங்கீத சபையினதும் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினதும் பாடவிதானத்துக்கு அமைவாக ஆசிரியர் கே.எஸ்.ஆர். திருஞான சம்பந்த மூர்த்தி ஓதுவாரால் கற்பிக்கப்படுகின்றது.

இருபாலாரும், மாணவர்களும் கலந்து கொள்ளலாம் என மன்ற அமைப்பாளர் சி. கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார். (3)



செல்வச் சந்நிதி ஆலய பூங்காவனத் திருவிழா நேற்று நடைபெற்றது. இதன்போது பக்தர்கள் புடைசூழ சந்நிதியான் உள்வீதி வலம் வருகிறார். (3-8)

## மது விற்பனைக்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஓக.27

யாழ். மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 3 ஹோட்டல்களுக்கு மட்டுமே மது விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வடமாகாண மதுவரி ஆணையாளர் கிறிஸ்ரி ஜோசப் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கும்போது:-

கடந்த 3 வருடகாலமாக மதுபானம் விற்பனை செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறை மஹிந்த சிந்தனையின் கீழ் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உல்லாசப் பயணிகள் வருகை அதிகரிப்பு மற்றும் மதுப் பிரியர்களின் தேவையைக் கருத்தில்கொண்டு உல்லாசப் பிரயாண சபை அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல்கள் சிலவற்றுக்கு மது விற்பனைக்கான அனுமதி வழங்குமாறு கோரியிருந்தன. இதற்கமைவாக பத்துக்கும் மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல்கள் விண்ணப்பம் செய்திருந்தன.

எனினும் பொதுமக்களின் நலன், இடச்சூழல், மதுவரித் திணைக்களத்தின் சட்டக்கோவைகளுக்கு உட்பட்டதாக யாழ். மாவட்டத்தில் 3 ஹோட்டல்களுக்கு மட்டும் மதுவிற்பனைக்கான அனுமதிப் பத்திரம் வழங்கக் கூடியதாக இருந்தது என அவர் மேலும் தெரிவித்தார்.

(3-14)

## நூலக வலுவூட்டல் திட்டத்தில் பயன்பாட்டுக்கு புதிய நூல்கள்

யாழ்ப்பாணம், ஓக.27

நூலக வலுவூட்டல் நிகழ்வின் 25 ஆவது செயற்றிட்டமாக கோண்டாவில் பொது நூலகத்தால் புதிய வரவு நூல்கள் பொதுமக்களின் பாவனைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி சபையால் 2012 ஆம் ஆண்டில் நூலகங்களை வலுவூட்டல் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட கோண்டாவில் பொதுநூலகம் 25 ஆவது நிகழ்ச்சித் திட்டத்தை நடத்தியுள்ளது.

இதற்கமைவாக சிறுவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என அனைவரும் பயன்பெறக் கூடிய புதிய நூல்களை நூல் ஆர்வலர்களின் பயன்பாட்டுக்கு விட்டுள்ளது. இதனை நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பொதுமக்கள் பயன்படுத்தலாம் என நூலகர் தெரிவித்தார்.

(3-14)

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை
வருடாந்த மகோற்சவம் – 2012
சப்ப[illegible]த் திருவிழா
பத்தாம் நாள்]



அருள்பெ[illegible]தல் என்றும் முக்தியே
என் திசைக்கும் தாயானவளே
தெல்லியூர் துர்க்கையம்மையே
சிங்கமேறும் சிங்காரவல்லியே
சிவனார் மனமகிழ் தேவியே
அஞ்ஞானம் அகற்றும் ஆரணங்கே
அடியார்க்கு ஈடேற்றம் அளிப்பவளே
ஆதி பராசக்தி அம்மையே
ஆதி அந்தம் அற்றவளே
ஆதி சிவனார் அன்பு சக்தியே-உன்
அருள் பெறுதல் என்றும் முக்தியே.
சொ.தர்மகுலசிங்கம்
நாயன்மார்கட்டு
விளம்பர அனுசரணை:
தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் மற்றும்
TELLI GROUP
விளையாட்டு உபகரணம் மற்றும் பாடசாலை
உபகரணம் விற்பனையாளர்கள்
கே.கே.எஸ் றோட், தெல்லிப்பழை.
(சி/2439)(5-6-7)

## மது பாவனைக்கு எதிரான சுவரொட்டிகள்

வடமராட்சி, ஓக.27

மதுபாவனைக்கு எதிரான சுவரொட்டிகள் வடமராட்சிப் பிரதேசத்தில் முக்கிய இடங்கள் பலவற்றில் ஒட்டப்பட்டுள்ளன.

அபிவிருத்தியின் ஓரங்கமான ஹெல்த் லங்கா என்ற அமைப்பினால் ஒட்டப்பட்டுள்ள இச் சுவரொட்டியில் மதுசாரத்துக்கு மாறுவதை இந்தப் பரம்பரையுடன் நிறுத்துவோம்! 'நாட்டையே ஏமாற்றும் மதுப்பாவனையின் அநீதிகளை எதிர்ப்போம்'! ஆகிய இரு வாசகங்கள் காணப்படுகின்றன.

வர்ணத்திலான இந்தச் சுவரொட்டிகள் தமிழ்,சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் தனித்தனியே ஒட்டப்பட்டுள்ளன.

வடமராட்சியின் முக்கிய நகர்ப் பகுதிகளான பருத்தித்துறை, மந்திகை, நெல்லியடி ஆகிய இடங்களில் இந்தச் சுவரொட்டிகள் தாராளமாக ஒட்டப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. (3-8)

தொண்டைமானாறு
ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன்
தேவஸ்தானம் வருடாந்த
மகோற்சவம் – 2012
பதினொராம் திருவிழா



பாராயோ சந்நிதியில் முருகா
எந்நிதிக்குப் போனாலும் முருகா -செல்வச்
சந்நிதிக்கு வரவேண்டும் முருகா
வாராயோ வீதியெங்கும் முருகா- உந்தன்
திரு நாமம் ஒலித்திடவே முருகா
வங்கக் கடல் அருகினிலே முருகா -நீயும்
தங்கமென ஜொலிக்கின்றாய் முருகா
எங்கெங்கு இருந்தாலும் முருகா- செல்வச்
சந்நிதிக்கு தனிப் பெருமை முருகா
பாவரன்- வவுனியா.
அனுசரணை:
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
உடுப்பிட்டி
021 226 3342, 021 226 4036



யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவரும் மேசைப் பந்தாட்டப் பயிற்சிமுகாமில், மேசைப்பந்தாட்ட நுணுக்கங்கள் தொடர்பாக பயிற்சியாளர் றொசான் சிறிசேன வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் விளக்கமளிக்கின்றார்.(23-86)

## மேசைப்பந்தாட்டப் பயிற்சி முகாம் யாழில் நேற்றுமுன்தினம் ஆரம்பம்



வலி. வடக்கு, ஓக. 27

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான மேசைப் பந்தாட்ட பயிற்சி முகாம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் ஆரம்பமாகியது.

யாழ். மாவட்ட பாடசாலைகள் மேசைப்பந்தாட்ட சங்கமும், இலங்கை பாடசாலைகள் மேசைப்பந்தாட்ட சங்கமும் இணைந்து இந்த பயிற்சி முகாமை ஏற்பாடு செய்துள்ளன. நான்கு நாள்கள் தொடர்ச்சியாக நடைபெறவுள்ள இந்த பயிற்சி முகாமில் 12,15, 17, 19 மற்றும் 21 வயதுப் பிரிவுகளைச்சேர்ந்த வீர, வீராங்கனைகள் எழுபத்தைந்து பேருக்கு மேல் கலந்து கொண்டு பயிற்சி பெறுகின்றனர்.

இவர்களுக்கான பயிற்சிகளை இலங்கை மேசைப்பந்தாட்ட அணியின் தலைவரும் மேசைப்பந்தாட்டத்தில் இலங்கையிலேயே முதற்தர வீரராக இருப்பவருமான றொசான் சிறிசேன நடத்துகின்றார்.

இந்த பயிற்சி முகாமில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, உரும்பராய் இந்துக் கல்லூரி, ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, சென். ஜோன்ஸ் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலை மேசைப் பந்தாட்ட அணிகளின் வீர, வீராங்கனைகளே கலந்து பயிற்சி பெறுகின்றனர். (ங-23-86)

### டொனால்ட் கணேசகுமார் வெற்றிக் கிண்ணம்

# அரையிறுதிக்கு சென்றலைட்ஸ்



யாழ்ப்பாணம் , ஓக.27

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் டொனால்ட் கணேசகுமார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் காலிறுதி ஆட்டம் ஒன்றில் சென்றலைட்ஸ் அணி வெற்றி பெற்றுள்ளது. இந்தப் போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பிரசாத் 57 ஓட்டங்களையும், ஜேம்ஸ் ஜான்சன் 50 ஓட்டங்களையும், ஜெரிக் துஷாந் 28 ஓட்டங்களையும், எட்வேட் எடின் 24 ஓட்டங்களையும், வதுசனன் 23 ஓட்டங்களையும், அழகன் 22 ஓட்டங்களையும், ஜெனோசன் ஆட்டமிழக்காது 18 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் ஜொலிஸ்ரார் அணிசார்பாக முரளிதரன் 6 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 48 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ஜனார்த்தனன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 35 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், மணிவண்ணன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 28 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினையும், செந்தூரன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 28 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினையும், மதுசன் 5 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 34 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினையும் வீழ்த்தினார்.

பதிலுக்கு 270 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்கில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 44.1 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 217 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

இதனால் சென்றலைட்ஸ் 52 ஓட்டங்களால் வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது.

இதில் நிரஞ்சன் 74 ஓட்டங்களையும், ஜனார்த்தனன் 41 ஓட்டங்களையும், மணிவண்ணன் 15 ஓட்டங்களையும், உமாதரன் 16 ஓட்டங்களையும், அருண்குமார் 14 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பாக வதுசனன் 6 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 34 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், கோகுலன் 9.1 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 35 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் மயூரன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 31 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், சாள்ஸ் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 30 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.(ங-23)

# இன்றைய ஆட்டங்கள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ்தொழிற்சாலை ஆதரவுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு-

பி.ப. 3.30 மணி

டைமன்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் நெடியகாடு விளையாட்டுக்கழகம்

பி.ப. 4.30 மணி

ரெட்ரேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் பொலிகை பாரதி விளையாட்டுக்கழகம்.

# காலிறுதியில் திக்கம் அணி நவஜீவனை வீழ்த்தியது

யாழ்ப்பாணம்,ஓக.27

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளையாட்டுக்கழகம், 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரை நடத்தி வருகிறது. நேற்று முன்தினம் சனிக்கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற காலிறுதியாட்டம் ஒன்றில் திக்கம் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் திக்கம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவஜீவன் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் பலத்த போராட்டத்தின் பின்னர் நவஜீவன் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வென்று அரையிறுதிக்கு முன்னேறியது.

(ங-23)

# இளந்தளிர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம் , ஓக.27

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் இளந்தளிர் விளையாட்டுக் கழகம் நடத்தும் மறைந்த கழக உறுப்பினர்கள் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு-

கிராஞ்சி சென்.தாரகை விளையாட்டுக்கழக அணிக்கும், வலைப்பாடு சென்.ஆன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் இரு அணியினரும் தலா ஒரு கோல்களைப் பெற்றதினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங் கப்பட்டது.

இதில் வலைப்பாடு சென். ஆன்ஸ் விளையட்டுக் கழகம் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும், வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

(23)




வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட வவுனியா சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை அணி வீராங்கனைகள், அதிபர் எஸ்.ஜேசுநேசன் மற்றும் பயிற்றுவிப்பாளர் வி.வி.ஜெயநேசன், பொறுப்பாசிரியருடன். (23)

# இளைஞர் உலகக் கிண்ணம் இந்தியாவுக்கு



ஆட்டநாயகனாக அணித்தலைவர் உன்முக் சந்த் தெரிவானார்.



இளைஞர் உலகக் கிண்ணப்போட்டியில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி 6 இலக்குகள் வித்தியாசத்தில் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது இந்திய அணி. 19 வயதுக்குட்பட்டோருக்கான 8ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் ஆஸ்திரேலியாவில் நடைபெற்றது.

டவுன்ஸ்வில்லியில் நேற்று நடைபெற்ற இறுதிச்சுற்றில் 6ஆவது இடத்திலுள்ள இந்திய அணி, முதலிடத்தில் உள்ள நடப்புச் சம்பியனான ஆஸ்திரேலியாவுடன் மோதியது.

நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி களத்தடுப்பை தெரிவு செய்தது. இதன் மூலம் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலியா அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் முடிவில் 8 இலக்குகளை இழந்து 225 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் வில்லியம் போசிசிஸ்டோ ஆட்டமிழக்காமல் 6 பவுண்டரிகளுடன் 87 ஓட்டங்களும், ஆஸ்டன் டர்னர் 43 ஓட்டங்களும், டிராவிஸ் ஹெட் 37 ஓட்டங்களும் பெற்றனர். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் இந்திய அணி சார்பாக சந்தீப் சர்மா 4 இலக்குகளை கைப்பற்றினார்.

இதனையடுத்து 226 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி 47.4 பந்துப்பரிமாற்றத்தில் 4 இலக்குகளை இழந்து 227 ஓட்டங்கள் எடுத்து 6 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது.

இதன்மூலம் இந்திய அணி மூன்றாவது முறையாக 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றியது.

தொடக்க வீரராக களமிறங்கிய அணித்தலைவர் உன்முக் சந்த் ஆட்டமிழக்காமல் 7 பவுண்டரிகள், 6 சிக்சர்களுடன் சதம் கடந்து 111 ஓட்டங்களும், பின்பு களமிறங்கிய சுமித் பட்டேல் ஆட்டமிழக்காமல் 4 பவுண்டரிகளுடன் அரைசதம் கடந்து 62 ஓட்டங்களும் எடுத்தனர்.

(16)



போட்டியின் நாயகனாக றுகுண றொயல்ஸ் அணியின் நசீர் ஜம்ஷத் தெரிவுசெய்யப்பட்டார்.

ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் தொடரின் பஸ்நாஹிர கிரிக்கெட் டண்டி அணிக்கும் றுகுண றொயல்ஸ் அணிக்கும் இடையே இடம்பெற்ற ஆட்ட நேரத்தில் றிலீ ரொஸோவ் 31 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது லசித் மலிங்காவின் பந்து அவரின் முகத்தைப் பதம்பார்ததில் படுகாயமடைந்து மைதானத்திலிருந்து வெளியேறியிருந்தார்.

# பஸ்நாஹிரவை வீழ்த்தியது றுகுண

ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் தொடரின் பஸ்நாஹிர கிரிக்கெட் டண்டி அணிக்கெதிரான போட்டியில் றுகுண றொயல்ஸ் அணி 4 இலக்குகளால் வெற்றிபெற்றது. இலங்கையில் நடைபெற்று வரும் ஸ்ரீலங்கா பிறீமியர் லீக்(எஸ்.எல்.பி.எல்) தொடரின் 17ஆவது லீக் போட்டியில் பஸ்நாஹிர கிரிக்கெட் டண்டி, றுகுண றொயல்ஸ் அணிகள் மோதின.

கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பஸ்நாஹிர கிரிக்கெட் டண்டி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பஸ்நாஹிர கிரிக்கெட் டண்டி அணி 20 பந்துப்பரிமாற்றத்தில்4 இலக்குகளை இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றது.



துடுப்பாட்டத்தில் பஸ்நாஹிர கிரிக்கெட் டண்டி அணி சார்பாக கமரன் போர்கஸ் 40 ஓட்டங்களும், றிலீ ரொஸோவ் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் றுகுண றொயல்ஸ் அணி சார்பாக வகாப் றியாஸ் 2 இலக்குகளை வீழ்த்தினார்.

இதனையடுத்து 124 என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய றுகுண றொயல்ஸ் அணி 16.4 பந்துப்பரிமாற்றத்தில் 6 இலக்குகளை இழந்து வெற்றியைத் தனதாக்கிக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் பஸ்நாஹிர கிரிக்கெட் டண்டி அணி சார்பாக நசீர் ஜம்ஷத் ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங்களையும், ஆரொன் ஃபின்ச் 28 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் பஸ்நாஹிர கிரிக்கெட் டண்டி அணி சார்பாக மகமதுல்லா 3 இலக்குகளையும், ரங்கன ஹேரத் 2 இலக்குகளையும், திலகரட்ண டில்ஷான் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

(16)

# தொடர்ந்தும் விளையாட ஆசை

தொடர்ந்தும் சர்வதேசப் போட்டியில் பங்குபற்ற ஆவலாக இருப்பதாக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவரும், அந்த அணியின் சிரேஷ்ட டெஸ்ட் துடுப்பாட்ட வீரருமான றிக்கி பொன்டிங் தெரிவித்துள்ளார். அடுத்தாண்டு இடம்பெறவுள்ள ஆஷஷ் தொடரில் பங்குபற்றும் ஆவல் தனக்குள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் பயிற்றுவிப்புப் பணியில் ஈடுபடும் ஆவல் தனக்குள்ளதாகத் தெரிவித்த றிக்கி பொன்டிங், அத்தோடு வீரர்களை அடுத்த தரத்திற்கு பயிற்றுவிப்பதிலும் தனக்கு ஆவலுள்ளதாகத் தெரிவித்தார். கழக மட்ட, மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றும் வீரர்களை சர்வதேச மட்டத்திற்குத் தயார் படுத்தும் பணியில் எதிர்காலத்தில் ஈடுபட விரும்புவதாக அவர் தெரிவித்தார்.

ஒரு வீரர் உள்ளூர் மட்டத்திலிருந்து சர்வதேச மட்டத்திற்கு விளையாடத் தயாராகும் போது அவருக்குத் தேவையான மாற்றங்கள், அந்த வீரரின் மனரீதியான மாற்றங்கள் தொடர்பாகத் தனக்குப் போதிய அறிவிருப்பதாகக் கருதுவதாகத் தெரிவித்த பொன்டிங், அதன் காரணமாக பயிற்றுவிப்புப் பணிக்கு ஆவலாக உள்ளதாகத் தெரிவித்தார்.

எனினும் தற்போதைய நிலையில் சர்வதேசப் போட்டியில் தனது கவனத்தைச் செலுத்த விரும்புவதாகத் தெரிவித்த றிக்கி பொன்டிங், குறிப்பாக இங்கிலாந்து அணியிடம் இரண்டு தடவைகள் ஆஷஷ் தொடரைத் தோற்றமை குறித்த காயங்கள் காணப்படுவதாகவும், எனவே அடுத்த ஆஷஷ் தொடரில் பங்குபற்றுவதை ஆவலாக எதிர்பார்த்துக் காணப்படுவதாகவும் தெரிவித்தார். (5)

## நாவற்குழி மேற்கு சித்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தின் 7 ஆம் நாள் மாம்பழத்திருவிழாவான இன்று (27.08.2012) இரவு



* வான வேடிக்கை
* நாதஸ்வர மேதை பரந்தாமன் குழுவினரின் மேளக் கச்சேரி.
* அகில இலங்கை புகழ் அபிஷேத்ரா நடனப்பள்ளியின் இயக்குநர் செல்வி. திவ்வியா சிவநேசனும் அவர்தம் மாணவியரும் வழங்கும் "சமர்ப்பணம்" பரத நடன விருந்து
* இன்னிசை புகழ் யாழ் ரமணன் குழுவினரின் இன்னிசைக் கச்சேரி.

(சி/2946)(3.14) 7 ஆம் திருவிழா உபயகாரர்.

## 10 நாள்களில் சாத்தியமாகும் visit visa, Business visa

கனடா, ஆஸ்திரேலியா, நோர்வே, U.K , மலேசியா இன்னும் எந்த நாட்டிற்கும் 10 நாள்களில் 3 மாத, 6 மாத, ஒரு வருட விசாக்கள் பெற ஆலோசனை வழங்கப்படும்.

சட்டரீதியான ஆலோசனைகளிற்கு
(புதன் கிழமைகளில் விடுமுறையாகும்)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் (PV 82703)
(முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்)
இல.37, சிவகுருநாதர் லேன்,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
0212219016, 0212219514 (22241)(3.6)



## மணல் விற்பனைக்குண்டு

கட்டட வேலைக்கும், பூச்சுவேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.

**4 டிரக்டர் - 19500/=**

தொடர்புகளுக்கு: ரமேஸ்
072 2694462
(21718)

## பாரஊர்திகள் தேவை

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு, புத்தளம், அனுராதபுரம், கெப்பரிகொலாவ, பதவியா, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு போன்ற இடங்களுக்கு சிமெந்து ஏற்றிச் செல்ல பாரஊர்திகள் தேவை. ஏற்றிச்செல்லும் இடங்களுக்கேற்ப கூலி வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: Eswarabagawaan&Company,
No.91, Stanley Road, Jaffna.
T.P.0774787690 / 0773948917 / 021 222 7603 (22171)(2-7-6)

## கணக்கு வேலை தெரிந்தவர் தேவை

கடை ஒன்றிற்கு கணக்கு வேலையில் அனுபவம் உள்ளவர் தேவை. கணினிஅறிவுடையவர், அனுபவமுள்ளவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும் (c/2947)

தொடர்பு:- 077 831 4201

## மரண அறிவித்தல்



*திருமதி ஏபிரகாம் ஜோசப் விக்ரோறியா*
*(ராசாத்தி - ஒய்வுபெற்ற மருத்துவ மாது* Midwife *)*

யாழ்ப்பாணத்தைப்பிறப்பிடமாகவும் இல.56, ஒடக்கரை வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஏபிரகாம் ஜோசப் விக்ரோறியா கடந்த 25.08.2012 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி ஜோசப் அந்தோனியாப்பிள்ளையின்(ரொவி) அன்பு மகளும் காலஞ்சென்ற ஏபிரகாம் ஜோசப்பின் அன்பு மனைவியும் மகேஸ், செல்வராணி காலஞ்சென்றவர்களான குமாரத்தி, பிரான்சிஸ் சேவியர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தேவசகாயம்பிள்ளை, அன்ரனிதுரைரெட்ணம், காலஞ்சென்றவர்களான பீலிக்ஸ் ஜோர்ஜ், பிலோமினா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜோசப் அன்ரனி (கொழும்பு), ஜோசேப் ஜேக்கப் (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர், யாழ்போதனா வைத்தியசாலை), அம்புறோசெலீனா-திரவியம் உதயகுமார்- பியாற்றிஸ், ஜோசப் அலெக்சாண்டர் ஆகியோரின் அன்புத்தாயாரும் பேனடேட்மணி, லொறேற் சிறானி-ஜேக்கப், மோசஸ் திரவியம் (ஓய் வுபெற்ற சிறைச்சாலை அதிகாரி), மனுவல் அன்ரன் உதயகுமார் (அஞ்சல் அலுவலகம்- யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியும் செங்கமலன், நன்சிநல் அமிர்தா, வளர்மதன், அஜித் எட்சன், விநோத் ராஜ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.08.2012) திங்கட்கிழமை பி.ப 3 மணிக்கு மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு தூய கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.56,ஒடக்கரை வீதி, குருநகர்,*
*யாழ்ப்பாணம்.* (22247) (15-14)

*தகவல்:*
*குடும்பத்தினர்.*

புதிய பிரிவுகள் ஆரம்பம்

## Chartered Accountancy

Foundation level & Intermediate level
(CAB-I & CAB-II)
Medium :- English & தமிழ்
Minimum Requirement :- GCE A/L 3 Passes
** இம்முறை A/L பரீட்சை எழுதிய மாணவர்களும் பதிவினை மேற்கொள்ளலாம்

வங்கியில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான
வங்கியியல் கற்கைநெறிகள்

## CBF,DBF

அடிப்படைத்தகைமைகள்
G.C.E.( O/L) 06 PASSES WITH 05 Credits including Maths/Commerce & Accounts, and Language (Tamil/English)

## aat (Srilanka)

Foundation level & intermediate level & Final
புதிய பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளன

மருந்தாளர் (வெளிவாரி) பரீட்சை
PHARMACIST (EXTERNAL) Examination course
(Cylon Medical College Council, University of Colombo)
கல்வித்தகமைகள் :- GCE O/L ஆங்கிலம் சித்தி
GCE A/L [illegible]

Further Detail
Director
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.0212223382 (c/2573)

## MA, Mcom, MBA, Msc PG Diploma

காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை) வெளிவாரி

* மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான (Mayபரீட்சை எடுப்பதற்கான) பதிவுகள் கோரப்பட்டுள்ளன.

**MA** இல் :- பொருளியல், வரலாறு, அரசியல், பொதுநிர்வாகம், சமூகவியல், தமிழ், ஆங்கிலம், சமயமும் தத்துவமும் இதழியலும் தொர்பாடலும் (**Journalism & mass com**) ஆகிய பாடங்களில் ஒன்றினை தெரிவு செய்ய முடியும்.

**Mcom** இல் :- வர்த்தகம் வங்கியியல், கூட்டுறவு ஆகியவற்றில் ஒன்றினை தெரிவு செய்ய முடியும்.

**PG Dip** :- ஒரு வருட கற்கை நெறியாக, **Management, Marketing Management, Computer Application, Hospital Management, Journalism mass communication** ஆகிய பாடங்களில் ஒன்றினை தெரிவு செய்ய முடியும்.

**குறிப்பு 1** :- மேற்குறிப்பிட்ட பட்டங்கள் யாவும் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.

**குறிப்பு 2** :- பரீட்சைகள் யாவும் புதிய உயர்கல்லூரிவளாக பரீட்சை மண்டபத்தில் நடைபெறுகின்றன

* பதிவு முடிவு திக்தி :- 15.09.2012 ஆகும்

**முக்கிய குறிப்பு** :- மார்கழி மாதம் பரீட்சை எடுப்பவர்களுக்கான **MA, Mcom, Msc, MBA, Bsc, BA, Bcom** பரீட்சை விண்ணப்பங்கள் பல்கலைக் கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.

பரீட்சை விண்ணப்பங்களை 30.08.2012 இக்கு முன்னர் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.
(சி/2913)(3.6.7)

யாழ் இணைப்பாளர்
காமராசர் பல்கலைக்கழகம்
தொலை பேசி இல:- 0212228148

புதிய உயர் கல்லூரி
ஆரிய குளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

ஆங்கிலத்தின் அறிவுக் களஞ்சியம் என போற்றப்படும்

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

பெருமையுடன் அறிமுகப்படுத்தும்

## Young Learners for English (YLE)

[வயதெல்லை : 7 - 12]

* British Council உடன் இணைந்து நடாத்தும் கற்கை நெறி
* இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்
* Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.

மாணவர்களின் ஆங்கில அறிவிற்கான சர்வதேச அடித்தளமாக இது கருதப்படுவதால் இன்றே உங்களை பதிவு செய்து கொள்ளுங்கள்

Batch I 27.08.2012

Head Office:
30 -1/14,
w.A.De Silva Mw.
Colombo - 6
Tel: 2500207

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna.
Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane,
Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam,
Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.